ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியிடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி"

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு"

"நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—௯. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஞூ ஆடிமீ ௨௰ (4-8-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—ரு.


## தோத்திரம்.

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி அருவுருவத் தன்மை நாமம்
ஏதுமின்றி யெப்பொருட்கும் எவ்விடத்தும் பிரிவறநின் றியக்கஞ் செய்யுஞ்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ நிறைவான துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே நினைவாகச் சிந்தை செய்வாம்.

—தாயுமான சுவாமிகள்.

# பத்திரிகைப் பெண்.

அறுசீர் விருத்தம்.

1 காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்தபத் திரிகைப் பெண்ணே!

2 அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப்பெண் ணே!உன்
நலம்காணார் ஞாலம் காணார்.

3 கடும்புதர் விலக்கிச் சென்று
களாப்பழம் சேர்ப்பார் போலே
நெடும்புவி மக்கட் கான
நினைப்பினிற் சென்று, நெஞ்சிற்
படும்பல நுணுக்கம் சேர்ப்பார்
படித்தவர் அவற்றை யெல்லாம்
"கொடும்" என அள்ளி உன்தாள்
கொண்டார்க்குக் கொண்டுபோவாய்.

4 வானிடை நிகழும் கோடி
மாயங்கள், மாநி லத்தில்
ஊனிடை உயிரில் வாழ்வின்
உட்புறம் வெளிப் புறத்தே,
ஆனநற் கொள்கை, அன்பின்
அற்புதம் இயற்கைக் கூத்துத்,
தேனிதழ் தன்னிற் சேர்த்துந்
தித்திக்கத் தருவாய் நித்தம்.

5 சிறுகதை ஒன்று சொல்லிப்
பெருமதி யூட்டும் தாளே
அறைதனில் நடந்த வற்றை
அம்பலத் திழுத்துப் போட்டுக்
கறையுளம் தூய்மை செய்வாய்!
களைப்பிலே ஊக்கம் பெய்வாய்!
நிறைபொருள் ஆவாய் ஏழை
நீட்டிய வெறுங் கரத்தே.

6 ஓவியம் தருவாய்! சிற்பம்
உணர்விப்பாய்! கவிதை யூட்டிக்
காவியம் தருவாய்! மக்கள்
கலகல வெனச் சிரிப்பு
மேவிடும் விகடம் சொல்வாய்!
மின்னிடும் காதல் தந்து
கூவுவாய்! வீரப் பேச்சுக்
கொட்டுவாய் கோலத் தாளே.

7 தெருப்பெருக் கிடுவோ ருக்கும்
செகம்காக்கும் பெரியோர்க் கும்,கை
இருப்பிற்பத் திரிகை நாளும்
இருந்திடல் வேண்டும்! மண்ணிற்
கருப்பெற் றுருப்பெற் றிளநடைபெற்
றுப்பின்னர் ஐந்தே ஆண்டு
வரப்பெற்றோர் பத்திரிகை வாசித்தல்
உண்டென்றால் வாழ்க்கை பெற்றார்!

—"கவிதாமண்டலம்."

நல்லொழுக்கப் பயிற்சியே இன்பந்தரும். நிலையான இன்பத்தைப் பெற்றவன் துன்பமடையான்.

# "ஐய வினா விடைகளின் ஆராய்ச்சி."

[திரு. க. தம்பாபிள்ளை அவர்கள், ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை, கோக்குவில் மேற்கு]

"ஈழகேசரி"யில் 21-7-35-ல் வெளிவந்த ஐயவினாவையும், 28-7-35-ல் வெளிவந்த அதன் விடையினையும் கண்ணுற்றேம். தமிழாசிரியரும் மாணவரும் உண்மைப் பொருளைக் காணற்குரிய சில நெறிகளைக் காட்டி உண்மையை உய்த்துணரும்படி அவ்வையவினாக்கட்கு விடையாகச் சில கூறிச் செல்வதே எமது நோக்கம். அன்றிப் பிறர்மேற் குற்றங் கூறலன்று.

தொகைநிலைத்தொடர், தொகாநிலைத் தொடர்களில் இதுவோ? அதுவோ? என ஐயந் தோன்றியக்கால், புணர்ச்சிவிதி, முடிக்குஞ் சொல்லோடியையுமாறு, அதிகரித்த பொருட்கியையுடைமை முதலிய பல கருவிகளால் ஒருதலை துணியப்படும். இவ்வாற்றை முறையே பின்வரும் உதாரணங்களால் விளங்கலாம். உ-ம்:

1. இப்பொன்றொடிக்குரியது.
2. (அ) இப்பொற்றொடி நின்கைக்கியாப்புடையது.
   (ஆ) பொற்றொடி வந்தாள்.
3. தன் பொற்றொடியை விற்றான் அந்தணர்க்கு.

இவற்றின் விளக்கம் வருமாறு:—

1. பொன்றொடி: இது எழுவாய்த் தொடரே; மற்று வேற்றுமைத்தொகையுமன்று; அன்மொழித் தொகையுமன்று என்பது நிலைமொழியீறு இயல்பாதலாகிய புணர்ச்சியினால் துணியப்படும். என்னை? "ணன வல்லினம் வரட் டறவும் பிறவரின், இயல்புமாகும் வேற்றுமைக் கல்வழிக், கனைத்து மெய்வரினு மியல்பா கும்மே" என்பதோத்தாகலின. [இப்பொன்தொடி செய்தற்குரியது]

2. (அ) பொற்றொடி: இது 3-ம்வேற்றுமைத்தொகையே; அன்மொழித் தொகையன்று. என்னை? "பொற்றொடி" என்னும் எழுவாய்ச்சொல் 'உடையது' என்னும் பயனிலைகொண்டு அதனோடு சாமானாதிகரண்யம் உடையதாகக் காணப்படுதலின. [சாமானாதி கரண்யம்—எழுவாயும் பயனிலையும் ஒரே திணை பாலிடங்களை யுணர்த்தித் தமமுள் ஒற்றுமைப்பட்டு ஒரு பொருண்மேல் நிகழ்தல்] இதனால், ஈண்டு முடிக்குஞ் சொல் ஒருதலை துணிதற்குக் கருவியாயினமை தெளிக.

(ஆ) பொற்றொடி வந்தாள்: ஈண்டுப் 'பொற்றொடி' வேற்றுமைத்தொகையன்று; அன்மொழித்தொகையே என்பதூஉம் அங்ஙனமே முடிக்குஞ் சொல்லோடியையுமாற்றால் துணியப்படுதல் காண்க.

3. "பொற்றொடி" என்னுஞ் சொல், பொற்கொல்லன் செய்தி கூறும் வழிப் பொன்வளையலையும், அரிச்சந்திரன் செய்தி கூறும் வழிப் பெண்ணையும் உணர்த்தும். அப்பொருள்கள் அதிகரித்த பொருளுக் கியைபுடைமை கருவியாக உணரப்படுவனவாமன்றி வேறல்ல. (மேலனவற்றிற்போல புணர்ச்சியும் முடிக்குஞ் சொல்லோடியையுடைமையும் கருவியாக உணரப்படுவனவல்ல என்றபடி )

இனி, இப்பத்திரிகையில் வெளிவந்த ஐயவினாக்களுக்கு விடைகூறுமுகத்தால், குறித்த பாரதச் செய்யுட் டொடர்களுக்கு அவ்விடத்திற் கியைய எவ்வாறு பொருள் கொள்ளல் தகும், எவ்வாறு கொள்ளல் தகாதென்பதை விளக்குவாம். என்னை? "பல பொருட்கேற்பின் நல்லது கோடல்" என்பது (தொல்காப்பியத்துக் கூறப்பட்ட) தந்திரவுத்தியாகலான் ['ஒரு செய்யுள் அல்லது சூத்திரம் பல பொருள் கொள்ளத்தக்கதாக அப்பொருள் பலவற்றிற்கும் பொதுப்பட நிற்பின், அப்பொருள்களிற் குற்றமுடைய பொருளை நீக்கிக் குற்றமற்ற பொருளையே கொள்ளுக' என்பது அவ்வுத்தியின் பொருள்.]

ஐயவினாக்கட்கு விடை வருமாறு:—

1. (அ) மனமலர்: இஃது எழுவாய்த்தொடரே; பண்புத்தொகையன்று. என்னை? 'உகந்து' [மகிழ்ந்து] என்னும் முடிக்குஞ் சொல்லோடு இயையத் தகுதியுடைய சொல்லாக இயைந்து, அதனைத் தனக்குப் பயனிலையாகக் கொள்ளற் கேற்புடையது மனமேயாகலின், மகிழ்தல் வினைக்குக் கர்த்தாவாதல் மனத்திற்கன்றி மலர்க்கு இயையாமையறிக. அங்ஙனமாயின், 'மலர்+உகந்து' என்ற இருசொற்களும் தம்முள் யாங்ஙனம் இயையுமோவெனின், உவமத்தொகையாக இயையுமென்பது. இதனை "மலர்போல மலர்ச்சிகொண்டு மகிழ்ந்து" என வரும் திரு. வித்துவான் அவர்களின் உரையிற் காண்க.

(ஆ) மனமலருகந்துகந்து: இஃது உவமையணியே; உருவகமெனக் கோடல் பொருந்தாது. என்னை? உருவக அணிக்கேற்ப 'மனமாகிய மலர் மகிழ்ந்து' என விரிதலால் நிலைமொழி வருமொழிகள் தம்முட் பொருட் பொருத்தமுற இயையாமையானும், உவமையணி கோடற்கேற்பவே 'மனமானது மலர்போல மலர்ச்சிகொண்டு மகிழ்ந்து' என விரிந்து நிலைமொழி வருமொழிகள் தம்முட் பொருட் பொருத்தமுற இயைதலானுமென்பது.

2. (அ) கைத்தல+மலர்; கண்+மலர்: இவை உவமத்தொகையாமன்றிப் பண்புத்தொகையல்ல. என்னை? மலரால் என்னும் மூன்றும்வேற்றுமை 'தழுவி' என்னும் வினைகொண்டு முடிந்தமையின். அதனோடு தான் கருவியாக இயையத் தகுதியுடையது கைத்தலமேயன்றி மலரன்றாகலான், மலரென்னுஞ் சொல் உவமையாகிய அடைமொழியாக நிற்பக் கைத்தலம் என்ற சொல்லே அவ்வடையினை யேற்ற விசேடியமாக நின்று நிலைமொழியிற் பொருள் சிறந்த தொகைநிலைத் தொடராம்; ஆங்கால், உவமத்தொகையென்பதன்றிப் பண்புத்தொகையெனக் கோடல் பொருந்தாமையின் என்பது. இங்ஙனமன்றிக் கைத்தலமாகிய மலர் எனப் பண்புத்தொகையாகக் கொள்ளின் வரும் இழுக்கு என்னையெனிற் கூறுதும். பண்புத்தொகையெனில், நிலைமொழி யடைமொழியாக நிற்ப வருமொழி அதனை யேற்ற விசேடியமாகக் கொள்ளப்படும். படவே மலரால் என்னும் அவ்வருமொழிக்கு முடிக்குஞ் சொல்லாக நிற்கும் 'தழுவி' என்னும் வினைக்கு [கை கருவியாதற்குப் பொருந்துமேயன்றி] மலராகிய அது கருவியாதற்குத் தகுதியின்மையினாலும், வேறு தகுதியுடைய வினைமுடிக்குஞ் சொல்லாக இன்மையினாலும், 'மலரால் தழுவி' என்னுந் தொடர் 'முயற்கோடு உண்டு' என்றாங்குப் பொருளில்லாத சொற் கூட்டமாய்த் தொடர்மொழியாகாதென்பது. வடநூலாரும் அவாய்நிலை, அண்மை, தகுதி என்னும் மூன்றோடுங் கூடிய சொற்கூட்டமே வாக்கியமாமென்றும், இம்மூன்றில் ஒன்றில்லதும் வாக்கியமாகாதென்றும் கூறினர். அல்லதூஉம், மலரால் என்பதனை அதனோடு இயையுந் தகுதியற்ற 'தழுவி' என்பதனோடு வலிந்து இயைக்கப் புகின், 'மலரால் தழுவி' என்னும் அத்தொடர் 'நீராற் சுடு' 'நெருப்பால் நனை' என்பார் கூற்றுக்களோடொத்துக் கேட்போர்க்கு நகை விளைப்பதாமென்க. (தொடரும்)

## சுன்னாகம் பிராசீன பாடசாலை

இதில் முன்போலத் தமிழும் சம்ஸ்கிருதமும் கிரமமாகப் படிப்பிக்கப்பட்டுவருகின்றன. தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் பண்டித, பால பண்டித, பிரவேச வகுப்புக்களில் படிக்கவேண்டியவர்கள் வந்து படிக்கலாம். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சம்ஸ்கிருதம் படிக்கவேண்டியவர்களும் வந்து படிக்கலாம். விரும்பினவர்கள் விபரங்களைச் சமஸ்கிருத ஆசிரியர் பிரமஸ்ரீ சிதம்பர சாஸ்திரிகளிடம் வந்து கேட்டுக்கொள்ளுக.

பிராசீனபாடசாலை, சுன்னாகம், 21-7-35. — இங்ஙனம், சி, கணேசையர், தமிழாசிரியர்.

## அகில இலங்கைத் தமிழ் வைத்திய மகாநாடு

அகில இலங்கைத் தமிழ் வைத்திய மகாநாடும் ஔடதக் காட்சியும் நிகழும் யுவ ஆவணி மீ 29-ந் உ (14-9-35) சனிக்கிழமை, 30-ந் உ (15-9-35) ஞாயிற்றுக்கிழமை, 31-ந் உ (16-9-35) திங்கட்கிழமை ஆகிய மூன்று தினங்கள்வரை, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, பரமேஸ்வாக் கலாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அத்தருணம் கொழும்பு, சுதேச வைத்திய கலாசாலை அதிபர், டாக்டர் ஏ. என். என். பணிக்கர், M. B. Ch. C. (Edin) I. M. S. (Retired) அவர்கள் தலைமை வகிக்க இசைந்துள்ளார். விபரங்களுக்கு பொதுக்காரியதரிசி, அவர்களுக்கு எழுதியறிந்து கொள்ளவும்.

எஸ் எம். பொன்னையா
L. I. M. (Madras)
பொதுக் காரியதரிசி
அ. இ. த. வைத்திய மகாநாடு
"சுதேச வைத்திய காலசாலை"
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## தமிழ் ஆசிரியர் வரைதற் தராதர பத்திரப் பரீட்சைப் பெறுபேறு.

மட்டக்களப்பு

B 1 22525 அழகையா M. J. அரசடி சாதனபாடசாலை.
B 3 17127 நல்லதம்பி S. காத்தான்குடி ஆண்பாடசாலை (மெயின்ரோட்)

நீர்கொழும்பு

N 1 11904 அந்தோனிப்பிள்ளை S. P. உடமித்த ரோமன்கத்தோலிக்க ஆண் பாடசாலை

யாழ்ப்பாணம்

J 2 21341 ஆனந்தர் S. சதாசிவ வித்தியாசாலை, அனலைதீவு.
J 5 21716 ஆறுமுகம் M. சைவ ஆசிரிய கலாசாலை, யாழ்ப்பாணம்.
J 39 21805 சபாரத்தினம் S. அரசினர் ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.
J 54 15810 சுப்பிரமணியம் A. உடுப்பிட்டி ஸ்ரேசன் மிஷன் பாடசாலை.
J 68 அர்சோலிஸ் R. இளவாலை கொன்வென்ற் ஆசிரிய கலாசாலை.
J 69 ஆசீர்வாதம் G. இளவாலை கொன்வென்ற் ஆசிரிய கலாசாலை.
J 73 மனுவேல் A. இளவாலை கொன்வென்ற் ஆசிரிய கலாசாலை.
J 80 இராமலிங்கம் M. P. உடுவில் யூனியன் ஆசிரிய கலாசாலை.
J 88 சின்னப்பு S. உடுவில் யூனி[யன்] ஆசிரிய கலாசாலை.
J 90 சின்னத்தம்பி R. உடுவில் யூனியன் ஆசிரிய கலாசாலை.
J 81 16996 சாமுவேல் E. P. கோப்பாய் C. M. S. விடுதிப் பாடசாலை.
J 83 செபஸ்தியாம்பிள்ளை R. இளவாலை ஆசிரிய கலாசாலை.
J 91 சோமுப்பிள்ளை A. இளவாலை ஆசிரிய கலாசாலை.

## சைவ வித்தியாசாலை அதிபர்கள் சங்கம்

இச்சங்கம் ஆடிமாதம் ௧௨-ந் திகதி (27-7-35) சனிக்கிழமை வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாசாலையில் திருவாளர் கா அருளம்பலம் அக்கிராசனம்வகிக்கவும் திரு. கொ. ச. சுவாமிநாதன் அவர்கள் காரியதரிசியாக அமரவும் கொண்டதாய் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது. பின் ஆரம்பகூட்டத்தில் நியமிக்கப்பெற்ற உபசபையார் தயாரித்த மேற்படி சங்கத்தின் பிரமாணங்கள் சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டன. அதில் சில மாற்றங்கள் செய்யப்பட்டபின் சபையின் அங்கீகாரம் பெற்றது.

இரண்டாவதாக உத்தியோகஸ்தர்களினதும் நிர்வாகசபை அங்கத்தவர்களினதும் நியமனம் நடைபெற்றது. அதில் கீழ்க்காணும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

அக்கிராசனர் திரு. கா. அருளம்பலம் அவர்கள். உப அக்கிராசனர் R. K. குருசாமிக் குருக்கள் அவர்கள். காரியதரிசி திரு. மு. சுவாமிநாதன் அவர்கள் (கோப்பாய்). தனாதிகாரி திரு. இ. நாகலிங்கம் அவர்கள். நிர்வாகசபை அங்கத்தவர்கள் திருவாளர்கள் த. கைலாசபிள்ளை, கொ. க. சுவாமிநாதன், வ. பசுபதிப்பிள்ளை, N. A. சின்னையாபிள்ளை (சுதுமலை) ஆகியோர். கணக்குப் பரிசோதகர் பிரமஸ்ரீ சு. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்.

பின் வரும் தீர்மானங்கள் சங்கத்தில் தீர்மானிக்கப்பட்டன.

(1) 30-ம் அதற்குக்குறைந்த சராசரியுள்ள பள்ளிக்கூடங்களுக்குத் தாபரிப்புக்காசு பிள்ளைகளுக்கு ரூபா 2-00 உம், அதற்குமேற்பட்ட சராசரியுள்ள பள்ளிக்கூடங்களுக்கு முன் இருந்தவிதமாக ரூபா 1-50 விகிதமும் கொடுக்கப்படவேண்டுமென இச்சங்கந் தீர்மானிக்கிறது.

(2) நேரே சம்பளங்கொடுக்கும் ஒழுங்கு சங்கங்களின் கீழ் இருக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் ஒருவருடைய பிரத்தியேக அதிகாரத்தின் கீழ் இருக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் ஒரே தன்மையாய் நடைபெறவேண்டுமென்று இச்சங்கந் தீர்மானிக்கிறது.

(3) தமிழ்ப் பாடசாலைகளில் கற்றுக் கொடுக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கு முழுச் சம்பளங் கொடுக்கும்படி இச்சங்கந் தீர்மானிக்கிறது.

ஈற்றில் தேவார பாராயணத்துடன் சங்கம் சமாப்தியாயிற்று.

கடித.


# அச்சு வேலைகள்

ஞாபகப்பத்திரங்கள் — சிட்டைப்பிரதிகள்
சுற்றறிக்கைகள் — தரிசனப்பத்திரங்கள்
விலைப்பட்டிகள் — சிறு விளம்பரங்கள்

பெரிய எழுத்தில்
சுவர் ஒட்டி விளம்பரங்கள்
நாடக அறிக்கைகள்
இன்னும்
இவைபோன்ற சகல அச்சுவேலைகளும், அழகாகவும் காலக்கிரமப்படியும் குறைந்த கிரயத்திற் செய்து கொடுக்கப்படும்.

வெளியூரிலுள்ளவர்கள் முற்பணமனுப்புதல்வேண்டும்

## திருமகள் அச்சியந்திரசாலை
சுன்னாகம்

| பத்திரக்கிரயம் | |
|---|---|
| இலங்கை, இந்தியா, பர்மா | ரூபா 4. |
| மலாய்நாட்டுக்கு வெள்ளி | 4. |
| சீவியசந்தா | ரூபா 40. |
| தனிப்பிரதி | சதம் 5. |
| இந்தியாவுக்கு ,, | அணா 1. |
| மலாய்நாட்டுக்கு ,, | காசு 5. |

# ஈழகேசரி

| விளம்பரவிகிதம் | |
|---|---|
| முதன்முறைக்கு | |
| ஒருகலம் | ரூபா 7-00 |
| ,, அரைக்கலம் | ,, 4-00 |
| ,, கால்கலம் | ,, 2-50 |
| அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு. | |

தொகுதி—கூ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவவரு ஆடிமீ ௨௦ உ (4-8-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—ரு.

## அபிசீனியாவின் எண்ணம் யாது?

(விவியன் மேக்)

இன்று அபிசீனியாவினை நோக்கின், அது ஆயுதம் தரித்த போர் வீரர் வாழும் ஸ்தலமெனறே எண்ணவேண்டும. வெளித்தோற்றத்தில் அப்படித் தோற்றுது. இற்றைக்கு இருபதுவருடத்துக்கு முன்னிருந்த நிலைமைக்கும் தற்போதைய நிலைமைக்கும் பெரும் வித்தியாசமுண்டு. உள்நுழைந்து அந்நாட்டவரின் ஓட்டாட்டங்களை ஆராய்ந்து பார்த்தால் என்ன காணலாம்? புதிய முறைத் துப்பாக்கி எவர் கையிலுமுளது. எங்குங் கூட்டங்கூடித் திரளாக நின்று ஆகாயக்கப்பல் ஆயுதந் தரித்த மோட்டார் என்பவைகளைப்பற்றி வார்த்தையாடக் காணலாம். ஒழித்திருந்து சடுதியில் தோற்றிச் சண்டைசெய்யும் முறையைப் பற்றியும் பேசுவர்.

யுத்தம் எப்படியாவது ஏற்படுமென்பது அபிசீனியரின் நம்பிக்கையாகும். மழைக்காலம் முடிந்தவுடன் அதாவது, புரட்டாதிக் கடைசியில் ஐப்பசிமாதமுதற்பகுதியில யுத்தம்தொடங்குமெனக்கூறுகின்றனர்.

இற்றைக்கு இரண்டுநாட்களுக்கு முன் லண்டனிலிருந்து அபிசீனியா செல்லும் ஓர் அபிசீனிய நண்பனைச் சந்திததேன். அவர் அபிசீனியாவில் ஒரு பெரிய தனவந்தரும் பிரதானியுமாவர். அவர் ஐரோப்பாவிலுள்ள ஸ்கோடா என்னும் ஆயுதசாலைக்குச் சென்று திரும்புகின்றார். அபிசீனியாவுக்கும் இத்தாலிக்குமிடையி லேற்பட்ட தகராற்றைக் குறித்து உரையாடினோம். அவர் சிரித்துக்கொண்டு சொன்னதாவது:—இப்போதுநடக்கும் சமரசப்பேச்செல்லாம் வீணாகவே முடியும். சமரசத்தை இத்தாலியர் நாடினாராயின், அவர்கள் பேச்சுகள் இவ்வளவு கடுமையாய் இராது. எப்படியாயினும் யுத்தத்தைக் கிளப்பவேண்டுமென்பதே இத்தாலியரின் பிடிவாதமாகிறது. இதை யாவருமறிவர். ஐரோப்பிய வல்லரசுகளும நன்கறியும்.

அபிசீனியாவின் எல்லைப்புறமாகும் ஊல் என்னுமிடத்தில் நடந்த சம்பவத்தைக் காரணமாகக் காட்டி, அப்போதே யுத்தத்தை இத்தாலியர் கிளப்பியிருப்பர். ஆனால அத்தருணம் ஆயத்தமாய் அவர்கள் இருக்கவில்லை. பின்னர் ஆயத்தஞ் செய்தாராயினும் மழைக்காலம் அவர்க்குப் பெருந்தடையாய் முடிந்தது. ஆனால், அடுத்த புரட்டாதிக்குள் மழைகாலம் முடிவடைந்துவிடும. இதற்கிடையில் இத்தாலியர் என்ன செய்து நிற்கின்றனரென்பதை எவரும் அறிவர்.

"இப்போது நடக்கும் சமரசப்பேச்செல்லாம் வீணாக முடியுமா? எல்லாரும் சமாதானத்தையே நாடுகின்றனர்" என நான் கூறினேன்.

"இத்தாலியரொழிந்த யாவரும் சமாதானத்தையே விரும்புகின்றனர். என்னுடைய பெட்டியில் சில பத்திரிகைகளில் வெட்டியெடுத்த துண்டுகள் இருக்கின்றன. அதை வாசித்தால் இத்தாலிய பத்திரிகைகளின் அடக்கொணு யுத்தத் திமிர் நன்கு விளங்கும். அப்பத்திரிகைகள் பிறிட்டிஷாரைப்பற்றி எத்தனையோ அபவாதங்களைக் கிளப்புகின்றன. இவ்வாறு செய்துகொண்டு எத்தனையோ பட்டாளங்களைத் தங்களுடைய சொமாலிலண்டு என்னும் நாட்டினைப் பாதுகாக்க என்று கூறி அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள்" என்று அவர் கூறினார்.

"சொமாலிலண்ட் தேசத்தை யாரிலிருந்து பாதுகாக்கவேண்டும்? எதிலிருந்து பாதுகாக்கவேண்டும்? நுளம்புகளிலிருந்தா? இறுத்திறியாவிற்கு (இத்தாலியர் நாடு) வரும் தீமை யாது?" என்று கேட்டேன்.

"இல்லை என்ன வரப்போகின்றதென நாங்கள் அறிவோம் என்று கூறினார்.

"இதற்காகத்தான் ஜெக்கேசில்வாக்கியாவிற்குச் சென்றீரா?" என்றேன்.

"இல்லை, நான் வேறிடங்கட்குஞ் சென்றேன். சொலமன் (Solomon) காலந்தொட்டு எமது நாடு ஓர் பெரிய சக்கிராதிபத்தியமாக இருந்துவருகிறது. ரோம் நகரம் கட்டப்படமுன்னும் எமது நாடு உன்னத நிலையிலிருந்தது. அதன் பின்னரும் அப்படியே இருக்கின்றது. இன்னும் அப்படி இராவிடின் அது எமது பெரிய குற்றமாகும்.

"இப்படிக் கூறுவதைச் சிலர் ஒருபோதுநம்பாராயினும் இதுஉண்மையான சம்பவம். நாங்கள் எமது நாட்டினை நேசிக்கிறோம. இதற்கு ஒரு அத்தாட்சி யாதெனின் இற்றைக்கு 40 வருடங்களுக்கு முன்னரே இத்தாலியரின் யுத்தப்பெருமையையும் வலிமையையும் ஒருங்கு உருட்டித் திரட்டிக் கடலுக்குள் போட்டோம்" என்று அவர் கூறினர்.

"அப்போது இருந்த மாதிரியா இக்காலமும்? எல்லா விஷயங்களும் அதிகம் மாற்றமடைந்துவிட்டனவே" என்றுநான்கூறினேன்.

"நான் அறிவேன், உங்கள் மேலைத்தேசமே அதை எங்ஙளுக்கு நன்கு விளங்கச்செய்துளது. எங்கள் நாட்டவரைப்பற்றி உமது அபிப்பிராயம் யாது?

இந்தக்கேள்விக்கு நான் மறுமொழிகூற உடனே ஆயத்தமாயிருந்தேன்.

"உங்கள் நாட்டவர் முரடர். ஆனால் மிகத் துணிவுடையவர்" என நான் கூறினேன்.

"நீர்சொல்வது உண்மை. அதற்குத் துதிகூறுகிறேன், இந்த இருபதாம் நூற்றாண்டில் அவர்களை வழிகாட்டும் வகையில் நாங்களறிந்தது என்னவென்றால், அவர்களின் முரட்டுத்தன்மை இக்காலத்துக்குப் போதாதது என்பதே. ஆகையால் நாங்கள் தற்கால சாஸ்திரமுறைக்கும் இராணுவ ஒழுக்கத்துக்கும் எமது தைரியத்தை விவாகஞ்செய்துகொடுத்தோம். அடுத்த ஐப்பசியில் யுத்தம் ஏற்படுமென நாம் அறிவோம். எங்கள் நாட்டினைக் காப்பாற்றப் போதிய ஆயத்தங்களைச் செய்யவேண்டும். முதல் நாங்கள் செய்தது போர்வீரரைப் பழக்கியதே. இப்போது நமது நாட்டில் நன்கு பழகின 750000 துருப்புக்கள் இருக்கின்றனர். இவரைப்பழக்கினவர் மிகத் திறமைவாய்ந்த ஐரோப்பிய போர்த் தலைவர்கள்" என்று அவர் கூறினர்.

"இத்தாலியர் நமக்குத் தொந்தரவுவிளைக்க முற்பட்டு நிற்பின் நாமும் எமது வலிமையைக்காட்ட ஆயத்தம். எங்கள் நாடாகும் அபிசீனியநாடு ஐரோப்பாவன்று. எங்கள் நாட்டின் காலசுவாத்தியம் மத்தித்தரைக் கடலையடுத்தநாடுகளின் கால சுவாத்தியத்தைப் போன்றதல்ல. எங்கள் உணவுப் பொருள்களும் அந்நாடுகளிற் காணப்படும் பொருள்களல்ல. மேலும் எங்கள் யுத்தமுறையும், எங்கள் கஷ்டத்தைச் சகிக்கும் சக்தியும், நாட்டின்மீது எங்கட்குள்ள ஆர்வமும், மற்றைய நாட்டினரிலும் பார்க்கக் குறைந்தனவல்ல. இப்போது நாம் செய்யப்போகும் யுத்தம் சாமானிய யுத்தமன்று. ஒழித்திருந்து சத்துராதிகள் பராமுகமாயிருக்கும்போது சண்டைசெய்யும்முறையில் எங்கட்குப் போதிய அனுபவமுண்டு. 10 லட்சம்பேர் இவ்வித யுத்தத்தைச்செய்யப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தாலியரிடம் ஆகாயக் கப்பல்கள் இருக்கின்றனதான். அவைகள் ஆர்மீது குண்டுபோடப் போகின்றன. எங்கள் தலைநகரமாகும் அடிஸ் அபேபா நகர்மீதா? அந்நகரை அவர்கள் அழித்தார்களென்போம். சில வீடுகளை உடைத்தெறிந்தாரென்போம். பின் என்ன செய்வர்? அபிசீனியாவோ ஓர் பரந்தநாடு. பட்டினங்கள் நெருங்கியமையப்பெற்ற நாடல்ல. நாங்கள் இலகுவிற் காடுகளில் மறைந்துநின்று உயிர்ச்சேதமடையாது தப்பிக்கொள்வோம். ஆகாயக்கப்பல் ஒரு பட்டினத்தை அழித்து வெற்றி கொள்ளும். அப்படினத்தை நிரந்தரமாய்த் தமக்காக்கிக்கொள்ள வியலுமா? தரைப்பட்டாளமே அபிசீனியாவில் ஏதாவது உபயோகத்தைக் கொடுக்கக்கூடியது இத்தாலியர் நம்மை வெற்றிகொள்வதென்பது இலகுவன்று. அபிசீனியாவில் நாங்கள் நிலையாக வாழ்வோம். அவர்களால் முடியாது. அவர் யுத்தஞ்செய்யவரின் தண்ணீரும் கூடக் கொண்டுவரவேண்டும். ஏழரைலட்சம் போர்வீரருக்கு வேண்டிய ஆயுதங்களும் மற்றும் தளபாடங்களும் போதியன நம்மிடத்திலுள" என்று அபிசீனியவாசி கூறினர்.

## சைவாசிரிய கலாசாலை.

### தமிழ் ஆசிரிய பிரவேச (S. S. C.) வகுப்பில் சித்தியடைந்தவர்களை எடுக்காததன் நோக்கம்.

### அவர்கள் இலகுவில் ஈடேறும் வழி.

ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்குப் புதிய பிரமாணப்படி தமிழ் ஆசிரிய பிரவேச (S. S. C) வகுப்பிற் சித்தியடைந்தவர்கள் மூன்று வருடமும் தமிழ் ஆசிரிய பரீட்சையில் (Teacher's Cartificate) சித்தியடைந்தவர்கள் லண்டன் மற்றிக்குலேசன், சீனியர் பரீட்சையிற் சித்தியடைந்தவர்கள் இரண்டு வருடமும் பயிற்றப்பட வேண்டும்.

தமிழ் ஆசிரிய பரீட்சையில் (Teacher's Certificate) சித்தியடைந்தவர்கள் இரண்டு வருடமும் பயிற்சி பெற்றபின் நடைபெறும் கடைசிப் பரீட்சையில் சித்தியெய்தத் தவறினும், ஓர் தராதரப்பத்திரம் இலகுவில் பெறக்கூடும். தமிழ் ஆசிரிய பிரவேச S. S .C. பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மூன்றுவருடப் பயிற்சிபெற்றபின் நடைபெறும் கடைசிப் பரீட்சையில் சித்தியெய்தத் தவறின் பின்னுமொருவருடம் பயிற்சி பெற்றுக் கடைசிப் பரீட்சைக்குத் தோற்றலாம். அதினும் சித்தியெய்தத் தவறுவோர் தராதர பத்திரமற்ற ஆசிரியர்களாகவே கவனிக்கப்படுவர். நான்கு வருடம் பயிற்சி பெற்றுத் தொகையான பணத்தைச் செலவுசெய்து ஈற்றில் தராதர பத்திரமற்ற ஆசிரியர்களாய் வரின் அவர்கள் கதி யாதாய் முடியும். பணம் செலவு செய்த பெற்றோர்கள் கவலை எவ்வளவாயிருக்கும்.

மாணவர்கள் மூன்று அல்லது நாலுவருடம் கலாசாலைப் பயிற்சி பெறுவதற்குத் தேவையான பணத்தைச் செலவுசெய்து ஈற்றில் ஒரு தராதர பத்திரமுமற்றவர்களாய் கவலைப்படுவதினும் பார்க்க, அவர்கள் எட்டுமாதம் ஆசிரிய (Teacher's Certificate) வகுப்பில் படித்துச் சித்தியெய்தியதும் கலாசாலைப் பயிற்சியில் சேருவதால் பணச்செலவு குறைவதுமன்றிக் கடைசிப் பரீட்சையிற் சித்தியெய்தத் தவறுமிடத்தும் தராதர பத்திரமொன்று இலகுவில் பெறக்கூடும்.

தமிழ் ஆசிரிய பிரவேச (S.S C.) வகுப்பிற் சித்தியடைந்தவர்களுக்கு மூன்று அல்லது நாலுவருடப் பயிற்சி யளிப்பதில் மாணவர்களுக்குக் கஷ்டமும் பெற்றோர்க்குப் பணச்செலவும் அதிக மேற்படுமென் றுத்தே சித்தே மூன்றுவருடப் பயிற்சியையெதிர்த்தும் வாய்க்காமற்போய்விட்டது. ஆசிரிய பிரவேச (S. S. C.) பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கு மூன்று அல்லது நான்குவருடம் கலாசாலையில் பயிற்சியளித்தும் ஈற்றில் ஒரு தராதர பத்திரமற்றவர்களாயும் போக நேரிடுமென்பதைக் கருதி, நாங்கள் திருநெல்வேலியிலமைத்திருக்கும் "யாழ்ப்பாணம் சைவாசிரிய கலாசாலை"யில் இவ்வருடம் ஆசிரிய பிரவேச (S. S. C.) பரீட்

(தொடர்ச்சி அடுத்தபக்கம் பார்க்க.)

மக்களுயிர்க்குத் தருமத்தின் மேற்பட்ட தில்லை.

# நன்னூற் பாயிர ஆராய்ச்சி.

(மூளாய், சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமையாசிரியர் வேலணையூர், பண்டிதர் திரு. கா. போ. இரத்தினம் அவர்கள்.)

[உரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது.]

**பா**யிரம் என்பது வரலாறு. அஃது பொதுப்பாயிரஞ் சிறப்புப்பாயிரமென் றிருவகைத்து. என்னை? "பாயிரம் பொதுச்சிறப் பெனவிரு பாற்றே" என்றாராகலின். அவற்றுள் பொதுப்பாயிரமாவது எல்லா நூன்முகத்தும் உரைக்கப்படுவது. அஃது நூலினது வரலாறும், ஆசிரியனது வரலாறும், அவ்வாசிரியன் நூலை மாணாக்கற்குச் சொல்லுதலின் வரலாறும், மாணாக்கனது வரலாறும், அவன் கேட்டலின் வரலாறுமென்னும் ஐந்து வரலாற்றையும் விளங்க உணர்த்துவது.

"நூலே நுவல்வோ னுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்ற மைந்தும்
எல்லாநூற்கும்இவைபொதுப்பாயிரம்"
என்றார் நன்னூலார்.

இவ்வாறன்றி, இவ்வைந்தனுள் நூல்வரலா றொன்றையு மொழித்து,

"ஈவோன் றன்மை யீத லியற்கை
கொள்வோன்றன்மைகோடன்மரபென
வீரண்டென்பபொதுவின்றொகையே".

என இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும், நேமிநாத உரைகாரரும், களவிய லுரைகாரரும், இலக்கண விளக்க உரைகாரரும் கூறினாராலோவெனின், பாயிரங் கூறுதல் நூல்கட்கன்றிப் பிறவற்றிற்கன்றே? அங்ஙனமாயி[ன்] நூலின் வரலாறு ஒன்றுமே கூறவேண்டும்; அதனோடு ஆசிரியர் வரலாறு முதலிய நான்கினையும் உடன் கூறுதல். வரலாற்று முறைமையில் வாராதார் நூல்களைக் கற்பிக்கவும் கற்கவும் புகின்,

"பொய்படுமொன்றோபுனைபூணுங்கையறி
பேதை வினைமேற் கொளின்" [யாப்

என்றவாறேயாய் நூல்கள் அருமையும் பெருமையுங் கெட்டுப் பயன்படாவாமென்பது கருதியென்க. அங்ஙனமாயின் நூன்முகத் துரைக்கப்படும் பாயிரத்துள் நூலைக் கூறுதல் பொருந்தாதெனில், இவ்விலக்கணத்தாலமைபவன் ஆசிரியன் என்றுங்கு இவ்விலக்கணத்தாலமைவது நூலென்றதன்றிப் பாயிரத்துள் நூலைக் கூறியதன்று. ஒல்காப் புலமைத் தொல்காப்பியர் நூலினியல்பை ஒத்துறுப்பாகிய மரபியலிற் கூறினாற்போல் பன்னருந் தவப் பவணந்தியாரும் பாயிரவுறுப்பினுட் கூறினார் என்பது தெளிந்து கடைப்பிடிக்க.

இவ்வாற்றான் நன்னூலார் கூறிய வைந்துமே சிறந்ததாதல் தெரிந்து கோடுக. இதுவே சிவஞானமுனிவர், மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர் முதலியோர் தங்கொள்கையும்.

இனிச் சிறப்புப்பாயிரமாவது, ஒரு நூன்முகத் துரைக்கப்படுவது. அஃது எட்டுவகைப்படும். அவை யாவையோவெனின், ஆக்கியோன் பெயரும் வழியும், எல்லையும், நூற்பெயரும், யாப்பும், நுதலிய பொருளும், கேட்போரும், பயனுமென. இவை என்னை?

"ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர்பயனோடாயவெண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே"

என்றாராகலின், காலமுங் களமுங் காரணமும் எனும் மூன்றையுங் கூட்டப் பதினொன்றாகும். என்னை?

"காலங் களனே காரண மென்றிம்
மூவகை யேற்றி மொழிநரு முளரே"

என்றாராகலின். எட்டும் நூல்செய்தார் காலத்தும், நூல் வழங்குங் காலத்தும் ஒப்ப நிகழ்வனவாதலானும், மூன்றும் நூல்செய்தார் காலத்து நிகழ்ந்தனவாதலானும், வேற்றுமை தோன்ற இருசூத்திரத்தி லமைத்தார். எட்டும் ஒருதலையா னுணரவேண்டுதலின் அவை எல்லாவாசிரியராலுங் கொள்ளப்பட்டன. கழிந்தவற்றை உணர்தலாற் பெரும்பயனின்மையின் மூன்றும் ஒருசாராரால் கொள்ளப்பட்டன.

களவிய லுரைகாரர்க்கு எட்டுடன் மூன்றையுங் கூட்டிக் கோடல் உடன்பாடன்றென்பதை "காலமுங் களமுங் காரணமுங் கூட்டிப் பதினொன்றென்பாரு முளர்" எனு மவர் கூற்றா னறிக.

"இனிச் சிறப்புப்பாயிரமாவது, தன்னூல் உரைக்கப்படுமே நூற்கு இன்றியமையாதது. அது பதினொருவகையாம்............" எனும் நச்சினார்க்கினியர் உரையால் அவர்க்குப் பதினொன்றும் உடன்பாடென்பது தெளிக.

இனி, இப்பன்னிரண்டனுள் ஆக்கியோன் பெயர், வழி, எல்லை, நூற்பெயர், நுதலிய பொருள், காலம், களன் எனும் ஏழும் யாவர்க்கும் ஒப்ப முடிந்தன. ஒழிந்த நான்கனுள் யாப்பு என்பதைச் சிவஞானமுனிவர் இயைபெனக்கொண் டுரைத்தனர். இஃது, நன்னூல் விருத்தியுரையில் "அவற்றை யாவரு முணரவெனவே, முன்னர் நிகண்டு கற்றுச் செய்யுளாராய்ச்சி யுடையார்க்கே அவற்றை ஆராய்வுழி யவற்றின்கணுளவாகிய செய்கை வேறுபாடுகளும் சொன்முடிவு பொருண்முடிவு வேறுபாடுகளும் இன்னவெனத் துணியப்படாமையின் அவற்றைத் துணிந்தறியவேண்டி இவ்வியற்றமிழ் நூல் கேட்டறிதலின்கண்ணே ஊக்கஞ் செல்லுமாதலின் அவை ஆராய்ந்தபின்னரிவை கேட்கற்பாற்றென்னும் யாப்பும்" எனவும்,

சிவஞானபோதச் சிற்றுரையில் "ஏது திருஷ்டாந்தத்தால்" எனவே இலக்கண இலக்கியங் கற்றுத் தருக்க நூல் பயின்று வல்ல பக்குவரே இந்நூல் கேட்டற்குரியரெனக் "கேட்போரும் யாப்பும் போந்தவாறுணர்க" எனவும், இவ்வாறே பிறவற்றினுங் கூறுவதாலும் தெளியப்படும்.

அவரொழிந்த ஏனைய உரையாசிரியர்கள் யாவரும் யாப்பென்பதை நூல் யாப்பெனவே கொண்டனர். இதனை அவர்களுடைய உரையாற் றெரிக்குதும்.

களவிய லுரைகாரர் "இனி யாப்பென்பது நூல் யாப்பு, நூல் யாக்குமிடத்து நான்கு வகையால் யாக்கப்படும். தொகுத்தும், விரித்தும், தொகைவிரியாகவும், மொழிபெயர்த்துமென" என்றுரைத்தனர்.

நச்சினார்க்கினியர் "எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடியெனவே" நுதலிய பொருளும் பயனும் யாப்பும் பெறப்பட்டன என் றியம்பினர்.

இளம்பூரணர் "முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி யெனவே" வழியும் யாப்பும் காரணமும் பெறப்பட்டன என்றார்.

மயிலைநாதர் "தொகைவகை விரியென யாப்புப் போந்தது" என்றறைந்தார்.

சங்கரநமச்சிவாயர் "தொகை வகை விரியென யாப்பும்" என்று குறித்தனர். நிற்க,

தொல்காப்பியனாரும் நூல் யாப்பு நான்கென்பதை,

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி
மொழிபெயர்த், ததர்ப்பட யாத்தலொ
டனைமர பினவே"

எனுஞ் சூத்திரத்தாற் கூறினர்.

நன்னூலாரும்,

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி
மொழிபெயர்ப், பெனத்தகு நூல்யாப்
பீரிரண் டென்ப"

என்றுரைத்தனர்.

இவற்றுள் சிவஞான முனிவர் கூறிய இயைபு கேட்போரின்றெனக் கூறவே அதனுளடங்குமாதலானும் (கேட்போரைப் பற்றிப் பின்னர்க் கூறுதும்) வடநூலாருள் ஒருசாரார் ஆனந்தரியப் பொருள் நூலைப் பயப்பித்தற்குக் காரணமாய் கேட்போரை விசேடித்து நிற்றலின் வேறு கூறவேண்டா வெனுங் கருத்துடையராதலானும், தொல்காப்பியர், பவணந்தியார் முதலிய தொல்லாசிரியர்கள் இந்நான்கனையும் அவர் கூறுமாறு வழியின் வகையென யாண்டுங் கூறிற்றிலராகையானும், ஏனைய உரையாசிரியர்கள் யாவரும் அதனை நூல் யாப்பெனவே கொண்டாராதலானும், பவணந்தியார் கொள்கையும் நூல் யாப்பென்பதே பெறப்படுதலினானும் யாப்பென்பது நூல் யாப்பெனவே கோடுக. ஆனந்தரியம்—இயைபு, யாப்பு, தொடர்ச்சி.

'ஆக்கியோன்...........பாயிரத்தியல்பே' எனுஞ் சூத்திரத்துக் கண்டவற்றுள் சிலவற்றிற்குச் சிறப்பு விதிபுணர்த்த விரும்பிய பவணந்தியார், நூற்பெயர் வகையை,

"முதனூல் கருத்தனளவு மிகுதி [மித்தினும்
பொருள் செய்வித்தோன் தன்மை முதனி
இடுகுறியானும் நூற் கெய்தும் பெயரே"

எனுஞ் சூத்திரத்தாற் கூறி, அடுத்த யாப்பின் வகையை ஆற்றொழுக்காய்,

'தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழி
[பெயர்ப்
பெனத்தகு நூல்யாப் பீரிரண் டென்ப'

எனக் கூறினாராகையால், "ஆக்கியோன்..........." எனுஞ் சூத்திரத்திலமைத்த யாப்பென்பது நூல் யாப்பென்பதே அவர் கொள்கையுமாமென்பதை யுய்த்துணர்ந்து கடைப் பிடிக்க.

இனி, கேட்போர் என்பதற்கு உரையாசிரியர்கள் மூன்று விதமாகப் பொருளுரைத்துத் தம்முள் முரணினர். இளம்பூரணர், களவியலுரைகாரர், நச்சினார்க்கினியர் மயிலைநாதர், இலக்கண விளக்கவுரைகாரர் முதலியோர் நூலரங்கேற்றுங் காலத்துக் கேட்டோரைக் கேட்போரென்றும் சங்கர நமச்சிவாயர் நூலை இயற்றித் தருகவெனக் கேட்டோரைக் கேட்போரென்றும், சிவஞானமுனிவர் நூலைக் கேட்பவர்களை (மாணாக்கர்களைக்) கேட்போர் என்று முரைத்தனர்.

(தொடரும்)

விலை நிதானம்! நயம் சரக்கு!

எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்
மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்

விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

திறம் இங்கிலீஷ்மேக்குடைகளும், யப்பான்குடைகளும்
குறைந்த விலையில் ஏராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34.

## சைவாசிரிய கலாசாலை.

(முன்பக்கத் தொடர்ச்சி)

சையிற் சித்தி யெய்தியவர்களை எடுக்கவில்லை. ஆசிரிய (Teacher's Certificate) பரீட்சையில் சித்தியெய்தியவர்களையும், லண்டன் மற்றிக்குலேசன், சீனியர் பரீட்சையில் சித்தியெய்தியவர்களையும் எடுத்திருக்கின்றோம்.

ஆசிரிய பிரவேச (S. S. C.) பரீட்சையில் சித்தி யெய்தியவர்களுக்கென அரசினர் பணந்தராமலிருப்பவும் மாணவர்களிடம் ஒரு சதமும் சம்பளம் வாங்காமல் தகுதியான ஆசிரியர்களை நியமித்து ஆசிரிய (Teacher's Certificate) வகுப்பு வைத்து நடத்துகின்றோம். ஆசிரிய பிரவேச (S. S. C) பரீட்சையில் சித்தியெய்தியவர்களை ஈடேற்றும்நோக்கமாகவே சங்கம் இவ்வகுப்பைத் தொடங்கியதால் ஆசிரிய பிரவேச (S S. C.) பரீட்சையில் சித்தியெய்திய எவர்களும் இவ்வகுப்பிற் சேர்ந்து (ஐப்பசி தொடக்கம்) எட்டுமாதம் படித்துப் பரீட்சைக்குத்தோற்றலாம். சித்தியெய்துபவர்கள் அடுத்த வருடத்தில் இரண்டுவருடப் பயிற்சிபெறுவதற்கு உரித்துடையவர்களாய் வருவார்கள். இவ்வகுப்பிற் படித்துச் சித்திபெறுபவர்களுக்குக் கலாசாலையிற் சேர விசேட உரித்துண்டு. ஆசிரிய கலாசாலையிற் பயிற்சிபெறுங்காலத்து ஏற்படுஞ் செலவுகளுக்குக் கஷ்டப்படுபவர்கள் ஆசிரிய பரீட்சை (Teacher's Certificate) சித்தியெய்தியதும் ஒருவருடம் சங்கப் பள்ளிக்கூடத்திற் படிப்பித்து அப்பணத்தைப் பயிற்சிக்காலச் செலவுகளுக்கு உபயோகப்படுத்தலாம். பெற்றோர் கஷ்டப்படாமலிருப்பதற்கும் மாணவர்கள் மனக்கஷ்டமின்றிப் பயிற்சியை நன்கு நிறைவேற்றற்கும் இது ஓர் நல்லவழியாகும்.

ஒவ்வொரு வருடமும் விஜயதசமியிலன்று ஆசிரிய (Teachers' Certificate) வகுப்பு ஆரம்பிக்கப்படும். விரும்பியோர் அதிபர் அவர்களுக்கு விண்ணப்பஞ்செய்யவும். இதுவரையும் ஆவணி மாதத்தில் நடைபெற்றுவந்த ஆசிரிய (Teacher's Certificate பரீட்சை வருகிற வருடம் தொடக்கம் ஆனி மாதத்தில் நடைபெறும்.

சு. இராசரத்தினம்
யாழ்ப்பாணம். மனேசர்.

# அரசாங்கசபைக்கு விசேட அதிகாரம் - உரிமை.

## சட்டத்தை மீறுவோர்க்கு 15ஆயிரம் குற்றம்.

### சீமை மந்திரியும் சிவில் சேவிஸ் உத்தியோகமும்

## கவர்னருக்கும்-மந்திரிசபைக்கும் இருந்துவரும் ஆறுத புண்.

### தொழிலாளருக்கு நட்டஈட்டுச் சட்டம்.

## தேர்தல் தொகுதிகளில் மாற்றம்.

### இலங்கை - இந்தியத் தொடர்பு.

(கொழும்பு நிருபர்.)

கொழும்பு, ஆகஸ்ட் 1.

அரசாங்கசபையின் அதிகாரங்களையும் விசேஷ உரிமைகளையுங் குறிப்பிடும் ஒரு மசோதா பொதுசனங்களின் பார்வைக்காகச் சென்ற வெள்ளிக்கிழமைக் கஜெட் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அற்றேணி—ஜெனரல் அவர்களால் இது விரைவில் அரசாங்கசபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்படுமெனத் தெரிகிறது.

அரசியல் சீர்திருத்த விஷயத்திற்கும் இம் மசோதாவுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. அரசாங்கசபை அங்கத்தினர்களின் பேச்சுச் சுதந்திரம், நீதி ஸ்தல நடவடிக்கைகள் சம்பந்தமாக அவர்களுக்குள்ள விசேஷ உரிமைகள், அரசாஙகசபையை அவமதிப்பவர்களுக்கு விதிக்கப்படும் தண்டனை முதலிய விஷயங்களே இம்மசோதாவில் அடங்கியிருக்கின்றன.

இவ்விஷயங்கள் சம்பந்தமாகப் பிரிட்டிஷ் தேசாளுமன்றத்திற்கு என்ன அதிகாரங்களும் உரிமைகளும் இருக்கின்றனவோ அவை யாவும் பொதுவாக இலங்கை அரசாங்கசபைக்கும் இருக்கவேண்டுமென்பதே இம் மசோதாவின் நோக்கம்.

அரசாங்கசபையின் கவனத்துக்குவரும் மசோதாக்களை அல்லது தீர்மானங்களை ஆதரிப்பதற்காக அல்லது எதிர்ப்பதற்காகக் கைலஞ்சம் அல்லது உபகாரம் வாங்கும் அங்கத்தினர்களுக்கு 15,000 ரூபாய்க்கு அதிகப்படாமல் அபராதம் விதிக்கலாமென மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது.

### கைலஞ்சம் வாங்குதல்

அங்கத்தினர் அரசாங்க சபைக்குப் போகும்பொழுது அல்லது அங்கு பிரசன்னமாயிருக்கும்பொழுது அல்லது அங்கிருந்து வீடு திரும்பும்பொழுது அவர்களைக் கடன் அல்லது சிவில் வழக்குச் சம்பந்தமாகக் கைது செய்யக்கூடாதென்பது மசோதாவிலுள்ள விதிகளிலொன்று. ஆனுல் இடமசோதாவை மீறுபவர்கள் விஷயத்திலும் இன்ஸோல்வென்ஸி வழக்குகள் விஷயத்திலும் இவ்விதியைக் கவனிக்கவேண்டியதில்லை.

பின்வரும் குற்றங்களைச் செய்வோர் அரசாங்கசபையை அவமதிப்பவர்களாகக் கருதப்படுவர் :—

(1) அரசாங்கசபையின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தல்.

(2) அரசாங்கசபையின் கவனத்துக்குவரும் மசோதாக்களை அல்லது தீர்மானங்களை ஆதரிப்பதற்காக அல்லது எதிர்ப்பதற்காகக் கைலஞ்சம் உபகாரம் வாங்குதல் அல்லது கொடுத்தல்.

(3) அரசாங்கசபை நடவடிக்கைகள் சம்பந்தமாக ஒரு அங்கத்தினரை அடித்தல் அல்லதுபயமுறுத்தல்.

(4) அரசாங்க சபையை ஏமாற்றும் நோக்கத்துடன் பொய்ப்பத்திரங்களைச் சமர்ப்பித்தல்.

(5) அங்கத்தினர்களைப் பற்றிப் பொய்யான அல்லது அவர்களுக்கு அவமானம் விளைக்கக்கூடிய பத்திரங்களை வெளியிடுதல்.

இவைகளைத்தவிர வேறு சில குற்றங்களும் மசோதாவில் மாற்றப்பட்டிருக்கின்றன. இக் குற்றங்களை விசாரணைசெய்து தண்டனை விதிப்பதற்கு அரசாங்கசபைக்கு அதிகாரம் வழஙகப்பட்டிருக்கிறது.

இம் மசோதாவில் கூறப்பட்டிருக்கும் அதிகாரங்கள் மிகவும் விரிவானவையென்றும் இவை அரசாங்கசபையின் தற்போதைய நிலைமைக்குப் பொருத்தமற்றவையென்றும் சிலர் கருதுகின்றனர். பூரண அரசியல் சுதந்தரம் பெற்றிருக்கும் பிரிட்டிஷ் தேசாளுமன்றத்தின் உரிமைகள் இலங்கையைப்போன்ற அடிமைநாடுகளின் சட்டசபைகளுக்கு ஏற்றவையல்லவென்று இவர்கள் கூறுகின்றார்கள்.

### சீமை மந்திரியின் தீர்மானம்

சென்றவார வரவு செலவுத்திட்டப் பேச்சின்போது திரு. சேனுநாயக்கா, மந்திரிகளுக்கும், மேலதிகாரிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அபிபபிராய பேதங்களைக் குறிப்பிட்டார்.

சிவில் சேவிஸ் பகுதிகளில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை ஐரோப்பியர்களுக்கு அளிக்கவேண்டுமெனக் குடியேற்றநாட்டுமந்திரி தீர்மானித்திருக்கிறாராம். மந்திரிசபையினர் இத்தீர்மானத்தைப் பலமாக ஆட்சேபித்திருக்கின்றனர் என்றும் குடியேற்றநாட்டுமந்திரியின் அனுமதி கிடைத்ததும் அவருக்கும் மந்திரிசபையினருக்கும் இதுவிஷயமாக நடந்த கடிதப் போக்குவரத்து அரசாங்கசபைக்குத் தெரிவிக்கப்படுமென்றும் திரு. சேனுநாயக்கா அறிவித்தார்.

மேலும் அடுத்தவருடம் நியமிக்கப்படவிருக்கும் ஏழு சிவில்சேவிஸ் உத்தியோகஸ்தர்களில இருவர் ஐரோப்பியராகவிருக்கவேண்டுமென்று பிரதம காரியதரிசி கூறிய யோசனையை மந்திரிசபையினர் நிராகரித்துவிட்டனர். எனவே அடுத்தவருட வரவு செலவுத்திட்டத்தில் ஐந்து புதிய சிவில்சேவிஸ் உத்தியோகஸ்தர்களுக்கே மந்திரிசபையினர் பணம் கேட்டிருக்கின்றனர்.

சிவில்சேவிஸ் உத்தியோகங்களுக்கும் இதர உத்தியோகங்களுக்கும ஐரோப்பியரை இனிமேல் நியமிக்கக்கூடாதென்று மந்திரிசபையினர் கருதவில்லையென்றும், ஆனுல் அவர்களை எப்பொழுது நியமிப்பதென்பதைத் தீர்மானிக்கும் உரிமை அரசாங்கசபைக்குமட்டுமே உண்டு என்பதே மந்திரிசபையின் அபிப்பிராயம் என்றும் திரு. சேனுநாயக்கா கூறினுர்.

### படிச்செலவுத் தகராறு

அரசாங்க உத்தியோகஸ்தர்களின் றெயில்வேப் பிரயாணப் படிச்செலவு சம்பந்தமாகவும் உயர்தர உத்தியோகஸ்தர்களின் கப்பல் பிரயாணப் படிச்செலவு சம்பந்தமாகவும் மந்திரிசபைக்கும் தேசாதிபதிக்கும் சென்ற நான்கு வருடங்களாக விருந்துவரும் பிணக்கு சமீபகாலத்தில் தீர்த்துவைக்கப்படுமென்று தெரியவில்லை. இப்படிச்செலவுகள் சம்பந்தமாகத் தேசாதிபதி கேட்டுக்கொண்ட தொகையைக்காட்டிலும் குறைந்த தொகையையே அரசாங்கசபை ஒவ்வொரு வருடமும் அனுமதித்து வந்திருக்கிறது. தேசாதிபதியும் ஒவ்வொருவருடமும் தமது விசேஷ அதிகாரத்தைப் பாவித்துத் தாம் விரும்பிய தொகையை அனுமதித்து வந்திருக்கிறுர்.

வழக்கம்போல் அடுத்த வருட வரவு செலவுத் திட்டத்திலும் மந்திரிசபையினர் குறைந்த தொகையையே ஒதுக்கிவைத்திருக்கின்றனர். இதைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது திரு. செனநாயக்கா, "இந்தத் தீராப்புண்ணை மேலும் இருக்கவிடுவது வருத்தமான காரியமே. ஆனுல் இது இருந்து வருவது ஒரு விஷயத்தில் நன்மைதான். நமது சொந்த விஷயங்களை நிர்வகிப்பதற்குப் பூரண அதிகாரம் பெறும்வரையும் நாம் வாளாவிருக்க முடியாது என்பதை இது நமது ஞாபகத்துக்குக் கொண்டுவருமல்லவா?" என்று கூறினுர்.

### பிரதம காரியதரிசியின் போக்கு

விவசாய நிர்வாகசபையின் வேலையைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது திரு. செனநாயக்கா கூறியதாவது :—"அரசாங்க நிலத்தைப் பொதுசனங்களின் நிலத்திலிருந்து பிரித்து எல்லை போடும் வேலை நாம் எதிர்பார்த்த அளவுக்குத் துரிதமாக நடைபெறவில்லையென்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றேன். போதிய உத்தியோகத்தர் இல்லாமையே இதற்குக் காரணம் என்று நான் பலமுறை கூறியிருக்கிறேன். அரசாங்க உத்தியோகத்தருக்கு வேலைகொடுக்கும் அதிகாரமும் அவர்களை ஒரு இடத்திலிருந்து இன்னெரு இடத்திற்கு மாற்றும் அதிகாரமும் பிரதம காரியதரிசியின் கையிலிருக்கும்வரை இக்கஷ்டம் இருந்து வருமென்றே நினைக்கின்றேன்."

இதுவிஷயத்தைப்பற்றி "விவசாயமும் தேசாபிமானமும் என்ற புத்தகத்தில் திரு. செனநாயக்கா குறிப்பிடுவதாவது :—"தற்போதைய அரசியல்திட்டத்தின்கீழ் உள்நாட்டு அலுவலகளை நிர்வகிக்கும் பொறுப்பு சனப்பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனுல அரசாங்க உத்தியோகத்தர்கள்மீது அவர்களுக்கு எவ்வித அதிகாரமும் கொடுக்கப்படவில்லை. இது அரசியல் சட்டத்திலுள்ள பிரதானமான குறைகளில் ஒன்று ........... சில பகுதிகளுக்கு மிதமிஞ்சிய உத்தியோகத்தர்களை நியமிக்கவும் சில பகுதிகளுக்குப் போதிய உத்தியோகததர்களை நியமிக்க மறுக்கவும் பிரதம காரியதரிசிக்கு அதிகாரம் இருக்கிறது."

### தொழிலாளருக்கு நட்ட ஈடு

தொழிலாளர் நட்ட ஈட்டுச் சட்டம் இன்றைய தினத்திலிருந்து அனுட்டானத்துக்கு வருகிறது. தொழில்வர்த்தக நிர்வாகசபையின் முயற்சியால் நிறைவேறிய முக்கிய சட்டங்களில் இது ஒன்று.

தொழிற்சாலைகளில் வேலைசெய்யும்பொழுது தொழிலாளருக்கு விபத்து ஏற்பட்டால் அவர்களுக்கு முதலாளிகள் நட்ட ஈடு கொடுக்கவேண்டுமென இச்சட்டம் கூறுகிறது. தொழிலாளர்களுக்கு மரணம் நேரிட்டால் அவர்களுடைய பந்துக்களுக்கு இந் நட்ட ஈடு கொடுக்கப்படும்.

இலங்கையில் தற்பொழுது இச்சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் இலக்கணங்களையுடைய தொழிற்சாலைகள் பல இல்லாதபடியால் இதனுல் இலங்கைத் தொழிலாளர்களுக்கு அதிக நன்மை ஏற்படுமென்று நாம் எதிர்பார்க்கவில்லை. ஆனுல் தொழிலாளர்களின் நிலைமையை மேம்படுத்துவது அரசாங்கத்தின் கடமைகளிலொன்று என்ற கொள்கையை இது அங்கீகரிக்கின்றபடியால் இதை ஒரு முக்கிய சட்டமாக நாம் கருதுகிறோம்.

### தொகுதிகளில் மாற்றம்

அரசாங்கசபைத் தொகுதிகளை மாற்றி அமைப்பது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட விசாரணைச் சபையின் அறிக்கை சில தினஙகளுக்கு முன் வெளிவந்தது. இச்சபை விசாரணை நடத்தியபொழுது பலர் அதன்முன்பு சென்று தங்கள் தங்கள் மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்தானங்கள் போதாமலிருப்பதாகக் கூறி அதிக ஸ்தானங்கள் வேண்டுமெனக் கேட்டிருந்தனர். நமது தமிழ்த் 'தலைவர்களும' அதன்முன்பு தோன்றிச் சில யோசனைகளைக் கூறியிருந்தார்கள். ஆனுல் விசாரணைச்சபையினறிக்கையிலிருந்து அது இக்கோரிக்கைகளையும் யோசனைகளையும் சிறிதும் பொருட்படுத்தவில்லையெனத் தெரிகிறது.

தொகுதிகளின் தற்போதைய எல்லைகள் பொதுவாகத திருப்திகரமாயிருப்பதாக விசாரணைச்சபையினர் தெரிவித்திருக்கிறுர்கள். கம்பளை, தலவாக்கலை, நுவரெலியா, காலி, வெலிகமா, டெடிகமா, றுவான்வலை, இரத்தினபுரி, பலாங்கொடை முதலிய தொகுதிகளைப் பொறுத்தவரையில் சில மாற்றங்களைச் சிபார்சுசெய்திருக்கிறுர்கள். இம் மாற்றங்களைத் தேசாதிபதி அங்கீகரித்துவிட்டார் என நேற்று வெளிவந்த ஒரு விசேட கஜெற் பத்திரிகை அறிவிக்கிறது.

கீழ்மாகாணத்தைப் பொறுத்தவரையில் தற்போதைய ஏற்பாடுதான் சிறந்ததென விசாரணைச்சபையார் தெரிவித்தனர். ஆனுல்அவசியமானுல் திரிகோணமலை டிஸ்திரிக்கை, மன்னுர், முல்லைத்தீவு டிஸ்திரிக்குகளுடன் சேர்த்து ஒரு புதிய தொகுதியை ஏற்படுத்தலாமென்றும் அவர்கள் சிபார்சு செய்திருந்தார்கள். நேற்றைய கஜெட்டில் இச்சிபார்சு காணப்படவில்லை. எனவே தற்போதைய ஏற்பாடே கீழ்மாகாணத்தில் மேலும் இருந்துவரும்.

### இந்திய இலங்கைத் தொடர்பு

இந்திய—இலங்கைத் தொடர்பைப்பற்றி வரவு செலவு திட்டப் பேச்சில் திரு. சேனுநாயக்கா கூறிய வசனங்களை வரவேற்றுச் சென்னை "ஹிந்து" பத்திரிகை ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. பல இந்தியர்களுக்கு இலங்கையில் தங்குமிடம் அளித்து வருவதற்காக இந்தியர்கள் நன்றியறிதலுடையவர்களாக விருக்கிறுர்களென்றும் ஆனுல் இலங்கையரின் வேண்டுகோளின் பேரிலேயே இந்தியர்கள் இலங்கைக்கு வந்திருக்கிறுர்களென்பதை இலஙகையர் மறந்துவிடக் கூடாதென்றும் இரு பக்கத்தினரும் பரஸ்பரம் கலந்து பேசினுல் தற்போதைய வித்தியாசங்கள் நீங்கிவிடுமென்றும் அத்தகைய பேச்சின் பயனுக ஒரு வர்த்தக ஒப்பந்தம் ஏற்படவேண்டுமென்றும் இப்பத்திரிகை கூறுகிறது.

சரித்திரப்பகுதி

[பதிப்புரிமை ஆசிரியர்க்கே உரியது]

# "இலங்கைச் சரித்திரக் கதைகள்"

[சுன்னாகம் மயிலணிச் சைவ வித்தியாசாலை ஆசிரியர் திரு. இ. தர்மலிங்கம் அவர்கள் எழுதியது.]

2

## புத்தசமயத்தைத் தழுவிய முதல் அரசன்

### I தீசனின் பிறப்பும் அசோகனின் நட்பும்

செல்வச் சிறுவர்களே! முன்பாடத்தில் இலங்கையின் முதலரசனான விஜயனைப்பற்றிப் படித்தீர்களல்லவா? அவனிறக்க வேறு பலர் இலங்கையை ஆட்சிசெய்தனர். அவர்களில் மூத்தசிவன் என்பான் ஒருவன்.

இவன் ஒரு விசேடம்பெற்ற அரசனல்லன். இவனுக்குப் பத்து ஆண்களும், இரு பெண்களும் பிறந்தார்கள். அவர்களில் இரண்டாவது மகன் மிகவும் கீர்த்திபெற்ற ஒரு அரசனாய் விளங்கினான். அவனது பெயர் தீசன்.

தீசன் முடிசூடிய தினத்தன்று அநேக உற்பாதங்கள் நடைபெற்றன. கடலிலிருந்து முத்து முதலியவை கரையேறின. பூமிக்குள் இருந்து பொன் முதலியவை வெளியேறின. சனங்களெல்லோரும் தீசன் தமக்கரசனானதைக்குறித்து அவனை வாழ்த்தினர். தீசன் கடவுளிடத்து அதிகம் அன்புள்ளவன். ஆதலினால் அவனுக்குத் தேவப்பிரிய தீசன் என்றும் பெயருண்டு.

தீசன் இலங்கையை ஆண்ட காலத்தில் (கி. மு. 247-207), இந்தியாவிலே பாடலிபுரத்தை அசோகன் என்னும் ஒரு அரசன் அரசுசெய்தான். அவனும் தீசனைப்போலவே ஒரு செங்கோல் மன்னன். அசோகனும் தீசனும் அதிகம் நட்பாளராயிருந்தார்கள். அசோகன் புத்த சமயத்தைச் சேர்ந்தவன். புத்தசமயத்தை உலகமெங்கும் பரப்ப அவன் அதிகம் முயற்சிசெய்தான்.

ஒருமுறை தீசன் விலை உயர்ந்த பல இரத்தினங்களையும், எண்வகையான முத்துக்களையும், வலம்புரிச்சங்கொன்றையும் தனது மந்திரிமார்களில் நால்வர்மூலம் அசோகனுக்கு அனுப்பினான். அவர்களும் அசோகனது அரண்மனையை அடைந்து, அவற்றை அவன் முன்னிலையில் வைத்து அடிபணிந்து நின்றார்கள். மன்னனும் மனமகிழ்ச்சியுடன் அவற்றை ஏற்றான். ஆருயிர் நண்பனான தீசனுக்குப் பிரதியுபகாரமாகக் கங்காதீர்த்தம், பொற்பாதகுறடு, இரத்தின கிரீடம் முதலிய பொருட்களை அம்மந்திரிமார்மூலம் அனுப்பினான். இப்பொருள்களைவிட ஒரு கடிதமும் அனுப்பினான். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

இலங்கை வேந்தனும் தேவப்பிரிய தீசனின் திவ்விய சமுகத்திற்கு;-

ஆருயிர் நண்ப!

நீவிர் அனுப்பிய மதிப்பதற்கரிய இரத்தினாதிகளைப்பெற்றேன். அவற்றிற்காக எனது மனமுவந்த துதியைச் செலுத்துகின்றேன். இவற்றிற்கு யான் செய்யத்தகும் கைமாறு யாது? ஒன்றுமே இல்லை. பிரிய நண்ப! யான் நீர்க்குமிழிபோல் நிலை இல்லாத இவ்வுலக இன்பங்களை எல்லாம் நீத்துப் புத்தபெருமானிடத்திற் சரண் புகுந்து விட்டேன். எனது பிரசைகளும் அப்பெருமானையே சரண் அடைந்து விட்டார்கள். நீவிரும் உமது செல்வம் மிக்க பிரசைகளும் புத்த பிரானிடத்திலேயே அடைக்கலம் புகுவீராக. அடைக்கலம் புகுந்து ஆன்ம ஈடேற்றம் அடைவீர்களாக. புத்தபெருமானின் அரியதருமங்களையெல்லாம் நுமக்கு உபதேசிக்க எனது மகனும் மிகுந்தனை அனுப்புகிறேன்.

இங்ஙனம்,
நுமது பிரிய நண்பன்,
அசோகன்.

தீசன் கடிதத்தை வாசித்துத் தன் நண்பன் கூறிய புதுச்சமயத்தைப்பற்றி அறிய ஆவலாயிருந்தான்.

### II தீசன் மிகுந்தனைச் சந்தித்தல்.

வழக்கப்படியே ஒருநாள் தீசன் வேட்டைக்குப் புறப்பட்டான். பல இடங்களிலும் வேட்டையாடிக் கடைசியாய் மிகுந்தலை மலைக்கு வந்தான். அம்மலைச்சாரலில் ஓர் அழகிய ஆண் மானைக்கண்டான். அரசன் உடனே வில்லை எடுத்தான்; வளைத்தான்; நாண் ஏற்றினான். மானைக்கொல்வதற்குக் குறிவைத்தான். ஆனால் மான் மலையின் சிகரம் நோக்கி ஓடியது. தீசனும் பின் தொடர்ந்தான்.

பிள்ளைகளே! அரசன் கண்டது ஓர் மானன்று. ஒரு தேவதையே அவ்வடிவங்கொண்டது.

மிகுந்தலை மலையின் சிகரத்திலே மிகுந்தனும் அவனுடன் இந்தியாவிலிருந்து கூடவந்தோரும் தங்கியிருந்தார்கள். அவர்களிடத்தில் தீசனை அழைத்துச் செல்வதற்காக அம்மான் வந்தது.

மானின் பின்னே சென்ற அரசனும் மலைச்சிகரத்தை அடைந்தான். மானைக் கொல்வதற்கு அம்பைவிட்டான். உடனே மான் மஞ்சள் அங்கி தரித்த ஒரு "பிக்கு"வின் முன் சென்று மறைந்தது. அப் பிக்கு தன் கைகளை உயர்த்தி "தீசனே இங்கே வா! என்று அழைத்தது".

தீசன், மான் மறைந்ததையும், மஞ்சள் அங்கி தரித்த ஒருவன் தன் பெயரைச்சொல்லி அழைப்பதையும் பார்த்து அதிசயித்தான். உடனே வில்லையும் அம்பறாத்தூணியையும் நிலத்தில் வைத்தான். வைத்துவிட்டு மிகுந்தனை நோக்கிச்சென்று, "நீ யார்? இங்கு எப்படி வந்தாய்?" என்று வினவினான்.

அதற்கு மிகுந்தன், "நான் அசோகனின் மகன். நீங்கள் அனுபவிக்கும் துன்பத்தை நீக்கவே இங்கு வந்தேன்," என்று சொல்லிப் பின்னும் கூறுவான்; "மகாராஜனே! நான் எப்படி இங்குவந்தேனென்று கேட்கின்றாயா? நான் நிலத்தினாலாவது அல்லது நீரினாலாவது வரவில்லை. இப்படிவந்தேன்" (ஆகாயமார்க்கமாய் வந்தேனென்று ஆகாயத்தைக் காட்டினான்).

உடனே அரசன் பிரமித்து "அசோகனது இராச்சியத்தில் மஞ்சள் அங்கி அணிந்தவர்கள் இன்னும் அநேகர் இருக்கின்றார்களா?" என்று கேட்டான். அதற்கு மிகுந்தன், "ஆம், அது மஞ்சள் அங்கிகளால் நிறைந்திருக்கின்றது" என்று உத்தரஞ்சொன்னான்.

இவற்றையெல்லாம் கேட்ட அரசன் பரவசமாயினான். வில்லை எறிந்தான்; வேட்டையை வெறுத்தான்; தன்னைமறந்தான்; மிகுந்தனின்முன்னே சித்திரப்பாவைபோல் அசைவற்றிருந்தான். மிகுந்தனும் தீசன் புத்தசமயத்தனாயினான் என்று மனமகிழ்ச்சி அடைந்தான்.

அரசனுடன் வேட்டைக்குச்சென்றவர்கள் காட்டில் அதிகதூரம் அலைந்து திரிந்து கடைசியாக மலையின் உச்சியை அடைந்தார்கள். தமது அரசன் வழக்கத்துக்குமாறாக மஞ்சள் அங்கிதரித்த ஒருவனுக்குமுன் பாவைபோலிருந்து அவனுடைய சொற்களைக் கேட்பதைக் கண்டார்கள்.

தீசன் தன்னுடன் வந்தவர்களுக்கு ஒரு பிரசங்கம் செய்யும்படி மிகுந்தனை வேண்டினான். அப்படியே மிகுந்தனும் ஒரு பிரசங்கம் செய்தான். அது மிகவும் வசீகரமாயிருந்தது. ஆதலினால், அரசனும் அவர்களைச் சேர்ந்தவர்களும் இன்னும் அநேக பிரசங்கங்களைக் கேட்க விரும்பினார்கள். அரச குடும்பத்திற்கும் சனங்களுக்கும் பிரசங்கஞ்செய்யுமாறு மிகுந்தனும் கூடவந்தோரும் அநுராதபுரிக்கு அழைக்கப்பட்டனர்.

### III. இலங்கையிற் புத்தசமயம் பரவுதல்

அநுராதபுரியிலுள்ள அரசமாளிகையில் மிகுந்தன் பல பிரசங்கங்களைச் செய்துவந்தான். ஒவ்வொரு நாளும் பிரசங்கத்தைக்கேட்கச் சனங்கள் முன்னிலு மதிகமாக வந்தனர். அரண்மனையில் இடமில்லாதிருந்தது. ஆகையினால், மகாமேகமென்னுந்தோட்டம் மிகுந்தன் பிரசங்கஞ்செய்வதற் களிக்கப்பட்டது. சிறிதுகாலத்துட் தீசனும், சுற்றத்தாரும், பிரசைகளும் புத்தசமயத்தைச் சேர்ந்தார்கள்.

மிகுந்தன் தன்னுடைய சீவிய காலத்தில் இலங்கையைவிட்டுப் போகவில்லை. இங்கே தங்கி அநேக சிங்களரையெல்லாம் புத்தபிக்குளாக அபிஷேகஞ்செய்தான். அரசனது தம்பியின் மனைவியான அனுலையும், அவளது தோழிமார் 500 பேரும் பிக்குணிகளாக விரும்பினர். ஆனால் மிகுந்தனுக்குப் பெண்களைப் பிக்குணிகளாக அபிஷேகம் செய்யும் உரிமை இல்லை. ஆகையினால் தனது சகோதரியான சங்கமித்தையை இந்தியாவிலிருந்து அழைக்கும்படி தீசனுக்குச் சொன்னான்.

உடனே தீசன் அசோகமன்னனுக்குத் தன் மருகனான அரித்தனைத் தூதனுப்பினான். அசோகன் தன் அருமைமகளையும், மகனுடன் பிரிவதைக்குறித்துச் சிறிது மனம் வருந்தினானாயினும், அவளை இலங்கைக்கு அனுப்பினான். சங்கமித்தை வரும்பொழுது வெள்ளரசு மரத்தின் கிளையொன்றைக் கொண்டுவந்தாள். அவ்வெள்ளரசமரத்துக்குக் கீழ்த்தான் புத்த பகவான் ஞானமபெற்றார். அக்கிளை அநுராதபுரியிலுள்ள மகாமேகத் தோட்டத்தில் நாட்டப்பெற்றது. அது வளர்ந்து இப்பொழுது ஒரு பெரிய மரமாயிருக்கிறது. உலகத்திலுள்ள பழைய மரங்களில் அதுவுமொன்று.

தீசன் புத்தசமயத்தில் அதிகம் பற்றுள்ளவனானான். மகாமேக நந்தவனத்தையும் புத்தகுருமாருக்கு அளித்தான். பின் இலங்கை புத்தசமயத்திற்குத் தானமானதைக் குறித்து ஒரு விழாக் கொண்டாட ஒழுங்குசெய்தான். விழாவிலன்று, அரசன் ஒரு பொற்கலப்பையில் தன் பட்டதயானைக ளிரண்டைப் பூட்டினான். தனது கையினால் கலப்பையைப் பிடித்துப் பட்டினத்தைச் சூழ ஒரு வட்டம் செய்தான். இதற்குள் மகாமேக நந்தவனமும் சேர்க்கப்பட்டது. இவ்வட்டத்திற்குள் உள்ள நிலங்கள் புத்தகுருமாருக்கும், கோயில்கள் கட்டுவதற்கும் விடப்பட்டன. அரசன் பின்னே பல பிக்குகளும், சனங்களுஞ் சென்றனர். பெண்கள் கலப்பையா லுண்டாக்கிய சாலில் பூக்களைச் சொரிந்தார்கள். வட்டத்தின் இரு அந்தங்களும் சேர்ந்தபொழுது சனங்களெல்லோரும் "சாது, சாது" என்று சத்தமிட்டார்கள்.

தீசன் தன்னாற் கூடியமட்டும் புத்தசமயத்திற்காக வுழைத்தான். மகாமேகத் தோட்டத்தில் வெள்ளரசுக் கிளைக்கருகிலே தூபராம சமாதியைக் கட்டினான். இதுவே இலங்கையிற் கட்டப்பட்ட முதற்சமாதி. "இசுறுமுனியா" என்னும் அரிய கோயிலை ஒரு கற்பாறையிற் குடைவித்தான். இவற்றைவிட மிகுந்தலை மலையிலுள்ள குகைகளைச் செப்பனிட்டு பிக்குகளின ஆச்சிரமமாக்கினான். மிகுந்தனும் அவனுடைய பிக்குகளும வசிப்பதற்கு மகாவிகாரையைக் கட்டினான்.

தீசன் தன் காலம் முழுவதையும் புத்தசமயத்திற்காக மாத்திரம் செலவழித்தானல்லன். சனங்களுக்கு நன்மை பயக்கும் பல்வேறு அரும் பெருஞ் செயல்களையெல்லாம் புரிந்தான். நெற்செய்கையை ஊக்கப்படுத்துவான் கருதி, தீசவாவிபோன்ற பல குளங்களை வெட்டுவித்தான்.

அவன் ஆட்சிசெய்த 40 வருடமும், பிரசைகள் சமாதானமாகவும், சந்தோஷமாகவுஞ் சீவித்தனர். மிகுந்தன, சங்கமித்தை என்போரும் இலங்கையிலேயே யிருந்தனர். இருந்து புத்தசமயத்தை விருத்திசெய்து ஈற்றில் அரசனின் தம்பியான உத்தியன் ஆட்சிசெய்த காலத்தில் இம்மண்ணுலக வாழ்வினின்றும் நீங்கினர்.

(தொடரும்)

இந்திய வங்கி லிமிற்றெட்
THE INDIAN BANK Ltd.
[Incorperated in British India in 1907]

ஷ வங்கியின் கிளை ஸ்தாபனம் ஒன்று சென்ற யூன்மீ 13உ வியாழக்கிழமைதொடக்கம் யாழ்ப்பாணம் பெரியகடையில் எஸ். கே. கந்தையாச் செட்டியார் கட்டட மேல்மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறதென்பதை யாவருக்குந் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.

(2) 2-6-35.

அறிவித்தல்

தமது தேட்டத்தைக் காசாக வைத்திருந்து விரையஞ்செய்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

கிளிநொச்சியில் நீர்ப்பாய்ச்சலும் மற்றும் சகல வளங்களும் அமையப்பெற்ற 150 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. ஒருமித்தோ அன்றி 10 ஏக்கர் துண்டுகளாகவோ விற்கப்படும். முழு விபரத்திற்கும் எழுதவும்.

No. 30, C/o The Eelakesari,
Chunnakam.

(15) 4-8-35—2

ஒல்லும் வகையா னறவினை யோவாதே, செல்லும்வா யெல்லாஞ் செயல்.

# சுற்றுடல்.

—"வாராந்தன்."

### கடவுள் அகப்பட்டுவிட்டார்

கடவுள் அகப்பட்டுவிட்டார். என்செய்யலாம்! அவரும் கூடியளவு ஒழித்துத் திரிந்துபார்த்தார். முடியவில்லை. அவரால் மனிதனின் கண்ணுக்கும் அகப்படாதிருக்கமுடியுமா? பிராமணர்களைத்தவிர, நந்தனர்போன்ற அநேகமுனிவர்கள் இவரைக்கண்டது உண்மையானாலும் அவை சரித்திரக்கதைகளாம். வங்காளத்தில் வசிக்குமொருவர் தான் கடவுளைக்கண்டது மாத்திரமல்லாது கோலிவூட் என்னுமிடத்தில் அவரைப் படமபிடித்துக் கொடுக்கவு மியலுமென ரவீந்திரநாத்தாகூருக்கு ஓர் கடிதமெழுதியிருக்கிறாராம். ஆகையால் கடவுள் கோலிவூட்டிலிருந்து கைலையங்கிரி முதலியவிடங்களுக்குத்தாண்டமுன்னர் விரும்பியவர்கள் அங்குபோய்ப் பார்த்துக்கொள்ளலாம்.

* * *

### படம் பிடித்தபின்............

இவர் தாகூரைக் கேட்டுக்கொண்டது கோலிவூட்டுக்குப்போகப் பிரயாணச்செலவு மாத்திரம் கொடுக்கவேண்டுமென்பதே. ஆனால் கடவுள் கண்கட்டிவித்தையிற் பேர்போனவர். ஆகையால் நல்லதிறம் "கமரா" ஒன்றுங் கேட்டுவேண்டிக்கொண்டு போகும்படி சொல்லிவிடுவோம். மற்றைய பிரமாணங்கள் என்னவென்றால் கடவுள் நடிக்கும் படக்காட்சியால்வரும் வருவாயில் 25 வீதம் தாகூருக் குரியதென்பதும், அந்தப் படக்காட்சியில் தோன்றும் மற்றைய நடிகர்கள் "உண்மையாகக் கற்புள்ள கன்னிகைகளாயும் தனிமையாக வசிப்பவர்களாயு" மிருக்கவேண்டுமென்பதாம். இதிலேற்படும் கஷ்டமொன்றுளது. அதாவது கடவுளைப் படம்பிடிப்பதிலும்பார்க்க "உண்மையான கற்புள்ள கன்னிகைகளை" ஆராய்ந்து கண்டுபிடிப்பதே. இலங்கைக்கும் இந்தப் படக்காட்சி ஒருமுறையாவது வரவேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.

* * *

### ஆடி அமாவாசை

மேற்படி தினம் சென்ற திங்கட்கிழமை இவ்வருடத்திலும் வந்து சென்றுவிட்டது. இந்துக்களுக்கு இதோர் பெருந் துக்கத்துக்குரிய தினமாகும். இறந்தவர்களின் ஞாபகம் அன்று யாவர் மனதிலு முதிக்குமல்லவா? இந்த ஆடி அமாவாசையும் திவசத்திதிகளும் வராவிட்டால் இறந்துபோனவர்களைப் பற்றிச் சிந்திப்பதும் அரிதுதான். அரிதினுமரிது ஒருநேரம் பசியிருப்பது. ஆகையால் இத்தினங்களுக்கு நல்வரவு கூறவேண்டும். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் இதுதான் கடைசி விடுதலை. இனி வருவது நத்தார் விடுதலையே. இவ்வருடம் ஒன்பது விடுதலைகள் ஒன்றின்பின்னொன்றாகத் திங்கட்கிழமைகளில் வந்ததும் அவர்களின் அதிஷ்டந்தான். நத்தார் இவ்வருடம புதன்கிழமையில் வருமென்பதை எதிர்பார்க்கவேண்டியதில்லை.

* * *

### பெரும் பிழைதான்

ஆடி அமாவாசை இந்துக்களுக்குப் பெருந்துக்கத்துக்குரிய நாளென்று ஒரேமுறையில் யோசனையில்லாது கூறிவிட்டது பெரும் பிழைதான். நான் இந்துக்களென்றபோது பிராமணர்களைபபற்றி யோசிக்கவில்லை. அவர்கள் கடவுளுக்குக் கிட்டுமானமாகவிருக்கும்போது என்ன மதம்? அவர்களுக்கு மதமில்லாவிட்டால் அவர்கள் இந்துக்களல்லர் என்று கூறுதலும் ஒக்கும். அதெப்படியிருந்தாலுஞ்சரி. ஆனால் அன்று அவர்களுக்குமொரு சந்தோஷந்தான்! துயில்விட்டெழும்போது அவர்கள் குபேரனிலேயே விழித்திருக்கவேண்டும். கீரிமலைக் கடலோரத்தில் வேள்விக்கு பொங்கல் பானைகள் வைத்ததுபோல் அங்கு மிந்த மெங்கும் ஒவ்வொரு பிராமணர்கள் குந்தியிருந்தார்கள். அன்று உஷ்ணம் அதிகம். ரவி அம்புகூட இவர்களது திருமேனியிற் றைக்கவில்லை. இவர்களிடத்தில் ஒவ்வொரு அணுவீதம் எத்தனை அணுக்கள் வந்து சேர்ந்தனவோ தெரியவில்லை.

* * *

### மந்திரமாவது நீறு

மந்திரமாவது நீறு என்ற உண்மை ஆடி அமாவாசைத்தினத்தன்றே விளங்கவந்தது. பிராமணர்கள் சங்கற்பஞ்செய்யும்போது ஏதோ மந்திரத்தை உச்சரித்துக்கொண்டே திருநீறு கொடுப்பார்கள். ஆனால் அன்று மந்திரம் உச்சரிக்க இவர்களுக்கு முடியுமா? ஒருவ ரிருவரா? ஓராணு, ஈராணுவா? ஆகையால் சுருங்கச்சொல்லில "மந்திரமும் தந்திரமும் நீறுதான்" என்றவிதமாக மனதில் எண்ணிக்கொண்டு தம்மிடத்தில் வந்து கொண்டிருப்போரைப் பிராக்காகப் பார்த்தவண்ணம்பையிலிருக்கும் திருநீற்றைப் பணம்பெற்றதும் கிள்ளியெறிவார்கள். இந்த நீற்றை மணலுள் விழவிடாது கைகளிற் பெற்றுக்கொள்வது வேண்டுபவர்களின் கடமையாகும். ஆகையால் இவர்களின் மந்திர—மா—அது—நீறுதான.

* * *

### வெளியாயின

அரசினர் கணக்குப் பரிசோதனைத் தலைவரின் அறிக்கை சென்ற கிழமை வெளியிடப்பெற்றது. அவர் கண்டுபிடித்திருககும் சிலவிஷயங்கள் மிகப் புதினமாகவேயிருக்கிறது. நான்கு றெயில்வண்டிகளைக் காணவில்லையாம். புகைரதப்பகுதித் தலைவர் இந்த வண்டிகளைக் காட்டிக்கொடுப்பவர்களுக்கு ரூபா பத்து இனும் அளிப்பதாக விளம்பரஞ் செய்திருக்கிறாராம். ஆனால் புகைரதவீதியிலிருநது இந்த வணடிகளைக் களவாடித் தெருவீதிகளாற் கொண்டுசெல்லமுடியுமா? நிற்க, ஒரு உத்தியோகஸ்தர் தமக்கு மேல் பதவியிலிருந்த ஒருவரின் மனைவிக்கு 1000 ரூபா உபகாரமாக கொடுததாராம். இந்த உத்தியோகத்தருக்கு வேலைதள்ளுப்பட்டது மாததிரமலலாது அந்த ஆயிரம் ரூபாவும் அரசினருக்கு இனமாக வருமானத்துடன் சேர்க்கப்பட்டதாம். வேலையில்லாத் திண்டாட்டமும் பணக் கஷ்டமுமிருக்கு மிக்காலத்தில் இதுபோனற விஷயஙகளை ஊக்கப்படுததுவது உசிதமல்லவா?

* * *

(ஒரு வீட்டில்)

மாமி: உன்னிடத்தில் இன்று சமைக்கும்படி தம்பி கூறிவிட்டுச் செல்லவில்லையா?

மருமகள்: இல்லை, அவர் என்னுடன் கதைக்கிறதில்லை.

* * *

(ஒரு கோட்டில்)

நீதிபதி: இங்கு இவ்வளவு புத்தகங்களுடன் சட்டம படிக்க வந்தீரா?

நியாயவாதி: இல்லை ஐயா, தங்களுக்குப் படிப்பித்தற்காக வந்தேன்.

# இந்தியச் செய்திகள்

### லாகூரில் அமைதி

சென்ற சிலநாட்களாகப் பள்ளிவாசலொன்று இடிக்கப்பட்டதன் காரணமாக எழுந்த கலகம் இப்போது சாந்தியடைந்து வருகின்றது. மிக விழிப்பாகவிருந்து தமது கடமையைச் சென்ற பதினைந்து நாட்களாக இரவும் பகலும் நடத்தி யலுப்படைந்த உத்தியோகத்தர் சிறிது ஆறுதல் பெற்றனர். எப்படியாயினும் ஜில்லா நீதிபதி அந்த இடத்திலேயே வசிக்கின்றனர். பட்டாளத்தினரும் சந்திக்குச் சந்தி நிறுத்தப்பட்டே யிருக்கின்றனர். மகமதியர் ஓர் பெரிய கூட்டங் கூட்டிச் சிலதீர்மானங்களை நிறைவேற்றியுள்ளார். இடிக்கப்பட்ட பள்ளிவாசல் இருந்தவிடம் தமக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென ஒரு தீர்மானமுந்நிறைவேற்றப்பட்டது. அந்த இடத்தில் பழையபடி ஓர் பள்ளிவாசல் அமைப்பதே மகமதியரின் நோக்கம். சீக்கியர் இதற்கு இடங் கொடுப்பாரா வென்பது இன்னோர் கேள்வி. இப்போது இக்கலகத்தில் ஈடுபட்டுச் சிறைத்தண்டனை பெற்றோரை விடுதலைசெய்யும்படியும், துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந்தோரின் குடும்பத்தினர்க்கு உதவிசெய்வது அரசினர் கடனென்பதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டனவாம்.

### ஒரு பெரியாரின் உருவச்சிலை

தென்னிந்தியாவில் மிகப் பிரசித்திபெற்று வாழ்ந்தவராகும் திரு. Dr. S. சுப்பிரமணியஐயரின் உருவச்சிலை சென்னைச்சர்வகலாசாலைக்கு அணித்தாகச் சென்றவாரம் நிறுத்தப்பட்டது. இச்சிலை 13,000 ரூபா செலவிட்டு அமைக்கப்பட்டது. இப்பெரியாரைப்பற்றி அறியாதாரில்லை. இவர் மிகக் கீழ்நிலையிலிருந்து அதி உயர்ந்த பதவியை அடைந்தவர். சென்னை உயர்தர நீதிமன்றத்தில் முதல் நீதிபதியாகச் சில வருடங்களாகக் கடமை பார்த்தவர். உபகாரச்சம்பளம் பெற்றபின் காங்கிரஸ் சபையுடன் சேர்ந்துழைத்தவர். கல்வியின் விருத்திக்காகவும் உழைத்தவர். சென்னைச் சர்வகலாசாலையின் அதிபராகச் சிலகாலம் கடமையாற்றியவர். இப்பெரியாரின் ஞாபகார்த்தமாக இச்சிலை நாட்டப்பட்டது பெரிதும் ஏற்ற விஷயமே.

### காங்கிரஸ் கட்சியினர் உத்தியோகம் ஏற்பதா?

புதிய அரசியற்றிட்டம் அனுசரணைக்கு வருங்கால் அப்போது தெரிவுகள் சட்டசபைகட்கு ஏற்படும்போது காங்கிரஸ் கட்சியினரும் கலந்து கொள்வதாக முன்னரே முடிவுசெய்துள்ளார். மந்திரிப்பதவிகள் வழங்கப்படினும் தாம் அதை அங்கீகரிப்பதில்லை எனவும சொல்லியுள்ளார். ஆனால், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவராகும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியும் வேறு சிலரும் சேர்ந்து மந்திரிப்பதவி முதலியன வழங்கப்படின் பெற வேண்டுமென வாதிக்க ஆரம்பித்தனர். இவ்விஷயம் காங்கிரஸ்காரிய நிர்வாகசபையினரால் நெடுநேரமாகச்சென்ற புதன்கிழமை விவாதிக்கப்பட்டது. இவ்விஷயம்இப்போதுமுடிவுசெய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லையென்றும் அடுத்த காங்கிரஸ்சபைக் கூட்டத்தில் முடிவுசெய்யப் படலாமெனவுந் தீர்மானிக்கப்பட்டது.

இப்போது அனுட்டானத்துக்கு வரவிருக்கும் அரசியற்றிட்டம் உபயோகமற்றதெனை யாவருமறியச்செய்வதற்குச் சட்டசபையில் ஸ்தானம் வகித்து அதை எதிர்ப்பது மாத்திரம் போதாது; மந்திரிப்பதவியை ஏற்று வகித்துச் சங்கடங்களை உண்டாக்கி விடுவதே ஏற்றமுறையென்பது சத்தியமூர்த்தியின் அபிப்பிராயம்.

### மறுபடியும்

அரசியலில் ஈடுபடாது சில காலத்துக்கு விலகியிருக்க வேண்டுமென முடிசெய்துள்ள ஸ்ரீமான் C. இராஜகோபாலாச்சாரியார் மறுபடியும் அரசியல் விஷயங்களில் கலந்துகொள்ளப் போகின்றாரெனக் கேட்டுச் சந்தோஷமடைகின்றோம். இந்திய காங்கிரஸ் தலைவர்கள் கேள்விப்படியே இவர் மறுபடியும் காங்கிரஸ்தொண்டில் கலந்துகொள்ள ஒருப்பட்டாரென அறிகிறோம். அடுத்தவருடக் காங்கிரஸ் தலைவராக இவரே தெரியப்படவேண்டுமெனக் காங்கிரஸ் நிர்வாக சபையினர் குறிப்பிட்டிருப்பதாக அறிகின்றோம். சுயநலங்கருதாது அநேக வருடங்களாகத் தொண்டாற்றிய இவர் பெரிதும் சன்மானிக்கப்படுவது முறையே. இவர்போன்றோர் தேசத்தொண்டில் ஈடுபட்டுழைப்பது காங்கிரஸ்சபைக்குப் பெரியபெலமே.

### சட்டமாகின்றது

இந்திய அரசியற் றிட்டம் இப்போது தேசாளுமன்றத்தில் பிரபுக்கள் சபையினரால் விவாதிக்கப்பட்டு முடிவாயிற்று. சிற்சில திருத்தங்களையே பிரபுக்கள் ஏற்படுத்தியுள்ளார். சென்ற வியாழக்கிழமை கடைசியாக விவாதிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை (2-8-35) அரசர் பெருமானின் அங்கீகாரம் பெறலாயிற்று. இப்போது இந்த அரசியற்றிட்டம் சட்டமாயிற்று. இது எவ்வாறு இந்தியாவில் ஏற்கப்படுமோவென்பது காலத்திலேயே அறியலாகும்.

### விடுதலையாயினர்

சென்ற 3 வருடமாக நீதிமன்றத்தில் விளங்கப்படாது பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தவராகும் திரு. சறற் சந்திர வஸு அவர்கள் இப்போது விடுதலையாக்கப்பட்டனர் எனக்கேட்டுச் சந்தோஷமடைந்தோம். இவர் சுபாஷ் சந்திர வஸு அவர்களின் சகோதரர். இந்தியச்சட்டசபையின் பிரதிநிதியாக முன்னர் தெரியப்பட்டவர். இவர் அந்த ஸ்தானத்தை வகிக்க உத்தரவளித்தாரில்லை. அதினிமித்தம் அந்த ஸ்தானத்தினின்றும் விலகிவிட்டனர். அவர் இடத்துக்கு நிர்மல சந்திரர் என்பவர் தெரியப்பட்டனர். இப்போது மறுபடியும் இந்திய சட்டசபையில் அங்கத்துவம் வகிக்கும்படி கேட்டதும் அவர் அதற்கு மறுத்துவிட்டனர். அதற்குக் காரணம் அவர் தாயாரும் சகோதரியவர்களும் நோய்வாய்ப்பட்டிருக்கின்றமையே. அவர்கள் பக்கத்தினின்று வேண்டிய உதவிகள் செய்யவேண்டியிருக்கிறதாம். இவ்வரிய காங்கிரஸ்வாதி அராஜக முயற்சியில் ஈடுபடாதவர்; உண்மையாளர் என்பதையறிய அரசினர்க்கு இவ்வளவு காலஞ்சென்றது நூதனமாகின்றது.

### புத்தகாயா

புத்தகயா ஆலயபரிபாலனத்தைக்குறித்து முடிவுசெய்யும்படி ஏற்பட்ட சபையினர் தமது அறிக்கையை வெளியிட்டுள்ளார். அது இந்து மகாசபையாராலும் புத்தசமயப் பிரதிநிதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாம். இவ்வாலயம் நான்கு இந்துக்களின் பிரதிநிதிகளும் நான்கு புத்தசமயப் பிரதிநிதிகளும் சேர்ந்த சபையாரால் பரிபாலிக்கப்படவேண்டுமென அச்சபையினர் பிரேரித்துள்ளார். மேலும் அச்சபையின் தலைவர் ஓர் இந்து மந்திரியாக இருக்கவேண்டுமாம். இந்த ஒழுங்கினைச் சனாதனதர்மக் கட்சியினரும் தற்போது மேற்படி ஆலயத்தைப் பரிபாலிக்கும் மஹந்துவும் ஏற்றுக்கொள்ளின் எல்லாம் சமாதானமாக முடியுமெனக் கூறப்படுகின்றது.

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னாகம்:
யுவ௵ ஆடி௴ ௨௰௳

## பரஸ்பர நட்பே வேண்டப்படுவது.

இந்தியா—இலங்கை ஆகிய இருநாடுகளும் எத்தனையோவிஷயங்களில் மிகவும் ஒருப்பாடுடையனவாயிருக்கின்றன வென்பதும், மேலும் இவ்விருநாடுகளும் நிரந்தரமான நன்மையை அடையவேண்டின் தமக்கிடையிலுள்ள நம்பிக்கையையும் நட்பையும் விருத்திசெய்யவேண்டுமென்பதும் யாவரும் அறிந்த உண்மையாகும். சென்ற சிலவாண்டுகளாக இவ்விருநாட்டினர்க்கு மிடையில் சில விஷயங்களில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டமை காரணமாகச் சிறிது துவேஷம் ஏற்பட்டுளதாகும். பொதுவாக இருவர்க்கிடையிலாயினென்—இரு கூட்டத்தவர்க்கிடையிலாயிலென்-இருநாட்டிற்கிடையிலாயிலென் துவேஷம்ஏற்படின், அதற்கு மூலகாரணம் யாதென நாம் நுணுகி ஆராய்ந்து பார்த்தால், அது பொருட்செல்வம் காரணமாக எழுந்ததாகக் காணலாம்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பொருள்கள் மிக அனேகமாகும். இலங்கையில் வந்து தமது ஜீவனோபாயத்துக் குழைக்கும் இந்தியர் தொகையும் சிறிதன்று. ஆனால், இதற்குப் பதிலாக இலங்கை வாசிகள் இந்தியாவிலிருந்து பெறும் நன்மைகளோ மிகச் சிலவென்றே கூறவேண்டும். இலங்கையின் அரசியலை நடாத்தும் மந்திரிமார் இவ்விஷயங்களைக் கண்டு பொறாராய் இந்தியர்க்கு மாறாகச் சிற்சில விஷயங்களைச் செய்ய முற்பட்டனர். அவர் முயற்சிகள் இலங்கையின் பொதுநன்மைக்குப் பெரிதும் உதவியாகுமாவென்பதும் இங்கு ஆராயற்பாற்று. மிக உயர்ந்த அரசாங்க உத்தியோகமெனப்படும் C. C. S. பதவிக்கு இந்தியர் சேர்க்கப்படாது நீக்கப்பட்டனர். புதிதாகச் சென்ற வருடம் இலங்கை யரசாங்கசபையில் நிறைவேற்றப்பட்ட நிலச்சட்டத்திற்கு (Land Bill) அரசரின் அங்கீகாரமும் பெறப்பட்டது. இச்சட்டப்படி இந்தியர் இலங்கையில் நிலங்களை விலைக்குப் பெற்றுக் குடியேறவியலாதவராவர். இந்தியாவிலிருந்து இறக்கப்படும் அநேக பொருள்களில் தீர்வைவரி கூட்டப்படுவதாயிற்று. சமீபத்தில் நெல்லிலும் வரி கூட்டப்பட்டது. விஷயமிவ்வாறாக, இந்தியர் இலங்கைவாசிகள்மீது துவேஷங்கொள்ளாதிருப்பாரா?

இலங்கைக்குள் வருடாவருடம் இறக்குமதியாகும் பொருள்களுக்காக, இந்தியாவிற்கு இலங்கையிலிருந்து செல்மதியாகும் பணம் அதிகமென்பது உண்மையே. அதனைக் காரணமாகக்கொண்டு நீதி கடந்து நாம் குரோதம் கொள்ள வேண்டியஅவசரம் எதற்கு? எமது உபயோகத்துக்கு அவசியமானபொருள்கள் இலங்கையில் பெறவியலாதாயின் பிறநாடுகளிலிருந்தே பெற வேண்டும். எமக்கு வேண்டிய பொருள்களை நாம் நமதுநாட்டில் பெறக்கூடுமாயின் அது பெரு நன்மையே. அப்படியல்லாக்கால் வேற்று நாடுகளிலேயே பெறவேண்டும். இந்தியாவில் மாத்திரமா நாம் பொருள்களைப் பெறுகின்றோம்? இங்கிலாந்திலிருந்து பெறவில்லையா? யப்பானிலிருந்து பெறவில்லையா? அந்நாடுகள் எங்களுக்கு விசேஷமாக ஏதாவது உபகாரம் அளிக்கின்றனவா? அதிக பொருள்களை இந்தியாவிலிருந்து பெறுவதற்காக அந்நாட்டவர் தமது நாட்டின் நன்மையைக் கருதாது எமது நாட்டின் விருத்தியில் கண்ணுங் கருத்துமாக இருக்கவேண்டுமென்ற நியதி எப்படியுண்டாகும்?

இந்தியாவின் மேலைக் கடற்கரையில் தென்னைப் பண்டங்கள் அதிகமாக உளதாகவும், அவைகளைச் சீர்ப்படுத்தி அங்கேயே விலைப்படச் செய்வதற்கு வசதிகள் இருப்பவும், இலங்கையிலிருந்து இந்தியாவிற்குள் தேங்காய் நெய்யும் கொப்பறாவும் அதிகமாக ஏற்றுமதியாய்வருகின்றது. இலங்கையிலிருந்து வெளியே ஏற்றுமதியாகும் கொப்பறா, தேங்காய்நெய் என்பவற்றுள் நூற்றுக்கு எழுபத்தைந்து வீதம் இந்தியாவிற்கே அனுப்பப்படுகின்றது. இதைக்கண்டு திருவாங்கூர் அரசினர் மிகவும் ஆத்திரமுடையராய்த் தமது நாட்டினது தென்னைப் பண்டங்களை விருத்தி செய்யும் நோக்கங் கொண்டு இலங்கையிலிருந்து இந்தியாவிற்குள் இறக்கப்படும் கொப்பறா முதலியவற்றில் விதிக்கப்படும் வரியைக் கூட்டும்படி கேட்கின்றனர். இவ்விஷயம் இந்திய அரசினரின் ஆலோசனையிலிருக்கின்றது. தீர்வைவரி விரைவில் கூட்டப்படுமென்பது நிச்சயமாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு கூட்டப்படின் இலங்கை வாசிகள் பெரிதும் நட்டமடைவரென எடுத்துக்காட்டப்படுகின்றது. இலங்கையில் நெல்விருத்தியை நாடி அதில் விதிக்கப்படும் தீர்வைவரி கூட்டப்பட்ட பிரகாரம் இந்தியாவிலும் அவ்வூர்த் தென்னைப் பண்டங்களின் விருத்தியை நாடித் தீர்வைவரி கூட்டப்படுகின்றது. இவ்விஷயங்களை நோக்கி எது சரி எது பிழையெனத் திடமாக யாரால் கூறவியலும்? இவ் விருநாடுகளும் எப்போதும் நட்புடன் வாழவேண்டுமென்பதே எமது வேண்டுகோள். நட்புக்குப் பங்கமேற்படின் இருநாடுகளும் பெரு நட்டத்தையடையவேண்டிவருமென்பது சொல்லாமலேவிளங்கும். இலங்கைத்தேசமானது தொழில்விருத்தியில் இன்னும் சிறிதாவது முன்னேறாது இருக்கும்வரையில், மற்றை நாட்டவர்களுடன் முரண்படுவது போற்றப்படத் தக்கதன்று. இலங்கையில் எத்தொழில்தான் பூரண நிலையை அடைந்துளது. எல்லாப் பொருள்களும் பிறநாட்டிலிருந்தே எமக்கு வரவேண்டி யிருக்கிறது. இந்தியாவில் தொழிலாளர்கள் பெறும் சம்பளத்துக்கும் இலங்கையில் தொழிலாளர்கள் பெறும் சம்பளத்துக்கும் மிக வித்தியாசமுண்டே. கூலிகள் மலிந்த இந்தியாவில் பெறப்படும் பொருள்களுடன் கூலிகள் கிராக்கியாகும் இலங்கைப் பொருள்கள் போட்டிசெய்யஇயலுமா? இந்தியா ஒரு பெரிய நாடு. பல பொருள்களும் அங்கிருந்தே இலங்கைக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகையால் இந்தியர்மீது துவேஷம் பாராட்டுவது சிறிய நாட்டவராகும் இலங்கைவாசிகட்குப் புத்தியும் அழகுமல்ல. ஆகையால் இலங்கை யரசினரும் இந்திய அரசினரும் நட்புமுறையில் அரசியலை நடத்திச் செல்வதே வேண்டப்படுவது. அபிப்பிராயபேதம் ஏற்படினும் அவைகளை நன்காராய்ந்து சீர்படுத்திக் கொள்வதே முறை. அவ்வாறன்றி ஆத்திரப்பட்டு நிதானந் தவறி முட்டான வழிகளைக் கடைப்பிடித்தால் ஈற்றில் பெரு நட்டமடைவோர் பொது சனங்களே. ஆகையால் விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்த்து ஏற்றதை இருதேச அரசினரும் செய்வாராக.

## விசேஷ உரிமைகள் வேண்டுமா?

அரசாங்கசபை யங்கத்தினர் தமக்கு விசேஷ உரிமைகள் அளிக்கப்படவேண்டுமென விருப்பங் கொண்டு ஒரு புதிய திட்டத்தை அரசாங்கசபையில் நிறைவேற்ற முற்பட்டுள்ளார். அரசாங்கசபை யங்கத்தவர் சாமானியமானவர்கள் போலிராது விசேஷ உரிமைகளை உடையராயிருப்பது அவசியமெனக் கூறப்படுகின்றது. அவ்வுரிமைகள் பிறிட்டிஷ் தேசாளுமன்றத்து அங்கத்தவர் அனுபவிக்கும் உரிமைகளைப்போலாக வேண்டுமெனவும் சொல்லப்படுகின்றது. இலங்கை அரசாங்கசபையும் அதன் அங்கத்தவரும் பிறிட்டிஷ் தேசாளுமன்றத்திற்கும் அதன் அங்கத்தவர்க்கும் நிகராக வைக்கப்படலாமா? என்பது பிரதானமான கேள்வியாகின்றது. அரசாங்கசபையங்கத்தினர்க்குச் சில உரிமைகள் அளிக்கப்படவேண்டுமென்பது அவசியந்தான். அரசியற் குறைகளைச் சிறிதும் பயப்படாது எடுத்துக் கூறும் உரிமை இவர்க்குண்டு. உண்மையாயிலென்? பொய்யானாலென்? உத்தியோகத்தரைப் பற்றி ஏதாவது குறைகளிருந்தால் வெளியாகக் கூறி விசாரணை செய்யலாம். இவ்வாறன்ன பொதுசன நன்மைக்குரியனவாகும் உரிமைகள் இவர்கட்கு இருக்கவேண்டுந்தான்.

ஆனால் அங்கத்தவர் தாம் செய்யும் சில அநீதிகளைப் பாதுகாத்தற்காக சட்டங்களை ஏற்படுத்துவதை நாம் அங்கீகரிக்கவியலாது. கடன்காரராகும் சில அரசாங்கசபையங்கத்தவர் தம்மைப்பாதுகாக்க முயல்வது நகைப்புக்கிடமாகின்றது. அரசாங்க சபையிலிருக்கும்போதும், அரசாங்க சபையிலிருந்து வீட்டிற்குப் போகும் போதும், வீட்டிலிருந்து அரசாங்க சபைக் கூட்டத்திற்குவரும்போதும், அரசியல் விஷயமாகச் செல்லும்போதும் அரசாங்கசபை யங்கத்தவர்கள் நீதிமன்றத்தின் உத்தியோகத்தரால் தடைசெய்யப்படாதிருக்க வேண்டுமெனப் புதிய திட்டம் கூறுகின்றது. தாம் பெற்ற கடனை மரியாதையாகத் திருப்பிக் கொடுக்க வியலாவிடின், அரசினரைக் கொண்டு சட்டமியற்றி அதற்குள் மறைவது வெட்கத்தைக் கொடாதா? கடன் திருப்பிக் கொடுக்க வியலாதவர்க்கு அரசாங்கசபையில் அங்கத்துவம் எதற்கு? தமது மரியாதையைப் பாதுகாப்பதற்கு வேண்டுமாயின் சட்டங்களை இயற்றலாம். ஆனால் அநீதிகளைச் செய்வதற்கும் செய்யுங்கால் தப்பிக் கொள்ளுதற்கும் சட்டமியற்ற அரசாங்கசபையினர் தாமாக முயன்று நிற்பது போற்றக் கூடியதாயில்லை. இப்போது அரசாங்கசபையினரின் பெருமையைக் காப்பாற்றுவதற்காக இருக்கும்சட்டங்கள் போதுமானவையே. புதிதாக ஏன் அவசரமின்றிச் சட்டங்களை இயற்றவேண்டும்? பிறிட்டிஷ் தேசாளுமன்றத்தில் சங்கடங்கள் எழுந்தபோது புதுச் சட்டங்கள் காலத்துக்குக் காலம் இயற்றப்பட்டன. அவ்வித சங்கடங்கள் இல்லாக்கால் நூதனமுறையில் சட்டங்கள் இலங்கையில் இயற்றப்படுவது அவசியமின்று. பொதுவாக நீதிமன்றத்தில் பரிபாலிக்கப்படும் நீதி யாவர்க்கும் சமமானதாயிருக்கவேண்டும். அப்படியன்றி அரசாங்கசபை யங்கத்தவர்க்கு விசேஷ உரிமைகள் அளிக்கப்படுவதை நாம் கண்டிக்கின்றோம். அரசாங்கசபையங்கத்தவரின் உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்படவேண்டுமோ அவ்வாறாக பொது சனங்களின் உரிமைகளும் கடமைகளும் இனி நடைபெறக்கூடியதாக வசதி தேடவேண்டாமா? இதை சிறிது பாதிக்கப் பார்ப்பது பெருந்தன்மையாகாது.

## சென்னையிற் காலஞ்சென்ற யாழ்ப்பாணப் பெருமகன்

சென்னையிலுள்ள பச்சையப்பன் கல்லூரியின் பிரதம ஆசிரியராக விருந்து இளைப்பாறியவரும், சிறந்த கல்விமானுமாகிய ராவ்பகதூர் K. சின்னத்தம்பியாபிள்ளை அவர்கள் தமது 66வது வயதில் சென்ற சனிக்கிழமை (27-7-35) சென்னையிலுள்ள தமது இல்லத்தில் காலஞ் சென்றுவிட்டனரென அறிந்து மிகத் துயரமடைந்தோம். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள பருத்தித்துறைப் பகுதியைத் தமது ஜெனனவூராக உடையவர். சென்னைச் சர்வகலாசாலையில் B. A. பட்டம் பெற்றுப் பின் கோயம்புத்தூரிலுள்ள லண்டன் மிஷன் வித்தியாசாலையில் ஆசிரியராக இருந்தவர். பின் 18[illegible]0-ம் ஆண்டு தொடக்கம் 1915-ம் வருடம் வரையும் சென்னைக் கிறீஸ்தவ கல்லூரியில் உதவிக் கணித போதகாசிரியராக விருந்தவர். 1915-ம் வருடம்தொடக்கம் 1926-ம் வருடம் வரையும் பச்சையப்பன் கல்லூரியின் பிரதம கணித போதகாசிரியராகவும், பின் 1926-ம் வருடம் தொடக்கம் 1935-ம் வருடம் தை மாதம் வரையும் மேற்படி கல்லூரியின் பிரதமாசிரியராகவும் இருந்தவர். இவரடைந்த பெருமைகள் யாழ்ப்பாணத்துக்கும் உரிமை யுடையனவே. சென்னைச் சர்வகலாசாலையின் அதிகார சபையிலும், பரீட்சகர் சபையிலும் ஒரு அங்கத்தவராக இருந்தவர். இவருக்கு நான்கு குமாரர்களும் நான்கு பெண்மகவுகளும் உள. இவருடைய மூன்று சகோதரர்கள் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்றனர். திருவாளர்கள் K. கனகசபை அவர்களும், K. அருளம்பலம் அவர்களும் நியாய துரந்தரராக அதி கீர்த்தி பெற்று விளங்குகின்றனர். நில அளவு உத்தியோகத்தர் K. கணபதிப்பிள்ளையவர்களும் இன்னொரு சகோதரர். இப்பெரியாரை யிழந்து துன்புறும் புத்திரர் முதலியோர்க்கு நமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

## வித்தியாதிகாரியை ஏமாற்றிய வாலிபன்

சென்ற அக்டோபர் மாதம் 11-ந் தேதி அச்சுவேலியைச் சேர்ந்த ஆடெல் செல்லப்பா என்பவர், யாழ்ப்பாணத்திலுள்ள சமாதான நீதிபதியாகிய திரு மோசெஸ் முன்பாக தான் ஈ எஸ். எல். சீ. பரீட்சையில் தேறாதிருக்கவும், தேறியதெனவும், தற்போது சென்பற்றிக்ஸ் கல்லூரியில் லண்டன் மற்றிக்குலேஷன் வகுப்பில் படித்துவருவதாகவும் பொய்ச் சத்தியஞ் செய்தாரெனவும், தான் 1931ம் ஆண்டில் மேற்படி பரீட்சையில் தேறிவிட்டதற்காகக் கொடுக்கப்பட்ட தராதரப் பத்திரம் தவறிவிட்டதாகவும் கூறி, அந்தத் தராதரப்பத்திரத்தின் பிரதியொன்றைத் தனக்கு அனுப்பிவைக்கும்படி வித்தியாதிகாரிக்குப் பொய்யான மனுவொன்றை அனுப்பினாரெனவும் கொழும்புப் பொலிஸ்கோட்டில், தொடரப்பட்ட வழக்கில் எதிரி தான்குற்றவாளியென ஒப்புக்கொண்டதின்பேரில் நீதிபதி எதிரிக்கு 100-ரூபா அபராதமும் கோடுகலையும்வரை சிறைத்தண்டனையும் விதித்தார். ந. நி.

மனத்துக்கண் மாசில னாதலனைத்தறம், ஆகுல நீர பிற.

# சிரேஷ்ட பாடசாலைத் தராதர பத்திரப் பரீட்சைப்பேறு.

## (S. S. C. 1935)

### அனுராதபுரம்

கொழும்புத்துறை சதனுபாடசாலை; AT 8 கொன்ஸ்ரன்ரைன் J.

மன்னார் குட்செட்பேட் ஆண்பாடசாலை; AT 11 சந்தியாகு N, 12 செபஸ்தியாம்பிள்ளை S.

வங்காலை 14 சில்வா S S.

### வதுளை.

டம்பத்தனை கலவன்பாடசாலை BE 3 யோன் A P.

### மட்டக்களப்பு

எருவூர் (பெரியதெரு) A V B பாடசாலை; BS 4 காழிக்குட்டி M.

கழுவஞ்சிக்குடி A V M பாடசாலை; B S 6 தெய்வநாயகம் K, 7 மயில்வாகனம் V.

காத்தான்குடி ஆண்பாடசாலை; B S 9 தம்பிராசா S, 13 கந்தையா T, 16 தம்பிராசா V.

பத்தாலை செயின்யோன்ஸ் பாடசாலை, BS26 சாமித்தம்பி K, 29 துரையப்பா V, 30 குழந்தைவேலு K.

ஆனைப்பந்தி இந்துக்கலவன் பாடசாலை; B S 34 நாகையா S,

காத்தான்குடி விவேகானந்த வித்தியாசாலை; BS 37 வேலுப்பிள்ளை M,

காரைதீவு இந்து ஆண் பாடசாலை; BS 41 ஆமது S, 46 மகாதேவன் V, 49 கனகநாயகம் P.

அரசடி சாதனுபாடசாலை; BS 55 கனகசபை V, 58 சிமியோன் D, 59 முருகுப்பிள்ளை E, 61 அரசரத்தினம் I, 64 அழகையா R.

கழுதவலை மெ. கலவன்பாடசாலை; BS66 கணபதிப்பிள்ளை S, 69 சுப்பிரமணியம் V, 72 அழகையா P, 77 சிவசங்கரப்பிள்ளை S.

பெரியகல்லாறு M B; BS 86 தம்பிராசா M.

சிங்களவாடி M M; BS 97 கந்தையா V.

சென் மேரி சாதனுபாடசாலை; BT 13 சபாரத்தினம் V, 15 காசித்தம்பி S, 17 யாக்கோப் E, 20 நாகமணி K, 21 சோமநாதர் U, 22 யோன்பிள்ளை S, 24 அலோசியஸ் M, 25 தியாகராசா E. 26 அந்தோனி F, 27 மத்தேயுஸ் S G, 29 மகமத்தம்பி M, 30 இளையதம்பி S, 31 இளையதம்பி M.

ஆனைப்பந்தி இந்து கலவன்பாடசாலை BT 39 இராசம்மா C.

கல்லடி உப்போடை விவேகானந்த வித்தியாசாலை; BT 40 நாகரத்தினம் K.

கல்முனை விடுதிப் பெண்பாடசாலை; B T 43 கனகேஸ்வரி N, 44 சிதேவிப்பிள்ளை S, 47 சினிப்பிள்ளை K, 48 முத்துநாச்சி K.

கழுதவெலை மெதடிஸ் கலவன்பாடசாலை; BT 51 நேசம்மா P.

### சாவகச்சேரி

A M சாதனுபாடசாலை CH 3 குருசாமி S, 4 கிருஸ்ணபிள்ளை P. M, 5 இளையப்பா N, 6 முத்துத்தம்பி M, 17 சிதம்பரப்பிள்ளை S, 21 செயினுலத்தீன் P, 30 பிச்சைத்தம்பி N, 32 அந்தோனிமுத்து N, 33 சின்னத்துரை S, 36 கந்தசாமி N, 41 வேலுப்பிள்ளை S V, 45 முருகேசு K. 46 பொன்னையா V, 52 அருணசலம் P,

கல்வயல் இ க பாடசாலை CH 52 அருணசலம் P

மட்டுவில் கமலாசனி CH 59 பொன்னுத்துரை, 64 முருகேசு M, 68 குமாரசாமி K,

மீசாலை வீரசிங்கவித்தி. CH 70 செல்லையா K, 73 கணபதிப்பிள்ளை S

சங்கத்தானை இ க பாடசாலை CH 80 உமாமகேஸ்வரம் K, 91 வீரகத்தி V, 95 பொன்னுத்துரை K

சார்தாவிலையம் வயாவிளான் CH 117 இராமலிங்கம் S

### கொழும்பு

கொக்குவிலை ஆ. பாடசாலை CB 1-(8129) உசேன் A L M

சிலாபம் சென்மேரி CB 6 பெரேரா W P C

கிரியெல்லை க பாடசாலை CB 9 தம்பிப்பிள்ளை S

காலிரோட் வெள்ளவத்தை CB 15-(11626) கந்தையா V

மூளாய் சைவப்பிரகாசவித்தியாசாலை CB 17 இராமலிங்கம் S

தொண்ட்ரா (Dondra)

டிக்வெலை A V DT 2 முகம்மது A R N

### யாழ்ப்பாணம்

சிவியாதெரு ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை J 6 பூதத்தம்பி V

உடுவில் துவி பா பெண் பாடசாலை J 17 கந்தையா S, 20 இராமசாமி M, 21 இராசா E, 22 நாகலிங்கம் T, 23 சுப்பிரமணியம் G, 24 இமானுவெல் R A, 26 தம்பிப்பிள்ளை P, 27 இராமநாதன் D A, 29 இரத்தினம் S

கொழும்புத்துறை இ க பாடசாலை J 33 இராசம்மா S

வேம்படி விடுதிப்பெண் பாடசாலை J37 சின்னப்பு K, 40 கனகசபை N A S, 43 ஆள்வாப்பிள்ளை S, 46 சின்னத்தம்பி S, 48 பொன்னையா S,

இளவாலை கொன்வென்ற் பாடசாலை J 49 இசிடோர் M, 51 சாமுவேல் T, 52 அந்தோனிப்பிள்ளை M, 53 வைத்தியாம்பிள்ளை M.

யாழ்ப்பாணம் கொன்வென்ற் பாடசாலை J 55 ஈஸ்பரம் M, 56 சபாபதி A, 58 யேம்ஸ் M E, 60 சவரிமுத்து N, 62 முருகர் R, 63 யாக்கோப் A.

சில்லாலை R C M பாடசாலை J 65 செபஸ்தியாம்பிள்ளை A, 66 மரியாம்பிள்ளை M V, 67 பிருஸ்பிள்ளை R.

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் பாடசாலை J 70 சிவகாமி S.

இராமநாதன் சாதனுபாடசாலை J 76 கண்மணியம்மா K, 87 சின்னப்பிள்ளை P, 96 சின்னம்மா S, 99 காசிப்பிள்ளை V, 102 லக்குமிஅம்மை M.

கோப்பாய் சாதனுபாடசாலை: JA3 நடேசு S, 7 நாகலிங்கம் S, 10 நல்லையா S, 11 முத்தையா K, 12 இராசதுரை N, 14 தெட்சிணாமூர்த்தி E, 16 காசிநாதன் V, 19 நடராசா N, 22 சிவசிதம்பரம் K

வளலாய் A. M. M.: JA32 அருளையா S, 33 கந்தசுவாமி N, 34 பொன்னுத்துரை V.

கோண்டாவில் சைவவித்தியாசாலை, JA36 நவரத்தினம் P, 37 கந்தையா T: 38 வேலாயுதம்பிள்ளை M, 40 கெங்காதரம் K, 42 சிவப்பிரகாசம் S.

நீர்வேலி இந்து கலவன்பாடசாலை: JA44 கந்தையா T, 48 சிங்கராசா B, 51 நடராசா M.

JA67 மயில்வாகனம் P, சுதுமலை தெற்கு மானிப்பாய்.

கோப்பாய் C. M. S. பெண்பாடசாலை: JA79 அப்பாத்துரை K, 80 வல்லிபுரம் P, 82 துரையப்பா P, 88 தானியேல் G P, 89 சீனிவாசகம் S, 90 பொன்னையா S.

ஏழாலை தெற்கு A. M. M.: JB2 (11632) பொன்னையா E. J.

சேணியதெரு சைவபாடசாலை: JB5 இராசையா V, 6 தியாகராசா S, 9 சின்னத்தம்பி K, 11 விசுவலிங்கம் N.

கொழும்புத்துறை சாதனுபாடசாலை: JB22 சின்னையா S. G., 26 நாகலிங்கம் A, 28 தியாகராசா M, 29 குறூஸ் A. S., 30 ஆறுமுகம் M, 33 பஸ்தியாம்பிள்ளை G, 34 அடைக்கலமுத்து S, 37 சவரிமுத்து M, 39 அலோசியஸ் M. S., 40 அந்தோனிப்பிள்ளை M. R., 41 பேரம்பலம் T, 44 குசைப்பிள்ளை S, 45 கருணனந்தம் N, 47 அந்தோனிப்பிள்ளை S.

JB48 (E5340) மரியாம்பிள்ளை T, நெடுந்தீவு நடுக்குறிச்சி. R C

அளவெட்டி நாகபூஷணி வித்தியாசாலை: JB52 கந்தையா V, 53 சோமசுந்தரம் S, 55 பொன்னம்பலம் S, 56 இராசநாயகம் S, 58 தருமலிங்கம் S.

அளவெட்டி சீனங்கலட்டி: JB60 கந்தையா K, 61 மகேசன் R. J., 64 சிவலிங்கம் T.

காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் பாடசாலை: JB67 கந்தையா P, 69 ஆறுமுகம் P, 71 கந்தையா S.

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை: JB82 காசிப்பிள்ளை V, 84 தங்கவேல்நாதர் V, 86 கிருஷ்ணபிள்ளை M, 89 பெருமயினார் S, 91 கந்தையா P, 94 விசுவநாதர் S, 105 கந்தசாமி K, 106 ஆறுமுகம் S.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை: JB109 கந்தசாமி S, 110 மாணிக்கம் K, 118 நவரத்தினம் M.

விளிசிட்டிகலவன்பாடசாலை: JB135 வேலுப்பிள்ளை S.

தெல்லிப்பளை கலவன்பாடசாலை: JC2 செல்லையா A, 5 செபமாலை A, 7 கார்த்திகேசு M, 13 சின்னத்துரை V.

புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை: JC 24 சின்னத்தம்பி K 27 சோமசுந்தரம் N, 28 செல்லத்துரை V.

JC 35 இரத்தினையா K, இளவாலை R C.B.; 46 ஆறுமுகராசா S, சுதுமலைமத்தியகலவன்பாடசாலை;47 இராசதுரை V, சுதுமலை மத்தியகலவன்பாடசாலை; 59 சுப்பிரமணியம் N, 3ம் கட்டையடி கல்வியங்காடு; 62 செல்லத்துரை K, பளவழவு ஏழாலைமேற்கு; 65 செல்லத்துரை K, கட்டுவன் தெல்லிப்பளை; 67 ஆறுமுகம் S, சிவானந்த ஆச்சிரமம் சங்கானை; 75 (5455) கந்தசாமி K, நவாலிவடக்கு மானிப்பாய்; 77 செல்லத்துரை S, பண்டத்தரிப்பு; 89 அப்பாத்துரை S, அளவெட்டிதெற்கு, 92 விஸ்வநாதன் S, சந்தன்புளியடி காரைநகர்.

### கண்டி

KF13 பொன்னையா T. V., பெற்றறைசோ தோட்டம்.

### ஊர்காவற்றுறை

வேலணை A. M. M: KS2 இராசரத்தினம் S, 3 இராசரத்தினம் K, 10 இரத்தினகோபால் M.

வேலணை சரஸ்வதிவித்தியாசாலை KS15 சிதம்பரப்பிள்ளை K, 16 முத்தையா K 17 இராசரத்தினம் S, 18 நமசிவாயம் S 20 செல்லத்துரை Y.

KS24 மகாலிங்கம் K. S., வேலணை மேற்கு; 25 கனகசுந்தரம் C, இணுவில் சுன்னகம்.

வேலணை A M M பாடசாலை: KS 27 உருக்குமணி M, 30 மங்கைபற்கரசி P, 33 யொசேப்பின் M M

நாரந்தனை R C G பாடசாலை: KS 35 றெலீனு A, 39 (20521) பஸ்தியாம்பிள்ளை A.

### மாத்தளை.

சென்யோன்ஸ் தோட்டம் கந்தப்பொலைப் பாடசாலை ML 1 முத்தலாகு P.

### நீர்கொழும்பு.

கடற்கரைத்தெரு R C பாடசாலை ND14 பெரேரு W M E

சென்மேரி ஆண்பாடசாலை NT 8 தாமெல் W J F

### பையாக்கலை,

கலோடன் தோட்டப் பாடசாலை PP 1 கோயில்பிள்ளை D J S

### பருத்தித்துறை.

வதிரி தேவரையாழிச்சைவபாடசாலை PT 16 சிவகுரு S

தும்பளை மெதெடிஸ் பாடசாலை PT 24 (16087) வேலுப்பிள்ளை S

வதிரிதெற்கு R C M பாடசாலை PT 26 கந்தசாமி V, 27 சதாசிவம் R, 28 சந்திரசேகரம் V.

கரணவாய்வடக்கு சைவப் பாடசாலை PT 32 சிவப்பிரகாசம் A, 33 சபாரத்தினம் M, 34 கந்தையா V, 35 இராமலிங்கம் K, 39 சுப்பிரமணியம் N, 40 சின்னத்தம்பி V, 41 சின்னத்தம்பி E, 42 சோமாஸ்கந்தமூர்த்தி P, 44 முத்துலிங்கம் K, 47 சிவசுப்பிரமணியதாஸ் M, 49 கந்தப்பு S

கரணவாய் வேதாரணியேஸ்வரவித்தியாசாலை PT59 அம்பிகாபதி A.

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாசாலை; PT63 அருணசலம் M, 64 ஆள்வாப்பிள்ளை K, 68 சின்னத்துரை S.

வராத்துப்பளை மத்திய பாடசாலை PT76 சிற்றம்பலம் K, 77 நாகலிங்கம் V, 80 வேலு மயிலன் K, 81 சின்னத்துரை S, 83 கந்தையா M S.

வல்லுவெட்டித்துறை சிவகுருவித்தியாசாலை; PT91 சிவலிங்கம் S.

உடுப்பிட்டி கைத்தொழிற்பாடசாலை; PT 112 வைரமுத்து P, 119 சின்னத்தம்பி R.

கட்டைவேலி மெதெடிஸ்பாடசாலை; PT120 நல்லம்மா S.

கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாசாலை; PT123 சின்னத்துரை K.

### இரத்தினபுரி

நிரியெல்லைதோட்டம் நிவிற்றிக்கலை; RT2 தேவதாசன் K.

### திருநெல்வேலி

ஏழாலை A V M பாடசாலை TN2 (15244) பரமானந்தர் K, 3 விஸ்வலிங்கம் P, 7 செல்லையா M, 8 இரத்தினம் சி. 19 இரத்தினம் S.

இடைக்காடு புவனேஸ்வரி வித்தியாசாலை; TN24 சோமசுந்தரம் R, 27 நமசிவாயம் S. 28 செல்லத்துரை T, 29 மாப்பாணர் V, 30 சின்னையா V, 31 வேலுப்பிள்ளை K, 32 ஆறுமுகம் M, 34 கந்தையா N, 35 ஆறுமுகம் C, 36 கந்தையா A, 39 செல்லமுத்து C.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை; TN41 சுப்பையா S, 48 பொன்னம்பலம் V, 49 நவரெத்தினம் R, 51 சந்திரசேகரம்பிள்ளை P

சிறுப்பிட்டி சைவ வித்தியாசாலை; TN58 செல்லத்துரை E.

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை; TN60 ஆள்வாப்பிள்ளை V, 62 கோவிந்தசாமி S, 66 தம்பிப்பிள்ளை R, 67 தனிநாயகம் A, 68 ஐயாத்துரை S, 69 சிற்றம்பலம் N, 70 தம்பித்துரை S, 72 செல்லையா K, 73 ஏரம்பமூர்த்தி V, 74 ஐயம்பிள்ளை N.

திருநெல்வேலி இந்து கலவன்பாடசாலை; TN80 ஐயாத்துரை S.

அளவெட்டிச் சதானந்த வித்தியாசாலை; TN85 அருணசலம் N.

சுன்னகம் சைவவித்தியாசாலை TN 87 இளையப்பா N, 90 மாணிக்கர் E, 91 குருசாமிஐயர் M, 92 பொன்னுத்துரை T, 93 செல்லத்துரை V.

குரும்பசிட்டி மகாதேவ வித்தியாசாலை; TN104 தில்லையம்பலம் P, 106 சுப்பையா M, 107 சுப்பிரமணியம் M, 108 செல்லையா K, 109 வன்னியசிங்கம் V, 111 செல்லையா E.

TN 118 (12 683) கந்தசாமி C. உடுப்பிட்டி வல்லுவெட்டித்துறை;

TN 119 சுப்பிரமணியம் K. விளிசிட்டி, தெல்லிப்பழை;

TN 120 அருணசலம் S, கொக்குவில் மேற்கு;

TN 124 தம்பிராசா S, குப்பிளான், சுன்னகம்;

TN 129 பேரம்பலம் K, சுதுமலை வடக்கு, மானிப்பாய்;

TN 131 நடராசா T, இணுவில், சுன்னகம்;

அளவெட்டி சதானந்த வித்தியாசாலை; TN 135 செல்லாச்சி K.

### திரிகோணமலை

தோப்பூர் கலவன்பாடசாலை; TR 4 (17052) கணபதிப்பிள்ளை N.

மூதூர் சென் அந்தோனி கலவன் பாடசாலை; TR 7 கணபதிப்பிள்ளை V.

மெயின் ஸ்ரீட் ஸ்கூல் திரிகோணமலை; TR 10 செஜரத்தினம் K, 13 மாணிக்கவாசகர் S. T.

விடுதிப்பெண்பாடசாலை; TR 16 சிதம்பரப்பிள்ளை S.

### வெலிகம

WF 1 ஹமீம் M. L. M. புதுத்தெரு வெலிகம;

### வென்னப்புவ

சென்மேரி தமிழ்ப்பாடசாலை; WG4 பெரேரா W. V.

போளவத்தை R. C. சிலாபம்; WH3 பெர்னன்டோ A, 6 லோயி P.H.

## மாணவரும் ஆசிரியரும் மாண்டனர்

சென்ற செவ்வாய்க்கிழமையன்று காலை மட்டக்களப்புக் கடலில் குளிக்கச்சென்ற சென்.மேரிபோதனுமுறைப்பாடசாலை மாணவர்களான, 17 வயதுள்ள தம்பிமுத்து துரைராஜா என்பவரும், 18 வயதுள்ள சபாநாயகம் என்பவரும் ஆழமான தண்ணீரில் தத்தளிப்பதை கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாசாலை உபாத்தியாயரான 28 வயதுள்ள திரு. தி. தில்லைநாயகம் என்பவர் கண்டார்.

திரு. தில்லைநாயகம் உதவிக்குச் சென்று துரைராஜாவைப் பிடித்துக் கரைக்கு இழுத்துவந்தார். வரும்போது ஒரு பெரிய அலை இருவரையும் இழுத்துச் சென்றுவிட்டது. சபாநாயகம் என்னும் வாலிபனும் நீரின் வேகத்தில் இழுத்துச்செல்லப்பட்டார்.

தருமஞ் செய்பவன் மனமாசற்றிருக்கக் கடவன். அவ்வளவே அறம்.

# உலக அரசியற் போக்கு.

அபிசீனியாவுக்கும் இத்தாலிக்குமிடையில் ஏற்பட்ட பிணக்கு ஈற்றில் யுத்தத்தை வருவிக்கும்போ லிருக்கிறது. சர்வதேச சங்கத்தின் முடிவுகளைத் தாம் ஏற்க முடியாதென முன்னர் கூறிய முசோலினி பின் அதற்கு உடன்பட்டுள்ளாராக அறிவித்தார். இப்போது மறுபடியும் பழைய பாடத்தையே படிக்கின்றார். "இத்தாலி ஒருபோது சர்வதேச சங்கத்தை அணைந்து நிற்கும், அல்லது ஒருபோது பிரிந்து நிற்கும், அல்லது ஒருபோது அதற்கு மாறாகச் செல்லும்" என முசோலினி கூறுகின்றார். மேலும் தமது குடியேற்றநாடுகளின் பாதுகாப்பு விஷயங்களைத் தாமே முடிவுசெய்ய வேண்டுமென்று இத்தாலிய சர்வாதிகாரி முசோலினி கூறுகின்றார். * *

சர்வதேச சங்கம் சென்ற புதன்கிழமை கூடியது. அப்போது பின்வரும் விஷயங்கள் பிரேரிக்கப்பட்டது.

(1) சமாசத்தை எப்படியாவது இருநாடுகட்கிடையிலும் நாட்டவேண்டும்.

(2) இம்முயற்சி நடக்குங்கால் எக்கட்சியினராவது யுத்தம் ஆரம்பிக்கக்கூடாது.

(3) 1906-ம் வருடத்தின் உடன்படிக்கையில் சம்பந்தப்பட்டுள்ள நாடுகள் (பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, அபிஸீனியா) சமாசமுயற்சியில் பங்குபற்ற வேண்டும்.

(4) புதிதாக இன்னொருதேசப் பிரதிநிதி சமாசத்தை ஒழுங்குசெய்ய நியமிக்கப்படவேண்டும்.

இந்தப் பிரேரணைகளில் இத்தாலியரும் அபிஸீனியரும் தமது எண்ணத்தை வெளிப்படுத்தும்படி கேட்கப்பட்டிருக்கின்றனர். * * *

அமெரிக்க அரசினர் அபிஸீனியாவுக்கு உதவிசெய்ய விருப்பங் காட்டிய உத்தியோகத்தருக்கு அங்கு செல்ல உத்தரவளித்துள்ளார். இவர்கள் அபிஸீனிய பட்டாளத்தில் பொறுப்பான பதவிகளை வகிக்கும் ஆற்றல் பெற்றவர். மேலும் யுத்தம் ஏற்படின் யுத்தத்தில் காயமடைவோரைத் தூக்கிச் சென்று வைத்திய உதவிகள் செய்யும் சங்கத்தினர் அமெரிக்காவிலிருந்து அபிஸீனியா செல்வாராம். இவ்வாறு அமெரிக்கர் அபிஸீனியருடன் நட்புப் பாராட்டுவதைக் கண்டு இத்தாலியர் கொதிப்படைகின்றனர்.

* * *

இத்தாலியர் யுத்தத்திற்கு ஆரம்பித்த நாள்முதலாக அபசகுனங்கள் ஏற்பட்டவாறுயிருக்கின்றன. இத்தாலிய படையினர் அபிசீனியாவுக்குப் புறப்படுங்கால் அவர்கட்குத் தைரியமொழி சொல்லச்சென்ற முசோலினியின் ஆகாயக்கப்பலில் இடியேறு விழுந்தது. இத்தாலியர்க்குச் சொந்தமான இறற்றீறியாவில் இப்போது சூரியவெப்பம் மிக அகோரமாயிருப்பதால் அநேக இத்தாலிய போர்வீரர் நாள்வீதம் இறக்கின்றனராம். இப்போது சமீபத்தில் ஓர் குண்டுத் தொழிற்சாலையை இத்தாலிய அரசினர் தாம் நடத்துதற்காக ஏற்றனர். ஏற்று ஒரு வாரத்துள் அங்கே ஓர் குண்டுவெடித்து நெருப்புப்பற்றிக்கொண்டதால் வெகு சேதம் ஏற்பட்டது. 50 பேர் இறந்தனர். அத்தொழிற்சாலைக் கட்டடத்தின் பலகணிகள் வெகுதூரத்துக்கப்பால் எறியப்பட்டதாம். பிணங்களும் அவ்வாறே எறியப்பட்டுப் பொறுக்கி எடுக்கப்பட்டனவாம். அங்கே வேலைசெய்த 500 பேரில் இறந்தோர்போக மிகுதியானோர் காயமடைந்தனராம். இப்படியிருக்கின்றது இத்தாலியின் ஆரம்ப முயற்சிகள். * * *

மஞ்சூரியாவுக்கும் ருஷியாவுக்குமிடையிலுள்ள எல்லைப்புறத்தில் தமது காவற்காரர் கொல்லப்பட்டதைக்குறித்து ருஷியர் யப்பானியர்க்கு அனுப்பிய நிருபத்துக்கு யப்பானியரிடமிருந்து பதில் கிடைத்துவிட்டது. அது பின்வருமாறு :-

"நாங்கள் இவ்வாறு விஷயத்தை நன்கு ஆராய்ந்தோம். யப்பானியர் இதில் ஈடுபட்டதற்குச் சிறிதும் ஆதாரங்கிடையாது" இத்துடன் ருஷியர் அடங்கவேண்டியவரே. யப்பானியரைப் பயமுறுத்திக் காரியம்பார்ப்பது எப்படிக்கூடும்? * *

முசோலினியின் யுத்தத் திமிருக்கும் அகங்காரத்துக்கும் அளவில்லைப்போலும். சமீபத்தில் அவர் கூறியதாவது:- "சிறிதும் நாகரீகமடையாத நாடுகள் சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் பெறவும், பெரிய வல்லரசுகளாகும் இத்தலி போன்ற நாடுகளைக் குற்றஞ்சாட்டி வழக்குகள் கிளப்பி அவ்வல்லரசினருடன் சமத்துவம் பாராட்டி நிற்கவும் காலமாச்சுதே. இதற்கெல்லாம் சர்வதேச சங்கம் இடங்கொடுப்பதா?" இவ்விதம் இவரைப்பேசச்செய்யும் யுத்தவெறி எப்போது நீங்குமோ? மேலும் ஐரோப்பியர் கறுப்பர்களைத் திருத்துந்தொழிலைக் கையேற்றுள்ளனரென்றும், அதையே தாமுஞ் செய்வதாகவும் முசோலினி கூறுகின்றார். * * *

அபிசீனியா சர்வதேசசங்கத்தின் பாதுகாப்பில் விடப்படின் இத்தாலியுடன் ஏற்பட்டபிணக்குக் கஷ்டமின்றித்தீர்க்கப்படலாமென ஒருவித யோசனை கூறப்படுகிறது. அரசியல் அதிகாரம் அபிசீனிய அரசினர் கையிற்றான் இருக்குமாம். அந்நிய அரசினர் அந்நாட்டை அபகரிக்காது தடைசெய்வதற்கு இது ஒரு வழியென்றும் கூறப்படுகின்றது. அபிசீனிய அரசர் இந்தப் பிரேரணையை யோசிப்பதாகப் பதில்கூறினர். சர்வதேசசங்கத்தினர் அபிசீனியாவின் பொருளாதாரநிலையைச் சீர்டையச்செய்யும் நோக்கத்துடன் அப்படிச் செய்யின் தமக்குச் சித்தமென அபிசீனியவரசர் பதில் கூறினாராம். இக்தப் பிரச்சினை இத்தாலியர்க்குச் சிறிதும் பிடிக்கவில்லை. தாமே அபிசீனியாவின் பாதுகாவலராகவேண்டும் என்பது இத்தாலியின் பிடிவாதம். மற்றைய நாடுகள் இவ்விஷபத்தில் பங்குபற்றப்படாதாம்.

## பலதும்

**திரு. C. P. டி சில்வா:**—இவர் யாழ்ப்பாணம் கச்சேரியில் கடமை பார்ப்பதுடன் உதவிப் பொலிஸ் நீதிபதியாகவும் நியமனம் பெற்றிருக்கிறார்.

**திரு. K. கனகசபை:**—இவர் ஆகஸ்ட் 5-ந் திகதி தொடக்கம் 10-ந்திகதி வரையும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதியாகக் கடமைபார்க்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**திரு. V. இராமசாமி:**—இவர் அனுராதபுரப் பகுதிக்குச் சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றிருக்கிறார்.

**சேர். D. B. ஜெயதிலகா:**—இவர் செப்டம்பர் மீ 22-ந் தேதி வரையில் இலங்கைக்குத் திரும்புவாராம்.

**திரு. S. பொன்னம்பலம்:**—இரத்தினபுரி மாகாண எஞ்சினியர் கந்தோரின் தலைமைக்கிளாக்காக விருந்த இவர் மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

**நெருப்பு:**—சென்ற சனிக்கிழமை இரவு ஓட்டுமடத்தடியி லோர்கடைக்கு நெருப்பு வைத்தது காரணமாக நால்வரைக் கைது செய்திருக்கிறார்கள்.

**மரணம்:**—மயிலிட்டிதெற்கு வாசரும் சர்வகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் அப்போதிக்கரியாகக் கடமைபார்ப்பவருமான திரு. வே. கந்தையா அவர்களின் பிரியபத்தினி ஸ்ரீமதி தங்கரத்தின அம்மையார் பிரசவத்தாலேற்பட்ட நோய் காரணமாக சென்ற 30-7-35. செவ்வாய்க்கிழமை காலை மரணமடைந்தார்.

**கண்டிச் சுப்பிறீங்கோடு:**—நீதியரசர் M. T. அக்பார் அவர்கள் தலைமையில் இரண்டாம்முறை கண்டியில் குற்ற விசாரணை செய்வதற்குச் சுப்பிறீங்கோடு கூடியிருக்கிறது. இம்முறை டாப்பில் 23 கொலை வழக்குகள் விசாரணைசெய்யப் படுவதற்காகவிருக்கிறதாம்.

### தட்டாதெருவில் கத்திவெட்டு.

சென்ற 29-ந் திகதியன்று திங்கட்கிழமை இரவு தட்டாதெருவாசியாகிய ஆறுமுகப்பத்தருக்கும் அப்பாத்துரைப் பத்தருக்குமிடையில் பழைய கோபத்தின் காரணமாக ஏச்சு நடந்ததாகவும், அப்போது அப்பாத்துரைப்பத்தர் ஓர் கூரிய கொடுவாட்கத்தியை எடுத்து ஆறுமுகப்பத்தரைத் துரத்திச் சென்றதாகவும் அப்போது ஆறுமுகப்பத்தரின் சத்தத்தைக் கேள்விப்பட்ட வேலுப்பிள்ளைப்பத்தர் தம்வீட்டுப் படலையைத் திறந்து கொண்டு வெளியேவர அப்பாத்துரைப் பத்தர் எட "நீயுமா வந்தாய்" என்று கூறி அவரை வாளுக வெட்டியதாகவும், காயப்பட்டவர் ஆஸ்பத்திரியிற் சிகிச்சை செய்வித்துக்கொள்வதன் பொருட்டு எடுத்துச் சென்றதாகவும் அறியக்கிடக்கின்றது. ந. நி.

## கலம்பகம்

தற்போது இந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவரும் யப்பானிய அரசினரின் தூதருடன், யப்பானில் இந்திய வர்த்தகக் கமிஷனரை நியமிப்பதுபற்றி இந்திய வர்த்தக சங்கத்தார் கலந்து பேசுவார்களாம்.

o o o

போலிப் பட்டுச் ஜவுளிகளுக்கு அதிக தீர்வை கொடுக்காமல் இந்தியாவில் யப்பான் ஜவுளிகள் இரகசியமாக இறக்குமதி செய்யப்பட்டு வருகிறதென்றும், இதை உடனே தடுக்காவிடின் ஏறக்குறைய 46 லட்சம் ரூபா வரையில் இந்திய அரசினருக்கு நட்டம் ஏற்படுமென்றும் பம்பாய்ச் ஜவுளி வியாபாரிகள் கூறுகின்றனராம்.

o o o

பசிக்கொடுமை காரணமாகப் பெண்களும் குழந்தைகளு முட்பட 150 பேர் ராய்க்தரை என்னுங் கிராமத்திலிருந்து பர்த்வான் அரண்மனை முன் வந்து சேர்ந்திருக்கின்றனராம்.

o o o

லார்சானு ஜில்லாவைச் சேர்ந்த மோஹட் என்னும் இடத்தில் வயலில் வேலை செய்துவிட்டு ஒரு படகில் திரும்பிய 25 முஸ்லிம் விவசாயிகளுள் 5 பெண்கள் படகு கவிழ்ந்ததால் நீரில் மூழ்கி உயிர்துறந்தனர். 20 ஆடவரும் நீந்திக் கரைசேர்ந்தனராம். o o

திருச்சிக்குச் சமீபமாகவுள்ள திருவானைக்கா ஆலய உற்சவத்துக்காகச் சேர்த்து வைக்கப்பட்டிருந்த வாணங்களும், வெடிகளும் திடீரெனத் தீப்பற்றி வெடித்ததால், அவை வைக்கப்பட்டிருந்த அறையின் கதவுகளும், ஜன்னல்களும் தூக்கி எறியப்பட்டனவாம். o o o

மூராதாபர்த்திலிருந்து சென்றுகொண்டிருந்த புகைரதத்தில் பிரயாணஞ்செய்த நானிகான் என்பவரின் படுக்கைக்குக் கீழ் 12,000 ரூபா பெறுமதியுள்ள வெறிச்சத்துச் சேர்ந்த மருந்து காணப்பட்டதாம். பொலிசார் மருந்தைக் கைப்பற்றியதோடு நானிகானையும் கைதுசெய்தனராம்.

o o o

கூடலூருக்குச் சமீபமாகவுள்ள ஒரு கிராமத்தில் பெரிய தீவிபத் தேற்பட்டதால் ஒருவர் வெந்து மாண்டார். பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் சேமமடைந்தன. அந்தக் கிராமம் முழுவதும் தீயால் தரைமட்டமாக்கப்பட்டதாம். o o

சென்ற 27-ந்திகதி காலை 12-மணியளவில் கொழும்பு-கறுவாக்காட்டுத் தபாற்கந்தோருக்குச் சமீபமாக நடைபெற்ற மோட்டார்விபத்துக் காரணமாகச் சைக்கிளிற் சென்ற கோட்டையில் வசிப்பவரும், கச்சேரிக் கிளாக்காயிருந்து இளைப்பாறியவருமாகிய திரு. ராபாட் ஜெயவர்த்தனு என்பவர் அவ்விடத்திலேயே மரணமடைந்தாராம்.

o o o

பருத்தித்துறையைச் சேர்ந்த புலோலி மேற்கிலுள்ள ஆறுமுகம்-சின்னையா என்பவரும், அவரது மனைவியும், சேர்ந்து 10 வயதுடைய பாக்கியம் என்னும் தங்கள் பிள்ளையைக் கத்தியால் காயப்படுத்தினார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டனர். முதலாம் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதால், 4 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றார். 2-ம் எதிரி விடுதலைசெய்யப்பெற்றாராம். o o

சங்கரநயினார் கோயிலைச் சேர்ந்த பனையூரில் சென்ற 22-7-35 திங்கட்கிழமை இரவு ராமன் என்பவனும், அவனது மகனாகிய கந்தன் என்பவனும் நித்திரை செய்கையில், ராமன் என்பவனின் மருமகனாகிய காளியப்பன் என்பவன் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டானும்.

o o o

காந்தப்பனைத் தோட்டத்தைச் சேர்ந்த இராமசாமி என்னும் தொழிலாளி தனது மனைவியாகிய பெருமாயி என்பவளைக் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டுப் பிரேதத்தின் அருகில் நின்றுகொண்டு, வருபவர்களைக் குத்திவிடுவதாகப் பயமுறுத்தியதால், அத்தோட்ட முதலாளியாகிய திரு. ரேய் ஹெர்மன் என்பவர் அவ்விடத்துக்குச் சென்று துப்பாக்கியால் சுட்டதால் காலில் காயமுண்டாகியதாம்.

தென் மெக்ஸிக்கோவிலிருந்து நாலு கண்களையுடைய மீன்கள் நியூயார்க் நகர அமெரிக்க நூதனசாலைக்குக் கொண்டு போகப்பட்டிருக்கின்றனவாம்.

o o o

கண்டிக் கச்சேரியில் பிரதான மொழிபெயர்ப்பாளராகவிருந்து இளைப்பாறியவரான மூகாந்திரம் திரு. டி. எச். ஜே. செனிவிரத்தின என்பவர் தனது 90 வது வயதில் கல்கிசை என்னுமிடத்தில் தேகவியோகமானாராம்.

o o o

மாகும்பறை என்னுமிடத்தைச் சேர்ந்த திரு. எம். ஜாலிஸ் அப்பு என்னும் 65 வயதுடைய ஒருவர், தனது வீட்டில் நித்திரையாயிருக்கும்போது மூன்றுபேர் சேர்ந்து படுகாய முண்டாகும்படி தாக்கிவிட்டு ஓடிவிட்டனர். காயமுண்டவர் வைத்தியசாலையில் உயிர்துறந்தார். இது காரணமாக இருவர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனராம். o o o

அமெரிக்க புனருத்தாரண நிருவாக சபையின் தலைமை உத்தியோகஸ்தரான திரு. ஜேம்ஸ் ஒனியல் என்பவர் சென்ற 31-ந் தேதியோடு, தனது தலைமைப் பதவியினின்றும் விலகி விட்டாராம்.

o o o

றங்கூன் அபிவிருத்தி டிரஸ்டியின் உத்தரவுப்படி வோயல் வீதியிலுள்ள இந்து ஆலயம் ஒன்று இடிக்கப்பட்டதாம். அதிலிருந்த விக்கிரகம் டிரஸ்டியினரால் எடுத்துச் செல்லப்பட்டதாம்.

o o o

இந்துமகாசபைத் தலைவரான பொங்கி உத்தயர் நரேல் சப் டிவிஷனில் இன்னும் 20 மாதங்களுக்கு எவ்வித பிரசங்கமும் செய்யச்கூடாதென அரசினர் தடைப்படுத்தியிருக்கின்றனராம்.

o o o

இத்தாலியைச் சேர்ந்த வெரீஸ் என்னுமிடத்திலுள்ள துப்பாக்கி மருந்துத் தொழிற்சாலையில் வெடிவிபத்தேற்பட்டதால் 50 பேர் வரையில் உயிர்துறந்தனராம். o o o

மழையின்மை காரணமாக ஊவா மாகாணத்தில் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. இன்னுங் பதினைந்து இருபது நாட்கள் இப்படியிருந்தால் நகரத்திலுள்ளார்க்குத் தண்ணீர் உதவமுடியாமற் போய்விடுமாம்.

o o o

1934-ம் ஆண்டு ஜூலைமாதம் 22-ந் தேதி தன்கடமையைச் செய்கையில் குத்திக்கொல்லப்பட்டவராகிய மதுபரிபாலனப் பகுதிப் பரிசோதகராகிய திரு. கே. என். பிரின்ஸ் என்பவரின் ஞாபகச் சின்னம், சென்ற 29-ந் தேதி புல்லர்ஸ் றோட்டிலுள்ள மதுபரிபாலனப் பகுதிக் கந்தோரில், திரு. எஸ். எச். வாடியா என்பவரால் திறந்து வைக்கப்பட்டதாம்.

o o o

கொச்சிச் சமஸ்தானத்தைச் சேர்ந்த பெரும்பாவூர் என்னுமிடத்தில் இடி விழுந்ததால், நிலத்தில் 1000 அடி ஆழமும் அரைப்பெர்லாங் அகலமுமுடைய பிளவு ஏற்பட்டிருக்கிறதாம்.

o o o

இங்கிலாந்தில் 150 பெரியார்கள் சேர்ந்து சமூக சமரச சன்மார்க்க முன்னேற்றத் திட்டம் ஒன்றை வெளியிட்டிருக்கின்றனராம். o o

கொழும்பு-சொம்பனித் தெருவிலுள்ள பொன்னையா- இராசரத்தினம் என்பவர் 4 றாத்தல் கஞ்சாவைச் சட்டவிரோதமாக வைத்திருந்தாரெனக் கொழும்புப் பொலிஸ் கோட்டில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறாராம்.

### தானவரவு

சுன்னாகம் பிராசீன பாடசாலைத் தர்மநிதிக்காக வண்ணார்பண்ணை நீராவியடியிலிருக்கும் திரு. சி. தாமோதரஐயர் அவர்கள் தமது தாயாரது சிரார்த்தத்தில் வரித்துக் கொடுத்த ரூபா ஒன்று வரப்பெற்றோம்.

வி. சிதம்பரசாஸ்திரிகள்.

அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொன் னன்கு, மிழுக்கா வியன்ற தறம்.

# காந்திப் படத்தால் வாள்வெட்டாம்.

யாழ்ப்பாணம் 30

யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் பொலிஸ் நீதிபதி திரு. K. ஆள்வாப்பிள்ளை முன்பாக சென்றமேமாதம் 24-ந் திகதியன்று வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலுக்கு அருகாமையில் சரவணமுத்து-சோமசுந்தரம் என்பவரை வாளால் வெட்டிப் படுகாயமுறப்பண்ணியதாக வீராச்சாமி-சண்முகசுந்தரம் என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளிசார்பாக நியாயதுரந்தரர் திரு. K. V. சின்னத்துரையும் எதிரி சார்பாக பிறக்டர் திரு. சாப். வ. சபாபதியும் விவாதித்தார்கள்.

காயமடைந்தவராகிய சரவணமுத்து-சோமசுந்தரம் விசாரணை செய்யப்படுகையில் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"சென்ற மேமாதம் 24-ந் திகதியன்று இரவு $7\frac{1}{2}$ மணியளவில் எதிரியின் படக்கடைக்குச் சென்று காந்திப்படம் ஒன்றைக் காட்டி அதன் விலையைக் கேட்டேன். அப்போது எதிரி படத்தை எனக்கு விற்பதில்லையெனவும் நான் அதனை வாங்குவதற்குத் தகுதியுடையவனல்லன் எனவுங் கூறினர். உடனே நான் ஆட்களுக்கு விற்பதிற்கில்லையென்றால் ஏன் படங்களை வைத்திருக்கிறாய் என்றுகேட்க எதிரி கோபங்கொண்டு என்னைக் கண்டபடிபேசிவிட்டுஅடிக்கவந்தார். நான் ஒன்றும்பேசாது அவ்விடத்தை விட்டுச்சென்றேன். இதற்கிடையில் ஓர் தடியாலும் எறிந்தார். பின்னரும் என்னைப் பின்பற்றிவந்து ஓர் வாளை ஓங்கினர். வெட்டு என்மேல் விழாமலிருக்கும்படி கையினால் தடுக்க அவ்வெட்டுக் கையில் வீழ்ந்தது. அதிக இரத்தம் பாய்ந்தமையால் நான் அறிவுமயங்கினேன். அதன் காரணமாகவே நான் பொலீசில் முறையீடு செய்யாது ஆஸ்பத்திரியிலேயே வாக்குமூலங் கொடுத்தேன்."

இச்சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ததின்பின் காசிப்பிள்ளை-சிசுவப்பா, கதிர்காமு-கந்தையா முதலியவர்களை விசாரணை செய்ததும் நீதிபதி வழக்கை வருகிற முதலாந் திகதிக்கெனத் தவணையிட்டார்.

யாழ்ப்பாணம் 1.

இன்று விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது. பொலிஸ் சார்ஜன்ட் T. N. அம்சாவை விசாரணை செய்து கொழும்புக்கு அனுப்புவதாகக் கூறி வழக்கு வருகிற 15-ந் திகதிக்கெனத் தவணையிடப்பட்டது.

—நமது நிருபர்.

## தலையாளியில் பலமான களவு

### நாய்களுக்கு இறைச்சி

### மக்களுக்கு மயக்கப்போடி

யாழ்ப்பாணம் 1.

சென்ற 28-ந் திகதியன்று இரவு தலையாளி வாசியாகிய ஆறுமுகம் என்பவரது வீட்டினுள் சில கள்வர் புகுந்து ஏறக்குறைய 900 ரூபா பெறுமானமுள்ள சொத்துக்களை அபகரித்துச் சென்றதாகச் செய்தியெட்டியிருக்கின்றது.

இதைப்பற்றிப் புலன் விசாரித்தபோது வீட்டுச் சொந்தக்காரனாகிய ஆறுமுகம் என்பவர் மன்னாருக்குச் சென்றிருப்பதை அறிந்தவர்களே களவுக்குச் சென்றிருத்தல் வேண்டுமெனவும், வீட்டிலுள்ள நாய்கள் சப்தமிடாதிருக்க வேண்டுமென அவைக்கு இறைச்சித்துண்டுகள் வழங்கப்பட்டனவெனவும், அவ்வீட்டிற் படுத்திருந்த ஆறுமுகத்தின் மனைவிமீதும் பிள்ளைகள்மீதும் ஓர்வித பொடி தூவப்பட்டதெனவும், களவுபோனபொருட்கள் தாலிக்கொடி, அட்டியல், சங்கிலி முதலியனவெனவும், அவ்வீட்டிலிருந்த அலுமாரியைத்திறந்து பணமும் பொருளும் எடுத்திருப்பதாகவும் அறியக்கிடக்கின்றது.

### பசுமாட்டால் மரணம்

தங்காலையில் சென்ற திங்கட்கிழமை பசின் காமி என்னும் பெண் தனது பசுமாட்டில் பால் எடுக்குஞ்சமயம் மாடு கொம்புகளால் அவளைத் தாக்கியதாகவும் இரண்டு நாட்களால் அது காரணமாக அவ ளிறந்துவிட்டதாகவும் ஓர்செய்தி கிடைத்திருக்கின்றது.

### சுன்னுகம் பிராசீன பாடசாலை

இவ்வித்தியாசாலையில் ஆகஸ்டுமீ 11-ம்௳ ஞாயிற்றுக்கிழமை பாலபண்டித வகுப்பு ஆரம்பிக்கப்படும். விரும்பியவர்கள் அறிவிக்கவும்.

பிராசீனபாடசாலை
சுன்னுகம்
2-8-35

சி. கணேசையர்
தமிழாசிரியர்

## மாமனை வெட்டிய மருமகன்

### குடல் புறப்பட்டது

யாழ்ப்பாணம் 31.

கடந்த 27-ந் திகதியன்று சனிக்கிழமை சாயங்காலம் $5\frac{1}{2}$ மணியளவில் நரியன்குண்டு வாசியாகிய வை. சின்னையா என்பவர் யாதோ குத்தகை வளவொன்றைப்பற்றிய தகராறு ஏற்பட்டவிடத்துத் தனது மாமனாராகிய அ. கந்தையாஎன்பவரைக் கத்தியால் குத்தியதாகவும், குத்தியபோது குடல் புறப்பட்டதாகவும், சின்னையா என்பவருக்குக் காயங்கள் இருப்பதாகவும் காயமடைந்தவர்க ளிருவரும் ஆஸ்பத்திரியிலிருப்பதாகவும செய்தி கிடைத்திருக்கிறது. ந-நி.

### நீரில் மூழ்கியிறந்த மாணவன்.

யாழ்ப்பாணம்—திருநெல்வேலி ஒற்றுமை நிதியின் காரியாதிகாரியாகிய திரு. வ. சோமசுந்தரம் அவர்களின் புதல்வரும், கொழும்பு சகிராக் கல்லூரி மாணவருமாகிய 18 வயதுடைய குராமதேவன் என்பவர், சென்ற ஆகஸ்மோதம் 29-ந் தேதி திங்கட்கிழமை ஆடியமாவாசையிலன்று கொழும்பு-முகத்துவாரத்தில் ஸ்நானஞ் செய்கையில் நீரோட்டத்தினால் இழுத்துச் செல்லப்பட்டார். இவரது பிரேதம் அடுத்த நாளாகிய செவ்வாய்க்கிழமை காலை பாஸியாவத்தை என்னுமிடத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது. உடனே பிரேதத்தை முகத்துவாரம் பொலிஸ்ரேஷனுக்கு எடுத்துச் சென்று பகல் 2 மணிவரையில் பிரேத விசாரணை செய்தனர்.

### ஆனை அடித்திறந்த பாகன்

அவிசாவலையில் சென்ற செவ்வாய்க்கிழமை சிறிவர்த்தன என்பவரின் ஆனை கடற்கரையிலிருந்து மாமிழுத்துச் செல்லும்போது தனது முந்திய பாகனுகிய பீதுரு சிங்கோ என்பவனைக் காலால் மிதித்து கொன்றுவிட்டதாம். மரணவிசாரணையில் ஆனையின் சொந்தக்காரரில் குற்றமில்லையெனவும் பாகனிலேயே குற்றமென்றும் தீர்ப்புக் கூறப்பட்டதாம்.

சிறுவர் பகுதி

# சேர். உவால்றர் ருலி

சி. த.

எலிசபெத் இராணி காலத்திலே இங்கிலாந்திலே அதிகம் கீர்த்தி வாய்ந்து விளங்கியவர் சேர் உவால்றர் ருலி என்பவரேயாகும். இவரும் டிறேக்கைப்போலவே டிவொன் மாகாணத்திலே, 1552-ம் ஆண்டு பிறந்தவர். இளம்பிராயந்தொட்டே இவருக்குக் கடற்பிரயாணங்களிலும், அதுசம்பந்தமான கதைகளிலும், பிரியமதிகம். ஒக்ஸ்போட் கலாசாலையில் கல்விபயின்றபின்பு, பிரான்சுதேசத்துப் புறொட்டெஸ்றன் மதஸ்தர்கள் சமயசுயாதீனத்திற்காயாடிய யுத்தத்துக்குத் துணைசெய்யச் சென்ற ஒரு கூட்டம் போர்வீரரோடு பிரான்சுக்குச் சென்றார். அவர் பின்பு ஸ்பானியருடைய நெருக்கத்தினால் வருந்திய கீழைத்தேசத்தாருக்குத் துணைபுரிந்தனர்.

பின்பு இங்கிலாந்துசென்று சட்டக்கலை கற்பாராயினர். இவர் காலத்திலே அயர்லாந்து தேசத்தில் உள்நாட்டுக்கலகம் இருந்தது. அந்தக் கலகத்தையடக்கும்படி இவர் அங்கு அனுப்பப்பட்டார். ருலி கலகத்தை மிகத் திறமையாக அடக்கினர். ஆனால் இந்தவேலையில் ருலிக்கு அவ்வளவு பிரியமில்லாததால், வேறு வேலை தரும்படி லீஸ்றர் கோமனுக்கு எழுதினர். லீஸ்றர் கோமகனுடைய அழைப்பின்படி ருலி இங்கிலாந்துக்கு வந்து, அதி விரைவாக எலிசபெத் ராணியின் தயையைப் பெற்றுக்கொண்டார். ருலி ராணியினுடைய அரண்மனை உத்தியோகஸ்தருள் ஒருவரானர். அவருடைய தோற்றம் இராணிக்கு அதிகம் பிரியமாயிருந்தது. அவர் உயரமாயும், அழகாயும், சுருண்ட மயிரும் நீலக்கண்கள் உடையவருமாயிருந்தார். அவர் மிகவும் மரியாதையுடையவராயும், சமயோசிதபுத்தியுடையவராயுங் காணப்பட்டார். ராணியின் உடன்பாதுகாப்பாளரின் தலைவனாக ருலி நியமிக்கப்பட்டார். அரசியற் கருமங்களில் ருலியின் புத்திமதிகளை ராணி கவனமாய்க் கேட்பாள்.

ருலி பணத்தாலும், கௌரவத்தாலும் உந்நதநிலையை யடைந்துவிட்டார். இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் தோட்டங்கள் ராணியால் ருலிக்குக் கொடுக்கப்பட்டன. ராசதுரோகியாகிய அந்தோனி பாபிங்டன் என்பவரது சொத்துக்களும் இவருக்கே சொந்தமாயின. ஆயுதங்களும் நேர்த்தியான உடைகளும் வாங்குவதிலே பெரும் தொகையான பணம் செலவு செய்தார். ரத்தினங்கள், முத்துக்கள், புத்தகங்கள் வாங்குவதிலும், வீடு கட்டுவதிலும், தோட்டங்களமைப்பதிலும் கப்பல்கள் கட்டுவதிலும் அதிக பணத்தை வாரியிறைத்தார்.

அரண்மனை வாழ்க்கையோடு அவர் திருப்தியடையவில்லை. சேர் ஹம்பெரி கில்பாட் என்பாரோடு, நியூபவுன்ட்லன்ட் தேசத்துக்குப் போக முயன்றார். ஆனால் ராணியதைத் தடுத்துவிட்டாள். சேர் ஹம்பெரி தனியேசென்று திரும்பி வரும்போது இறந்துவிட்டார்.

வேற்று நாடுகளுக்குச் சென்று ஆங்கிலராச்சியத்தையாண்டும் பரவச்செய்ய வேண்டுமென்பது ருலியின் பெருவிருப்பு. ஆகவே ராணியின் அனுமதிபெற்றுக்கொண்டு அமரிக்காவுக்குப்போனர். அங்கு தாங்கள் கண்ட நாட்டுக்கு "வேர்ஜினியா" என்று பெயரிட்டனர். பின்னரும் பன்முறை வேஜினியாவுக்கு ஆட்களையனுப்பி ஆங்கு குடியேறும்படி செய்தனர். ஆனால் இம்முயற்சி வாய்க்கவில்லை. ஒவ்வொருமுறையும் ருலியுடையஆட்கள் பழங்களையும், உருளைக்கிழங்குகளையும், புகையிலையையும் கொண்டுவந்தார்கள். அந்நாட்டுச் சனங்களைப் பற்றியும் ஆச்சரியமான கதைகளைச் சொன்னார்கள். அந்தப் பெரிய கண்டத்தின் அழகைப்பற்றியும் எடுத்துக்கூறினர்கள்.

இங்கிலாந்திலே முதன் முதலாகச் சுருட்டுக்குடித்தவர் ருலி என்றே சொல்லப்படுகிறது. ருலி சுருட்டுப் புகைத்துக்கொண் டிருக்கும்போது, பாத்திரத்தில் தண்ணீர்கொண்டுவந்த வேலைகாரன், ருலியின் வாயிலிருந்து புகை வருவதைக்கண்டு, நெருப்பையவிப்பதற்காய் நீரை ருலியின் முகத்திற் கொட்டிவிட்டானெனவும் ஒரு கதை கூறப்படுகின்றது.

ஸ்பானிய ஆமடா தோற்கடிக்கப்பட்ட ஒருவருஷத்தின்பின்பு, ருலி தனது அயர்லந்துத் தோட்டங்களைப் பார்வையிடச்சென்றார். அந்த நாட்களில், பெரும் புலவனுகிய எட்மண்ட் ஸ்பென்சர் என்பவர் அயர்லாந்துத் தேசாதிபதிக்குக் காரியதரிசியாகவிருந்தார். ருலி இவரைச் சந்தித்தார். தான் இங்கிலாந்துக்கு வந்தபோது ஸ்பென்சரையும் உடனழைத்துக்கொண்டுவந்து ராணிக்கு அறிமுகப்படுத்தினர்.

ருலி அரண்மனைத்தாதியருளொருத்தியை விவாகஞ்செய்தார். இது ராணிக்குப் பிடிக்கவில்லை. இக்குற்றத்திற்காக 6 மாதம் மறியல் தண்டனை பெற்றார். மூன்று வருஷத்தின் பின்பு கயானு நாட்டுக்குப் புறப்பட்டார். இந்த நாட்டில் ஏராளமான பொன் உண்டென்று ருலி நம்பினர். அந்நாட்டு அரசன் ஒருவன், தனது தேகம் முழுவதும் தைலத்தைப் பூசிவிட்டு, பொற்குவியலில் விழுந்து, தான் ஒரு தங்க விக்கிரகம்மாதிரித் தோற்றும்வரைக்கும் புரண்டுருளுவான் என்று ஒரு கதையுமுண்டு. பொன்னின் மிகுதி அங்கு அவ்வளவு அதிகமாகவிருந்தது.

ருலியும் அவருடையசகாக்களும் ஒறிநொக்கோ நதிமூலமாக உள்நாடு சென்றனர். தாங்கள் கேள்விப்பட்டதோர் ஆச்சரியகரமான பொற்சுரங்கத்தைத தேடியே யவர்கள் சென்றனர். மண்ணிலே பொன் வெள்ளி அடையாளங்களைக் கண்டபோதும், அவர்கள் சுரங்கங்களைக் கண்டுபிடிக்கவில்லை. திரும்பி வந்தபோது ருலி தனது பிரயாணத்தைப் பற்றி நீண்டதோர் அறிக்கை வெளியிட்டுள்ளார். பெண் போர்வீரரைப்பற்றியும் புயங்களிற் கண்ணும், மார்பிலே வாயுமுள்ள ஒரு சாதிச்சனங்களைப் பற்றியும் அவ்வறிக்கையி லவர் கூறுகின்றார்.

கயானு தேசத்துக்குப் போய்த் திரும்பிய ஒரு வருஷததின் பின்னர், ஸ்பானியர் இங்கிலாந்தின்மீது படையெடுத்து வந்தனர். அவரை யெதிர்ப்பதற்கு இங்கிலாந்தும் ஓர் கடற்படையை யனுப்பியது. அப்படைத்தலைவர்களுள் நமது ருலியுமொருவர் இம்முறை ஆங்கிலேயருக்கே வெற்றி கிடைத்தது. இதற்கு ஏழு வருஷத்தின்பின்பு எலிசபெத் ராணியும பாகதியெய்தினள். (தொடரும்)

# கலாசக்கரம்.

எங்கேபார்த்தாலும் இந்த மாதங்களிலே உற்சவக்காட்சிகள் காணப்படுகின்றன. திறம்மேளம் வாணம் ஆடல்பாடலென்றால் கும்பிட வருவார் தொகையும ஆயிரம் பதினாயிரத்துக்குக் குறையாது. எல்லாக் "காரும்" அங்கேவந்து குவிந்துவிடும். வரும்! வரும்!! என்று, பார்த்த கண்ணும்பூத்து வழிபார்த்திருந்த அந்த மேளவாத்தியக்காரரும் ஒருபடி வந்துவிட்டார்கள்!!! சில கோயில்களிலே உற்சவகாலங்களில் நாடகமேடையுமொன்று புதிதாகத் தலைகாட்டத் தொடங்கிவிட்டது. யாரோ சில அகோர சிவாசாரியர்கள் இந்த விபரீதமான நவீனமுறையையும் புகுத்திவிட்டார்கள். தென்னாட்டிலே காவிரிநதி இந்நாட்களிற் பெருகுவதுபோல, இந்நாட்டிலும் இந்நாட்களிலே (பணம்) பாலாறுபெருக்கெடுக்கிறது. இதன்பிரவாகமே நாடகமேடைகள் உற்சவகாலங்களிலே தோற்றுவதற்கு மூலகாரணமாகும். மதுவிலக்குப்போரில் மாண்டுபோன இவைகள் பின்னரும் மதாபிமானிகளுடைய சிரத்தையன்பு காரணமாகப் புத்துயிர்பெற்றன. இதைநாம் வேண்டாமென்று சொல்லவில்லை. பழைய இராமாயண பாரதகாலங்களிலும் இது இல்லாமலில்லை. ஆனபடியால்இது என்றென்றைக்கும் உயிரோடிருக்கலாம். அதிகதூரம் அப்புறப்படுத்தப்பட்டும் அருவருக்கப்பட்டு மிருந்த இது (எது? மது:) சமயவிஷயமான சற்கருமங்களிலே அக்கிராசனம் வகிக்கத் தலைப்பட்டமையை யிட்டே நாம் குறைகூறுகின்றோம். மேல்நாட்டுச் சைவத்தின் துரிதவிருத்திக்கு இதுவுமோர் துணைக்கருவியாகும். கூத்துக் கோயில்களின் எசமானருக்கு "அதிதேவதை" என்னும் பட்டமும், உற்சவாசாரியருக்கு "அகோரசிவாசாரியார்" என்னும் பட்டமும் வழங்கலாம். குறித்த எசமானை இராசகூத்துக்கும் ஆசாரியரைப் பெண்கூத்துக்குமாகப் பிரதிஷ்டை செய்தாலும் செய்யலாம். ஆனல், நிழலிலா மரங்களே இவர்களுக்குஉபசரணைக்கொண்டாட்டம் நடாத்தும்.

* *

சாதிசமய பேதங்களை வேரோடு தொலைத்து, எல்லாரும் மக்கள் என்ற முறையில் வாழவேண்டுமென்னும் புதிய கிளர்ச்சி உண்டாகி அநேக வருடங்களாகும். கீழ்நாட்டிலுள்ளவர்களே இக்கிளர்ச்சியைச் சிருட்டித்தாரெனச் சிலர் கூறுவர். சிலர் மேல்நாட்டிலுள்ளவர்களே இதனை ஆக்கினரென்பர். பொதுவான ஸ்தாபனங்களெல்லாம் பொதுமக்களின் உபயோகத்துக்குரியனவாகுமென்பது அரசினரின் கொள்கையாகும். இங்கேயுள்ள பொதுக்கிணறுகளை எல்லாரும் உபயோகிக்க வேண்டுமோம். அங்கே சர்வ கலாசாலைக்குரிய வாவியில் கீழ்நாட்டார் ஸ்நானஞ்செய்ய வொண்ணுதாம். "தனக்கொருநியாயம் பிறர்க்கொரு நியாயம்" என்னும் முதுமொழியை இது மேலும் வற்புறுத்துகிறது. உலக சமாதானத்தை நிலைநிறுத்தும்பொருட்டு, சர்வதேச மகாநாடொன்று வருகிற நவம்பர்மாதம் லண்டன்பட்டினத்திலே நடைபெறுமாம். யுத்தத்துக்கு வேண்டிய கருவிகளைப் பன்மடங்காக விருத்திசெய்பவர்களே இந்த மகாநாட்டையும் கூட்டுபவர்களாம். கீழ்நாட்டுப் பிரதிநிதிகளும் அந்த மகாநாட்டில் சமுகமாயிருப்பார்களாம். எல்லாரும்சேர்ந்து அவலைநினைத்து உரலைஇடிப்பார்களாம். அந்தலண்டன் பட்டினத்திலே எங்கள் "இலங்கை மாளிகையு"மொன்று புதிதாக அமைக்கப்பட்டு, மாளிகைப் பிரவேசமும் சென்றவாரம் முற்றுப்பெற்றதாம். இலங்கையின் பொருள்களை இங்கிலாந்தில் விளம்பரப்படுத்துவதற்கு இந்த மாளிகை உபயோகிக்கப்படுமோம். இங்குள்ள தினசரிப் பத்திரிகைகள் "லண்டனில் எங்கள் சொந்த மாளிகை" என்றுகூறி மகிழுகின்றன. அங்குள்ளார் தங்களுக்கென ஓர் லண்டன் மாளிகையை எங்கள் இலங்கையிலே இன்னமுமமைக்கவில்லையேயென்றுதான் நாம் வருந்துவதெல்லாம்!

குந்தியிருந்தும், அப்படியிருக்க முடியாது ஒருகையை நிலத்திலூன்றியும், சப்பாணியிட்டு நிரையாக விருந்தும் கைகளை மேலே உயர்த்திக் காட்டி, கிராமச்சங்க அங்கத்தவர்களைத் தெரிவு செய்தகாலம் முற்றுப்பெற்றது. அரசாங்கசபைத் தெரிவுக்காலங்களிலுண்டாகும் நடப்பும் எடுப்பும் பிறவும் கிராமச்சங்கத் தெரிவிலும் தலையெடுத்துக் கொண்டன. ஒரு கிராமச்சங்கம் பார்க்கும் விஷயம் இரண்டு மூன்று கிராமங்களோடு அமைவதேயாயினும், அரசாங்கசபைத் தெரிவுக் காலங்களில் நடைபெறும் படைத்துணை அழைத்தல், பவனிவருதல், அணிவகுப்பு, திக்குவிஜயம், தேர் (Car) ஏறுதல் பகீரதப்பிரயத்தனம், கனகமாரி பொழிதல் முதலானவைகளில் சிறிதும் பின்னிடவில்லையென்றே சொல்லலாம். காசும் காரும் கலன்களும் வாய்ப்பின் ஆரும் அங்கத்தவராகலாம்; அதற்கு அப்பாலும் ஆகலாம், கிராமச்சங்கமென்றால் சுயராச்சியமென்பது கருத்தாம். எங்கள் கிராமங்களை நாங்களே ஆளுகின்றோமென்பது சிலரின் முடிந்தமுடிபாகும். அக்கிராசனர் அவனியை ஆளும் அரசனாகவும், அங்கத்தவருள் ஒருவர் முதன்மந்திரியாகவும், மற்றவர் யுத்த மந்திரியாகவும், அடுத்தவர் கடற்படைத்தலைவராகவும், வேறொருவர் ஆகாயப்படை அதிபராகவுமிருக்க, ஒருநாளிரவு எமது நடேசன் கண்கள் திறந்தபடியே கனவு கண்டானும்.


* *

காலவித்தியாசங் காரணமாக நேர்ந்த மாற்றங்களினாலோ நாம் அறியோம், சமீபகாலத்தில் நாடெங்கும் நடைபெற்ற கிராமச்சங்கத் தெரிவு விஷயமாக அநர்த்தங்களும் விபரீதங்களும் பிறவும் விளையலாயின. இதற்கு முந்திய காலங்களிலே இப்படியான நிகழ்ச்சிகள் மருந்துக்கும் கிடையா. பேழ் வாயையுடைய பீரங்கிகளும் கடற்படை விமானப்படைகளும் உபயோகிக்கப்படவில்லையாயினும், இதுவும் மாறுகொண்டெழும் இருகட்சியாருக்கிடையில் நிகழ்ந்த ஒருவித யுத்தமென்றே சொல்லலாம். சில பாகங்களிலே இராக்கதப் போரும், சில பகுதிகளில் வானரப் போரும், வேறுசில பாகங்களில் சுபத்திராகல்யாணமும் சூதுபோரும் பிறவும் நிகழ்ந்தனவாம். சில இடங்களிலே நல்வளக்காற்றோடு கூடி, பொன்மழையும் பெய்ததாம். படைத்தலைவர் கைகலந்தும் வாய்கலந்தும் அழன்றும் சுழன்றும் அருஞ்சமர்புரிந்தனர். எப்படியாயினும் விஷயம் ஒருபடி முற்றுப்பெற்றது. போகட்டும். கடவுள் செயல்தான என்று இனி மேலாவது எல்லாரும் அடுத்த தெரிவுகாலவரையேனும் ஒற்றுமையாக வாழலாமென்றால், அரசாங்கசபைத் தெரிவு மகத்துச், சனிபோலப் புகுந்து கொண்டது. சனத்தலைவராதற்கு முற்பட்டோர் நல்ல சுபமுகூர்த்தத்திலே ஆங்காங்கு அத்திபாரமிட்டனர். சமையம் பார்த்துப் பின்னணியில் நின்று தலைநீட்டுவோரும் உளர். காட்டேரி, கறுப்பன், பிடாரி, காளி கூளி நீலிகளுக்குரிய சிறுவேள்விகள் நடைபெறுகின்றன. இவைகளுக்கு வேண்டிய மடைப்பண்டங்களும் சேர்க்கப்படலாயின.

* * *

எமது அரிய நண்பர் ஒருவருக்கு ஒரு கண்ணியமான பதவி கிடைத்தது. அவருடைய நிலைமைக்கு அது ஒரு கண்ணியமான தொன்றன்று. குறித்தபதவி அவரைப் பெற்றமையினாலே கண்ணிய மெய்தியதென்றே நாம் துணிந்து கூறுவோம். அன்றியும் இது அவருக்கொரு முந்திய பழம்பாடுமாகும். விஷயம் இப்படியிருக்க, சனங்களின் அபிப்பிராயத்தை வெளியிடும் பதவியை வகிக்கும் ஒருவர், எமது நண்பர் அடைந்த கண்ணியங்காரணமாக அவருக்கு மனமார்ந்த சோபனங் கூறுவதோடு, தேசமக்களுக்கிடையில் உமது செலவாக்கு எவ்வளவாக விருக்கிறதென்பதைத் தாம் அறிவதாகவும், எங்கள் தேசத்துப் புதிய திருத்த அமைப்புக்களுக்கு எமது நண்பர் இன்றியமையாத துணையாளராயிருப்பாரெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் ஒரு நிருபத்தை விடுத்திருக்கிறார். குறித்த நிருபர் வருகிற அரசாங்கசபைத் தெரிவில தலைகாட்டும் ஒருவராயிருத்தல் வேண்டும். அல்லது தலைநீட்டும் ஒருவருக்குப் பக்கவாத்தியகாரனாக வமைதலவேண்டுமென்பதே எமது அபிப்பிராயமாகும். இவர் எங்கள் பழைய கொளகைகளிலும் பல புதிய திருத்தங்களை அமைத்துள்ளவர். உதாரணமாக "நிலையிற்பிரியேல்" என்னும்முதுமொழி "நிலையில்நில்லேல்" என்பதாகத் திருத்தம் பெற்றமையும் பிறவுமாம். குறித்தநிருபர் எமதுநண்பரின படைததுணையைப் பெறவேண்டி, எடுத்துககொண்ட ஆரம்பக் கிரியையின் அருமைபற்றியே இங்குக் குறிககப்படலானேம. பேருமசொலலேம! ஊருமசொல்லேம!! அவர்மீது துவேஷமுமில்லேம்!!!


## பாருங்கள் என்ன அற்புதமான மேனி!





**ஏன் உங்கள் மேனியையும் அவ்விதம் அழகு செய்யக்கூடாது?**

மிருதுவான மேனியே அழகாயிருக்குமென்பது படக்காட்சியிற் தோன்றும் பெண்களுக்குத் தெரியும். முகத்தின் அழகு மேனியின் அழகைப் பொறுத்தது. தங்களுடைய வதனத்தைப் பரிபூரணமாக்குவதற்கு ஸினிமா மாதர்கள் நாள்தோறும் லக்ஸ் டோயிலெட் ஸோப்பையே உபயோகிக்கிறார்கள். உண்மையில் 713 கியாதிபெற்ற ஸினிமா பெண்களில் 705 பேர் இந்த நறுமண ஸோப்பையே உபயோகிக்கிறார்கள்.

உங்களது மேனியையும் இம்மாதிரியாகக் கவனிக்கவேண்டும். இன்றே லக்ஸ் டோயிலெட் ஸோப்பை உபயோகிக்கத் தொடங்குங்கள்.

உங்களது வியாபாரியிடத்திற் கிடைக்கும்.




LUX
TOILET SOAP

X-LTS. 314-50 LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND



## யா. ஆ. தி. பா. வி. ச.
## பிரவேச வகுப்பு
### சைவாசிரிய கலாசாலை
### திருநெல்வேலி

ஷை கலாசாலையில் 22-9-35 தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பிரவேச வகுப்பு வைத்து வேதனமின்றிக் கற்பிக்கப்படும். குறித்த வகுப்பிற் சேர விரும்புகிறவர்கள் 15-9-35க்கு முன் ஷை கலாசாலை அதிபருக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ளவேண்டும்.

சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், 1-8-35. — இங்ஙனம், சி.சுவாமிநாதர், அதிபர்.

(18) 4-8-35—2.



## அறிவிப்பு

பறங்கிமலையில் நடைபெற்று வரும் 'மறைமலையடிகள் கல்விக்கழகம்' என்பது, சில அலுவல் வசதிகளை கருதி, இப்போது 'இளங்கோவடிகள் கலவிக் கழகம்' என்று பெயர் மாற்றப்பட்டிருக்கின்றது. இனி இக்கழகத்துக்குக் கடித முதலியவை யெழுதுவோர் இப்புதுப் பெயர் முகவரியிட்டே எழுதுதற்குரியவர்.

பறங்கிமலை, 16-7-35. — திரு சு. பாலசுந்தரம், கழக ஆசிரியர்.

## சிசு உற்பத்தியின்பின் செய்யவேண்டிய கருமம்

ஆளுடையாளுடன்றேணி
யமர்ந்தபிரானருள்போற்றி
மூளுமகிழ்ச்சியாற்றங்கள்
முதன்மறைநான்முறைச்சடங்கு
நாளுடையவிரைந்து
திங்களினுநலஞ்சிறப்பக்
கேளிருடன்செயல்புரிந்து
பேரின்பங்கிளர்வுறுநாள்.

என்று பெரியபுராணத்திற் கூறப்பட்டபடி பத்துமாதங்களிலும் கருப்பத்திற்குரிய கிரியைகளை முறைப்படிசெய்தல் தகுதியாம். இரண்டாம் மாதந்தொடங்கி,நான்காம் மாதவரை மாதக்கடைசியிலும், நான்கா மாதந் தொடங்கிப் பத்தாம்மாதவரை மாத முதலிலும் இந்தக் கிரியைகளைச் செய்தல்வேண்டும். சாஸ்திரங்களில் 4-6-8 இந்தமாசங்களில் சீமந்தஞ் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சிலர் 5-7-9 இந்த ஒற்றித்த மாதங்களில் செய்துவருகின்றார்கள். இது தேசாசாரம்போலும்.

“இந்துர்ஜலம், குஜோஅக்நிர், ஜலஸ்ரத்வக்நிரேவ, பித்தம்ஸ்யாத், ஏவம்ரத்தேக்ஷபிதே, பித்தேநாஜ:, ப்ரவர்த்ததே, ஸ்திரீஷூ” என்னும் பிரமாணப்படி சந்திரன் தண்ணீரென்றும், செவ்வாய் அக்கினியென்றும், தண்ணீர், அக்கினி இவற்றால் பித்தமுண்டாமென்றும், பித்தாதிக்கத்தினால் ரஜசு (பெண்கள் வீட்டிற்கு) உண்டாகுமென்றும், இதன்காரணம் சந்திரன் செவ்வாயுடைய பார்வையைப் பெறுவதேயென்றும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பெண்களுடைய சந்திரலக்கினத்திற்கு அநுபயராசிகளாகிய 1-2-4-5-7-8-9-12 இந்த எட்டு ராசிகளில் கோசரப்படி சந்திரன் வரும்போது அவரைச் செவ்வாய் பார்த்தால் சிசு உற்பத்திக்கு ஏதுவாகிய ரஜஸ் உண்டாகுமென்று கூறியிருக்கின்றார். ஆகவே மாதம் மாதம் பெண்கள் தூரமாவதற்குச் சந்திரனைச் செவ்வாய் பார்ப்பதேபிரதான காரணமென்பது பெறப்படும்.

சூரிய சந்திரர்களுடைய கிரணசமூகங்களினால் உலகத்திலுள்ள எல்லா ஆன்ம வர்க்கங்களும் சீவித்திருக்கின்றனவென்பது எல்லவரும் அறிந்த உண்மையாகும்.

“சகலபுவனத்திலும் உயிர் பயிர் தழைப்ப நற்றண்ணளி சுரந்திடுதலால்” என்னும் பிரமாணப்படி சந்திரகிரணத்தினால் புல், பூண்டு, பயிர், வித்து, மேவர், கொடி, மரம், ஒஷதி முதலானவைகளும், கருப்பத்திலுள்ள சிசுவும் வளர்ச்சியடைகின்றனவென்றும், கருவிலுள்ள சிசுவளர்ச்சிக்குச் சந்திரனே அதிகாரியென்றும் வேதங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

ஆனபடியாற்றான் கருப்ப ஸ்திரீகள் சூரியசந்திரர்களுடைய கிரகணகாலத்தில் கருப்பம் அசைவடையாதிருக்கும்படி ஒரேபக்கமாய்த் தருப்பையைக் கையில்பிடித்துத் தருப்பாசனத்தில் படுத்திருத்தல் வேண்டும். இல்லாவிடில் அக்கிரகண தோஷம் கருவிலுள்ள சிசுவைப்பீடித்து அங்கஈன முதலியவற்றையுண்டாக்கும். இப்படிப் பிறப்பதைக் கிரகணக் கேடென்று சொல்லிவருகின்றனர்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
சுதுமலை.


### திரு - அருட்பாத்திரட்டு

கொழும்பு விவேகாநந்த சபையாரால் நடாத்தப்பெறும் அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சைக்குரிய (1935–36) தேவார திருவாசக முதலியன,

விலை சதம் 15.

தனலக்குமி புத்தகசாலை,
சுன்னுகம்


கதைப்பகுதி.

# உத்தம மனைவி.

(திரு. பொன். குமாரவேற்பிள்ளை.)

(ரு)

வனப்புமிக்க கடற்கரைகளில் சிவபுரம் கடற்கரையே சிறந்தது. சிவபுரத்தில் வதியும் ஆடவர் பெண்டிர் என்னும் இருபாலாரும் எஞ்ஞான்றும் மாலை முழுதும் அக் கடற்கரையிலேயே போதுபோக்குவர். அரைமைல் அகலமும் பலமைல் நீளமும் உள்ள அம் மணல்வெளியில் ஊடே ஊடே புன்னை, வேம்பு முதலிய மரங்கள் பொலிந்து விளங்கும் காட்சியும், அவற்றின் அடியில் மக்கள் தனித்தும் குழுமியும் இருக்கும் நிலையும் பார்ப்போருக்கு இன்ப விருந்தளிப்பனவாம்.

மனோன்மணி தன் தாய்வீடுசென்று பலநாட்கள் சென்றன.

ஓர்நாள்மாலை கடற்கரையிலுள்ள புன்னைமரம் ஒன்றன்கீழ் பெண்ணொருத்தி புத்தகம் ஒன்றை வாசித்தவண்ணம் இருக்கின்றனர். அவளின் எழிலுருவை வருணித் துரைப்பது எம்மால் முடியாத காரியமாதலின் அவள் கலைமகள் எனச் சொல்லத்தகுந்தவள் என்னும் ஒன்றேகூறி அமைகின்றேன். இவளிருக்கும் அயலிலுள்ள மற்றொரு மரத்தின் அடியில் ஏறக்குறைய முப்பது வயதுடைய ஆடவர் ஒருவர் இருக்கின்றார். இவர் அப்பெணமணியை உற்றுற்றுப் பார்த்தபடியே பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கின்றார்.

மறுநாளும் அப்பெண்மணி புத்தகத்தைப் பார்த்தவண்ணம் மரத்தின்கீழிருக்கின்றாள்; அவ் ஆடவரும் அவளைப் பார்த்தவண்ணம் இருக்கின்றார். அவள் புத்தகத்தைப் பார்ப்பதும், அவர் அவளைப் பார்ப்பதுமாக நாலைந்து நாட்கள் கழிந்தன. அவ் ஆடவருக்கு மென்மேலத்தையலார் மையல் தலைக்கேறிற்று. அவர் எத்தனைநாட்டான் பொறுப்பர். கணமெனக் கழிந்த நாட்கள் யுகமெனக் கிடந்தன. உணவைத் தணந்தார்; உறவைத் துறந்தார்; உறக்கத்தை மறந்தார். அவர், “இன்று எவ்விதத்திலும் அவளோடு உரையாடாதுவிடேன். என்மீது சற்றேகருத்துடையளாதலினன்றோ நாடோறும் என் மருங்கில்வந்து தன் அழகைப் பறக்கவிடுகின்றாள். பெண்ணொருத்தி ஓர் ஆடவன்மீது மட்டுக்குமிஞ்சிய காதலுடையளேனும் வலிந்துபேச எக்காலும் ஒருப்படாள் என்பது மாற்றமில் உண்மையாகும். இனியும் அவளோடு பேசாது விடுவேனேல் யான் பேடியன்றோ?” என எண்ணுபவரானார். எண்ணியபடியே இயற்றவேண்டும் என்னும் எண்ணத்தால் தள்ளப்பட்ட அவர் வழக்கம்போற் கடற்கரையை அடைந்தார். அப்பெண் தெய்வமும் ஆங்கு எழுந்தருளத் தவறவில்லை.

அவ் ஆடவர் அவளொடு தான் வலிந்து உரையாடத் துவங்கினால் அவள் தன்மீது வெகுண்டெழக்கூடுமோ என அஞ்சினாரெனினும், உள்ளத்தை ஒருவிதமாகத் தேற்றிக் கொண்டு, அச்சத்தின் அறிகுறியாக வெயர்வைத் துளிகள் நெற்றியில் அரும்ப, அப் பெண்ணண்டைசேர்ந்து அம்பாளை வரங்கேட்கும் ஓர் அடியான்போன்று ஓர்பால் நின்று, “சில நாட்களாகத் தனித்துவந்து இம்மரத்தடியில் தனித்திருந்துசெல்கின்றீர். உமது ஊரெதுவோ?” என்றார்.

“தனித்திருத்தல் ஒன்றே காரணமாகக்கொண்டு என்னை நீங்கள் ஓர் அயலூரவள் எனக் கருதுகின்றீர்கள் போலும். ஒழியாத ஏமாற்றும் ஒழியாத வஞ்சமும் மலிந்த இவ்வுலகில் தனித்து வாழ்தலே சிறந்தது என்னும் உண்மை உங்கள் அறிவிற்கு இன்னும் புலனாகவில்லையோ? “அமரகத்தாற்றறுக்குங் கல்லாமாவன்னார் தமரிற்றனிமைதலை” என்னும் ஆன்றோர் வாக்கை நீங்கள் அறியீர்களா? என்றாள் அப்பெண்மணி.

“பெண்கள் தனித்தியங்குதல் தவறு என்பது அறிஞர்கள் கருத்தாதலின் கூறினேன்” என்றார் அவ் ஆடவர்.

“தாங்கள் சாற்றுவது சரியேயெனினும் ஒத்த உணர்ச்சியில்லாரோடு சேர்ந்தியங்குவதிலும் தனித்தியங்குவது சிறந்தது என்பது என் கருத்து” என்றாள் அப்பெண்மணி.

“அது கிடக்க, ஊரெதுவோ?” என்றார் அவ் ஆடவர்.

“கொழும்பு” என்றாள் அப்பெண்மணி.

“இங்குவந்த காரணம் என்னவோ? என்றார் அவ் ஆடவர்.

“சிவபுரம் கடற்கரை மிகவும் சிறந்தது எனப் பலர் கூறினராதலின் வந்தேன்” என்றாள் அப்பெண்மணி.

“உமக்குத் தாய் தந்தையருளரோ? மணமாயிற்றோ? உயர்தரக் கல்வியுண்டோ?” எனப் பல வினாக்களை ஒரேமுறையில் அடுக்கினார் அவ் ஆடவர்.

“புதியவளாகிய என்னிடம் காரணமின்றிப் பல கேள்விகளை எழுப்புகின்றீர்களே. உங்களுக்கு இதனால் ஆம் பயன் என்?” என்றாள் அப்பெண்மணி.

“சின்னாட்கள் இவண் கண்டதினால் என் உள்ளத்தெழுந்த அன்பே இவ்வண்ணம் வினவச் செய்தது” என்றார் அவ் ஆடவர்.

“இவ் உலகத்தவர்கள் ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதற்குப் பயன்படுத்தும் நற்படைகளில் அன்பு என்னும் சொல்லே உயர்ந்ததாகும். அன்பென்னும் சொல்லை உச்சரிப்பவர்களைக்கண்டால் எனக்கு வயிற்றுவலி உண்டாவது வழக்கம்” என்றாள் அப்பெண்.

“யான் உம்மை ஏமாற்றுவதற்கு ஒருவித காரணமுமில்லையே” என்றார் அவ் ஆடவர்.

“ஒருமுறை வாயிலிடும் வெற்றிலைக்குப் போதிய சுண்ணாம்புக்காக ஒருவரின் குடியைப் பாழாக்க உடன்படும் புல்லியோர் பலர் இவ் உலகில் உளராதலின் யான் கூறியது குற்றமாகாது. ஆனால் நீங்களும் அவ் இயல்பினராமென யான்கூறியதாகக்கொள்ளவேண்டியதில்லை” என்றாள் அப்பெண்.

பின்னரும் அப்பெண், “யான் ஏமாறுபவளல்லளாதலின் உங்கள் மனங் கன்றுவாறு என் வரலாற்றைக் கூறுகின்றேன். என் சொந்த ஊர் கொழும்பு நகர்; என்பெயர் நீலாம்பிகை; என்வயது இருபத்துமூன்று; கொழும்புநகரம் பெண்கள் கல்லூரியில் கணிதசாஸ்திரம் பயிற்றுவது என் தொழில்; மாதவேதனம் ஐஞ்ஞூறு ரூபாய். இவற்றின்மேல் நீங்கள் என்னைப்பற்றி யறிந்துகொள்ள வேண்டியதொன்றுமில்லை எனக் கருதுகின்றேன்” என்றாள்.

“திருமணம் நிகழ்ந்து விட்டதா?” என்றார் அவ் ஆடவர்.

“பயனற்ற கேள்விகளை எழுப்புதல் அழகல்ல” என்றாள் நீலாம்பிகை.

“உயர்தரக் கல்விகற்ற பெண்களின் வாழ்க்கையின் நோக்கத்தை அறியவே கேட்கின்றேன்” என்றார் அவ் ஆடவர்.

“இன்னும் மணமாகவில்லை” என்றாள் நீலாம்பிகை.

“இஞ்ஞான்று கற்ற பெண்கள் எல்லாம் காதல் மணத்தையே விரும்புகின்றனர்” என்றார் அவ் ஆடவர்.

“காதல் மணத்தைப்பற்றிச் சற்று விரித்துரைப்பீர்களா?” என்றாள் நீலாம்பிகை.

“ஆடவனும் பெண்ணும் கொடுப்பாரும் அடுப்பாருமின்றித் தாமே ஒருவரை ஒருவர் விரும்பி மணத்தல் காதல் மணம் எனப்படும்” என்றார் அவ் ஆடவர்.

“நீங்கள் சொல்லும் காதல் மணம் நம் பண்டைப் பெரியோரால் கைக்கொள்ளப்பட்டு இஞ்ஞான்றைய அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்படுவதா? இன்றேல் இன்னொருவரைக் காதலித்து விடுத்து நாளை ஒருவரைக் காதலிக்க இடங்கொடுக்கும் தற்கால மேனாட்டுக் காதல் மணமா?” என்றாள் நீலாம்பிகை.

“நீர் கூறுவது எனக்குப் புலனாகவில்லை. தாய் தந்தையர் எண்ணமின்றி ஆடவனும் பெண்ணும் களவிற் கூடுவதே யான்கூறும் காதல்மணம்” என்றார் அவ் ஆடவர்.

“காதலே தெய்வம் எனக்கூறி அதற்கு உயர்ந்த இடமளித்த தமிழர் காதல் செய்தற்குரியார் இன்னார்தான் என வரையறுத் துரைத்திருப்பதை நீங்கள் அறிவீர்களா?” என்றாள் நீலாம்பிகை.

“இல்லை” என வெட்கமின்றிக் கூறினார் அவ் ஆடவர்.

(தொடரும்)


வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது !!

1936-ம் ஆண்டுக்குரிய சிரேட்டபாடசாலை விடுகைத்தாரதரபத்திர வகுப்பிற்குரிய

### இலக்கியக் குறிப்பு

(தமிழ்மணிமாலை—II)

பல்வகை ஆராய்ச்சிகளுடனும் 150 பக்கங்களுடனும்

கொழும்பு சகிருக்கல்லூரித் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

திரு. மு. நல்லதம்பி அவர்களால் எழுதப்பட்டது.

விலை சதம் 60.

தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்

# திருவள்ளுவர் திருநாள்.

(காரைநகர் சைவமகாசபையின் வாசிகசாலையில், மேற்படி நாயனாரவர்களின் திருநாட் கொண்டாட்டத்தில் அக்கிராசனம் வகித்த, மானிப்பாய் இந்துக் கல்லூரிப் பிரதமஆசிரியர் ஸ்ரீமான். வி. வீரசிங்கம் B.A., அவர்கள் நிகழ்த்திய பேருரையின் பொழிப்பு.)

(முற்றொடர்.)

இனித் திருவள்ளுவருடைய காலத்தைக்குறித்துச் சிறிது சிந்திப்போம். ஏலேலசிங்கனென்றவோர் அரசனுக்குத் திருவள்ளுவர் நண்பராயிருந்தனரென்றும், அவ்வரசனுடைய புத்திரர் படிப்பதற்காகத் திருக்குறளை யியற்றினரென்றும் சில ஆராய்ச்சியாளர் கூறுவதை நானறிவேன். ஏலேலசிங்கன், எலாரு (Elara) என்ற நாமங்கள் இலங்கைவேந்தற் குரியன. 'எலாரு' என்பவனுக்கு ஓர் ஞாபகக் கட்டிடமும் இலங்கையில் நிலவுகின்றது. சிலர் இவ்வரசனுடைய புத்திரர் இந்தியாவுக்குச் சென்றிருந்தாரென்றும், அங்கே இவர்கள் படிப்பதற்காகத் திருவள்ளுவர் திருக்குறளை யியற்றினரென்றும் கூறுவர். 'எலாரு' என்ற அரசன் முதலாம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்டிருந்தவன். மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்களிலும் இடையிடையே திருக்குறட்கவிகள் விரவியிருப்பதைப் பார்க்கிறோம். சங்கப் புலவர்களும் திருக்குறளுக்குச் சாற்றுகவிகள் கொடுத்திருக்கின்றனர். மேற்கூறியவற்றைக்கொண்டு ஒருவாறு திருவள்ளுவர்காலம் 2000 வருடத்திற்குட்பட்டதென்று கூறலாம்.

திருவள்ளுவ நாயனாரவர்களுடைய திருக்குறளைப் படித்துப்பார்ப்போம். படிக்குங்கால் இவருடைய மனோநிலை எத்தகையதென்பது புலப்படும். இத்தகைய மாண்புடைய மனோநிலையையுடைய ஒருவர் வள்ளுவர்குலத்தைச் சேர்ந்தவ ரென்பது பொருந்தாது. அரசியல்முறை, இராஜதந்திரம் யாவும் நன்குணர்ந்தவரென்பது திருக்குறள்மூலமாய் வெளியாகின்றது. ஆகையால் இவர் அரசனுக்கு ஓர் மந்திரியாய் அல்லது வேறு ஓர் அலுவலாளராயமர்ந்திருக்கவேண்டுமென்றும் நினைக்கலாம்.

தொடக்கத்தில் நாம் திருக்குறளைப் படிக்கும்போது பொருள் வெளிப்படையாய்த் தோன்றாது கரடுமுரடாயிருக்கும். ஆனால் மேலும் மேலும் வாசிக்க வாசிக்கப் பொருள் விளங்கும். சிலர் திருவள்ளுவர் ஆரியருடைய நூல்களிலிருந்து திருக்குறளுக்குப் பொருள் சேகரித்தாரென்று கூறுவர். ஆனால் இக் கூற்றுக்குப் போதிய ஆதாரங்கிடையாது. மக்களின் இயற்கை முழுவதையும் செப்பமாக அளந்துகண்ட மனோநிலையையுடையவரே திருவள்ளுவராவர். சாதாரணமாய் நாம் ஓர் விஷயத்தை எடுத்தாளும்போது, எடுத்தவிஷயத்தை விடுத்துப் புறஞ்செல்லும் (digress) வழக்கத்தை யுடையவரா யிருக்கின்றோம். ஆனால் எமது நாயனாரவர்களோ ஓர் விஷயத்தை எடுத்தாளும்போது புறஞ்செல்லாது நன்றாய் விளங்கியே அப்புறம்செல்வர். எமது நாட்டின்கண் விளங்கிய பெரியாருக்குள் திருமூலநாயனாரவர்களின் மனோநிலை திருவள்ளுவர்க்கிருக்கவேண்டும். புறநாட்டின் பெரியாருக்குள் "பிரான்ஸிஸ்பேக்கன்" (Francis Bacon) என்பவருடைய மனோநிலையிலிருந்திருக்கவேண்டும்,

தமிழ்நாட்டவர்க்கு நுண்மையான கூரிய மனோசக்தி உண்டு. "ராமானுஜம்" (Ramanujam) என்பவர் இயற்கையில் ஓர் கணித நிபுணர். இவ்வகையான சக்தி இக்காலத்தில் அருகிவிட்டது. இப்பொழுது கணித நூல்களைக் கற்பதற்குச் சர்வகலாசாலைக்கே செல்லவேண்டும். சித்தாந்த சாஸ்திரங்களை உண்டுபண்ணிய தமிழ் நாட்டாரின் மனோநிலை எப்படிப்பட்டதாயிருக்கவேண்டும்! அதிசய மனோசக்தி (Prodigy) வாய்ந்தவர் அனேகர் தென்னிந்தியாவிற் றோன்றுகின்றனர். உண்மையான அதிசயமனோசக்திவாய்ந்தவரே திருவள்ளுவராவர்.

எமதுவாழ்விலே சந்திக்கும் ஒவ்வோர் சந்தர்ப்பத்திலும் திருக்குறட் கவிகளை எடுத்தாளலாம். உதாரணமாக எனது மாதுலர் ஒருவர் ஒவ்வோர் விஷயத்திலும் திருக்குறளை எடுத்து ஆதாரமாய்க்கூறுவர். தெய்வ வணக்கத்தைப்பற்றிய கதை உண்டுபட்டுவிட்டதில் "கற்றதனாலாயபய னென்கொல்வாலறிவன், நற்றாடொழாரெனின்" என்பர். பிள்ளைவளர்ப்பைக்குறித்துப் பேசுமிடத்தில் "தந்தை மகற்காற்று முதவி யவையத்து, முந்தியிருப்பச் செயல்" என்பர். இங்ஙனமே ஒவ்வோர் சந்தர்ப்பத்திலும் "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க வதற்குத் தக" என்றும், "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று" என்றும் பல கவிகளை யெடுத்துப் பலவிஷயங்களிற் கூறுவர். அவர் இவற்றை யெடுத்தாளுங் காலத்தில் நாம் சிறுவரா யிருந்தமையாற் பொருள் விளங்காது திகைத்தனம். ஆனால் வளர்ந்தபின் திருக்குறணூலையும் ஒருசிறிது கற்றதின் மேலே அவருடைய கவிகளின் பொருணலத்தை மெச்சக்கூடியதா யிருக்கின்றது. பரிமேலழக ருரையோடு திருக்குறளைப் படிப்பவர் மனங்களின் மகிழ்ச்சிக்களவேது!

பழைய நூல்களின் கருத்துக்கள் காலத்துக்குக் காலம் வாசிப்பவர் மனோநிலைக்கேற்பவும் காலபேதவியல்பிற்கேற்கவும் மாறுபடுகின்றன. உதாரணமாய், மனுஸ்மிருதியிற் கூறப்பட்டவை யாவும் எக்காலங்களிலும் பொருத்தமுள்ளனவாய்க் காணப்படவில்லை. விவிலிய நூலோரும் காலத்துக்குக்காலம் தமது நூலின் கருத்துக்களை மாற்றுகின்றனர். இங்ஙனமே அனேக பண்டைக்காலத்து நூல்களின் கருத்துக்கள் வாசிப்பவர் மனோநிலைக்கேற்ப மாறுபடுவது வழக்கமாயிருக்கின்றது. எமேஷன்ஸ் எசேயிஸ் (Emerson's Essays) என்றோர் நூல் இருக்கின்றது. இந்நூலின் ஒவ்வோர் வசனமும் வாசிப்பவருடைய மனோநிலைக்கேற்ற பொருளைக் கொடுப்பதை நான் பார்த்திருக்கின்றேன். ஆனால் திருக்குறட் கருத்துக்கள் மனோநிலைக்கும் காலபேத வியல்பிற்கும் ஏற்றவாறு மாறுபடாது நிலைநின் றோங்குமெனபதிற் சந்தேகமில்லை. இதனாலேயே திருவள்ளுவநாயனாரைத் தெய்வப்புலவரென்று மழைப்பரென்க.

நிற்க இற்றைநாள் எமது நாயனார் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைப்பதற்கா யெண்ணியிருந்தும், உமது நோக்கம் நிறைவேறாததைக் குறித்து யான் பெரிதும் வருத்தமடைகின்றேன். திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடும் உமது ஆர்வத்தையும் மெச்சுகின்றேன். திருக்குறளை யாவரும் நன்றாய்க் கற்கவேண்டுமென்றும் வற்புறுத்தி எனது உரையை முடிக்கின்றேன்.

# அருணோதயம் அல்லது சிம்மக்கொடி

பத்தாவது அத்தியாயம்.

## துன்பமும் இன்பமும் தோழமை ஆழமும்.

ஏமாற்றத்தால் ஏற்பட்ட விசனமும் நாணத்தால் உண்டான சஞ்சலமும், ரஞ்சிதமலரின் மனதைஇடித்துக் கரைத்துவிட்டன. அவள் தலை கீழ்நோக்கியவண்ண மிருந்தது. மாசிலாமணியும், அவர் மனைவியும் தவமணியும், கேட்ட கேள்விகளுக்கு ஒரு பதில் சொல்வதற்குக்கூட அவள் நாவெழவில்லை. அவள் நேத்திரங்களிலிருந்து வெப்பமான நீர்த்திவலைகள் ஒன்றன்பின்னொன்றாய் உதிர்ந்தன. அம்மூவருக்கும் அவள் கோலத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. கடைசியாய் தவமணி அவளையணைத்துப்பிடித்து மெல்ல நடத்திக்கொண்டு அவளின் சயனவறைக்குச் சென்றனள். மாசிலாமணியும் மனைவியும் கொஞ்ச நேரம்வரையில் அவ்வறையிலிருந்துவிட்டு அவளைத்தொந்தரவுசெய்ய மனமற்றவர்களாய் வெளியேகினர். ரஞ்சிதமலரின் சஞ்சலகோலம் அவர்களையும் பாதியாதிருக்கவில்லை. அவர்கள் சென்றவுடன், குனிந்தபடியிருந்த அவள் தலையை, தவமணி அன்போடு மெதுவாய் நிமிர்த்தி அவள் வதனத்தை வாதசல்யத்தோடு தடவிக்கொடுத்து, "என் உயிருக்குயிரான ரஞ்சிதம்! விசாரங்குடிகொண்ட உனதினிய வதனத்தைப்பார்க்க எனக்குச் சகிக்கவில்லை. உன்னை இழந்து இவ்வளவு காலமும் நான் வருந்தித் தவித்தது போதாதென்று, மேலும் மேலும் எனக்கு வருத்தத்தையுண்டாக்குவது உண்மைச்சிநேகிதியான உனக்குமுறையா? இது தருமமா? கொவ்வம்பழம்போன்ற உவ் வதரங்களைத்திறந்து ஓரினியசொல், வழக்கமான உனது கிள்ளைமொழிகளால் பகர்ந்து எனக்கு உவகையளிக்கமாட்டாயா? புன்னகாதேவியை ஆவாகனம்பண்ணி, அவளை உனது முகாரவிந்தத்தில் தவழவிட்டு என்னை மகிழ்விக்க மாட்டாயா?" என்று உருக்கமாயும் பரிதாபகரமாயும் வினவி அவளை உற்றுநோக்கியபடியிருந்தாள். தவமணியின் கண்களும் முத்துக்களைப்போன்ற நீர்ச்சொட்டுகளைக் கொட்டின. அவளது கண்ணீரை ரஞ்சிதமலர் துடைத்துவிட்டு அவளைநோக்கி, அன்பே வடிவு கொண்ட எனதாருயிர் மணீ! நானுனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறேனென்பதைப்பற்றி எனக்குத்தெரிகிறது. நான் வேணுமென்று உனது தயாள மனதை வருத்தவில்லையென்பதை நீயே அறிந்துகொண்டிருப்பாய். நானடைந்த துன்பங்கள் அநேகம். அவைகளிலிருந்து அந்த மனிதரால் நான் கரையேறியது எனக்கும் உனக்கும் ஆனந்தமான செய்திதான். எதையும் உனக்கு மறைத்துப் பேசுவதற்கு என்னால் முடியாது. அம்மனிதர்மேல் நான் என்றும் அறியாத ஒரு புது உணர்ச்சியின் பாசம் எனக்கேற்பட்டு அது என்னை அடியோடு ஆட்கொண்டுவிட்டது. என் காதலை நான் வெளிப்படுத்தியும் அவரதைக் கவனியாமல் அசட்டையாய் என்னைக் கைவிட்டு மறைந்துவிட்டார். எனது நன்றியைத்தானும் சரியானபடி கூறுவதற்கு முடியாதபடி சடுதியில் ஓடிவிட்டார். ஆகவே என் மனம் அந்தகாரத்தால் கவியப்பெற்றிருக்கிறது. தவம்! உனது அன்பும் ஆறுதலுமில்லாவிடில் எனக்கு அதே விநாடியில் பைத்தியம் பிடித்திருக்கும். என் மனவருத்தத்தையிட்டு நீ விசனப்படுவதில் பயனில்லை. இவ் வியாகுலக் கடலிலிருந்து நான் கரையேறும்படி செய்ய வல்லார் யார்? என்று கலவரத்தோடுமொழிந்தனள்.

அவள் வார்த்தைகளைக்கேட்ட தவமணி அவளுடன் தமாஷாய்ப்பேசி அவளைச் சற்றுவது சந்தோஷப்படுத்தக்கருதி "ஓகோ! இதுவாசெய்தி? நமது கூட்டாளிக்கு எண்ணந்தொட்டுவிட்டது! இனிமேல் நம்மையுங் கவனித்தபாடில்லை, எட்டுப் பத்து வருடகாலமாய் எங்களுக்குள் ஏற்பட்டு வளர்ந்துகொண்டேவந்த அந்த உறுதியான நட்பிலும்பார்க்க ஒருநாளையில் ஏற்பட்ட பாசம் பெரிதும் வலிமையுடையதா யிருக்கின்றதே! மலர்! நமக்கும் இதுவிஷயம் ஏற்கனவே விளங்கிவிட்டது. நீ கவலைப் படவேண்டாம். மனம்போன வாழ்வில் நீ வைக்கப்படுவாய். ஆனால் என்னைமாத்திரம் மறந்துவிடாதே" என்று குலுங்கக் குலுங்க விளையாட்டாக நகைத்தாள். ரஞ்சிதமலரின் வாயிலிருந்து வெகு கஷ்டத்துடன் புன்னகைபருப்பியது. அதேசமையத்தில் அருமைநாயகத்தையும் மனைவியையு மழைத்துக்கொண்டு மாசிலாமணியும் மனைவியும் அறைக்குட்பிரவேசித்தனர். தவமணியும் ரஞ்சிதமலரும் சிரித்துப் பேசியவண்ணமிருந்ததைக்கண்ட அவர்களுக்கு அதிக மகிழ்ச்சியேற்பட்டது. யாவரும் அவர்கள்முன்சென்று நாற்காலிகளிலமர்ந்தனர். புன்னகாதேவி அவர்கள் அதரமத்திகளிலிருந்து வெளிவந்துகொண்டிருந்தனள். ரஞ்சிதமலரும் வெகு பிரயாசையோடு நகைமுகந் தோற்றுவித்தவளாய் அவர்களுக்கு மரியாதைசெய்து உபசரித்தாள். அவள் விமலவிலாசைவிட்டுப் புறப்படவேண்டி யேற்பட்ட காரணத்தை விபரமா யறிந்துகொள்ள விரும்பிய அவர்கள் யாவருக்கும் ரஞ்சிதமலர் யாவையும் ஆதிதொட்டு அந்தம்வரையும் விபரமா யெடுத்துக் கூறினள். அவர்கள் அவ்விபரங்களை யறிந்து ஆச்சரியமும் கிலேசமும் ஆனந்தமுமடைந்தார்கள். அவளின் பத்தி விசுவாசத்தை மெச்சிப் புகழ்ந்தனர். ஆனால் அருணகிரி ராஜாவும் தாயும் உயிரோடிருக்கிறார்களென்று சொப்பனத்தில் அவளுக்கு அறிவிக்கப்பட்டதைமாத்திரம் அவர்கள் மனம் அடியோடு நம்பவில்லை. ஆனால் தவமணிமாத்திரம் தனக்குள் சிந்திக்கலானாள். (தொடரும்)

சிட்டுக்குருவி சத்தினால் செய்யப்பெற்ற
மின்சார லேகியம்
சாப்பிடுங்கள்
ஒரேவேளையில் குணந்தரும்
48 நாள் டின் 1க்கு ரூபா 5-0-0. வி. பி. வேறு
இனம்! — வியாபாரிகள் பரீட்சிக்க சாம்பிள் டின் இனம்!
எஸ். முகம்மது யூசுபு வைத்தியசாலை,
பரங்கிப்பேட்டை, (Porto Novo.)
கொழும்பு ஏசண்டு:
ச. இ. காதர் மெய்தீன், 39, ஓல்ட் பிட்சர்ஸ் ஸ்ரீட், கொழும்பு.
[(10) 14-7-35—12]

## மரணத்தை என்றும் திரணமா யெண்ணு.

—:o:—

(தெல்லிப்பழை, திரு. கா. சின்னப்பா அவர்கள்.)

நிலைமண்டல ஆசிரியப்பா

எவ்வகைப்பிறப்பினு மெழிலுறுபிறவியெ
ன்றிவ்வையகத்தோரியம்பிடும்பிறவியாம்
மானிடப்பிறவியை மாண்புறப்பெற்று
நானிலந்தன்னில் நலிவுறச்செய்யும்
பயம்பலவருத்தநாம் பதைத்திட்டாலும்
இயம்பொணுக்கலக்கம் ஈந்திடும்பயமாய்
நினைக்கவும்விரும்பா நிலைதனையளித்து
மனதினைவருத்தும் மரணபயத்தை
முற்றுமொழித்து மூழுமனதோடும்
கற்றோர்மனதைக் கவர்ந்திடுமீசனை
என்றுந்துதித்து இன்புற்றிருந்திடில்
பொன்றுங்காலம் பொருந்திடும்போது
புன்சிரிப்புடனே பூமியிலுள்ள
அன்புபாராட்டிய அனைவருங்காண
எம்முடல்நீக்கி இறைவனையடைந்து
இம்மையிலனுபவ மெல்லாம்மறந்து
ஞானிகள்விரும்பும் நற்கதிதன்னை
வானவர்வாழ்த்த மாண்புடனடையலாம்
இந்நிலைவிரும்பா திருப்பவரெவரும்
எந்நிலைதனி லென்றுமிருப்ப
ரென்பதையெவரும் எளிதிலுணர்ந்து
அன்புடனவர்க்கு அரியநற்போதனை
செய்துமேமரணம் சீவியமுடிவாய்
எய்துமோர்நிலையா மெவர்க்குமிருப்பதால்
பயந்துநாமடையுப் பயனிலையாதலால்
வியந்துவிண்ணோரும் மெச்சிடத்தக்கதாய்
எந்தநேரமும் எவ்விடத்தாயினும்
சிந்தையெம்பிரானின் சீர்கழல்தன்னைப்
பற்றியிருக்கும் பான்மையைப்பெற்றுப்
பெற்றோருற்றோர் பெருந்துணைபுரிவோர்
கற்றோர்மற்றோர் காதலைப்பெற்றோர்
சுற்றும்புறங்களிற் சூழவிருப்போர்
ஆகியபலரையும் அறவேமறந்து
சாதிபேதச் சண்டையும்விடுத்து
இப்பாரதனில் எழிலுறுபொருளெனத்
தப்பெண்ணத்தால் தாவிப்பிடித்துப்
பற்றினைப்பெருக்கிப் பாசத்தமிழ்த்தும்
சற்றும்நிலையிலாத் தகைமைபொருந்திய
அனைத்தையும்விட்டு அகமும்புறமும்
தினைத்துணையேனும் தீவினையதையும்
பற்றிடாதிருந்து பரகதிதன்னைப்
பெற்றுப்பெறற்கரும் பேரின்பமதனை
அல்லும்பகலு மடைந்திடவிரும்பின்
சொல்லருநன்மை சுகித்துவாழ்ந்திடுவோம்.
மரணபயமென மாந்தர்நினைப்பதைத்
திரணமாயெண்ணிடச் சிவபெருமானின்
திருவருளன்றிநற் றிவ்வியசாதனம்
அரிதெனபதனை அனைவருமறிந்து
இரவும்பகலு மிறைவனதருளைப்
பரகதிசேர்க்கும் பகாருமவுடதம்
எனவேயறிந்து இன்புடன்பெற்றுக்
கனவிலுமீசனைக் கருத்திலிருத்திட
எல்லாஇன்பமும் எய்திநாம்வாழ்ந்து
பொல்லாதெனநாம் புகன்றிடுமரணமும்
ஜெயமுடன்வாழ்ந்து சீவியமுடிவினில்
பயமிலாதடையும் பான்மைவாய்ந்த
நிலையொன்றென்பதை நிச்சயமாக
மலைவிலாதுணர்ந்து மகிழ்வுற்றிடுவோம்.
உண்மைப்பக்தி யுள்ளஎவர்க்கும்
நன்மையையென்றும் நாடுபவர்க்கும்
புன்மையையொழிக்கும் பொறுமையாளர்க்கும்
காந்தியைப்போன்ற கனவான்களுக்கும்
சாந்தியைப்பெற்ற சற்சனர்தமக்கும்
தாகூர்போன்ற தவப்பெரியார்க்கும்
தேகந்தரும்பெனும் திடமுடையோர்க்கும்
மரணபயமேன் மனதிலிருக்கும்?
ஆனந்தமடைந்த அன்பருக்கேன்பயம்?
பயம்பாவிகளைப் பற்றிடுமன்றிச்
சுபநன்மைகருதாத் தூயரைமரணம்
துன்புறச்செய்து துஷ்டரைப்போல
இன்பங்கெடுப்பதை எவருமறியார்.
ஆதலாலிறைவனை அனுதினமுநாம்
பேதமையகற்றிப் பெருமையைவிடுத்து
அன்புடனர்ச்சித் தவனருள்பெற்று
இன்புடன்சீவித் தெவ்விதபயமும்
இன்றியிப்பிறவியோ டினிப்பிறவாது
பொன்றிடுங்காலம் புன்சிரிப்போடு
ஈசனைப்பற்றி யிரண்டறக்கலந்து
பேசருமின்புடன் பெருங்கதிபெற்று
மரணமோர்பயமிலா மானிடர்சீவியத்
தரியவோர்முடிவென அறிவுளோரறைந்த
பேருண்மைதன்னைப் பிறர்க்கறிவித்து
யாரும்போற்றிட நாமுய்வோமே.

---

## வலிகாமம் வடக்கு வாலிபர் சங்கம்.

ஷெ சங்கத்தின் காரிய நிர்வாக சபைக்கூட்டமொன்று ஆடித்திங்கள் 6-ந்திகதி (21-7-35) திரு. S. சுவாமிநாதன் B. A அவர்களின் தலைமையில் சுன்னுகம் சிவன் கோயில் வீதியில் கூடிப் பின்வரும் விஷயங்களைப்பற்றிப் பகிரங்கக்கூட்டங்கள்மூலம் கிராமத்தவர்களுக்கு அறிவு புகட்டவேண்டுமெனத் தீர்மானித்தது.

1. மாவரியினுல் கருப்பநீர் இறக்குதல் பங்கமடைந்திருக்கிறதென்பது.

2. இந்நாளில் குற்றங்கள் அதிகப்படுவதற்குரிய காரணங்கள் இன்னனவென்பது.

3. ஐக்கிய புகையிலை வியாபாரச்சங்கம் கிராமத்தவர்க்கு நன்மைசெய்யும் நோக்கமாகவே ஆரம்பிக்கப்பட்டதென்பது.

4. கிராமவாசிகள் உபயோகிக்கும் உணவுமுறையே நோயுண்டாவதற்குச் சாதகமாயிருக்கிறதென்பது. —கடித.

---

## Notice of Sale

### விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 5412 ம் இலக்க வழக்கில் 1935 ம் ஹு ஆடிமீ 18 ம் திகதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1935 ம் ஹு ஆவணிமீ 19 ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 8-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

இறந்தது புலோலி கிழக்கு பிறக்றர் சின்னத்தம்பி-சுப்பிரமணியம்

வழக்காளி

காலஞ்சென்ற பிறக்றர் சின்னத்தம்பி-சுப்பிரமணியத்தின் தத்துவகாரன் புலோலிகிழக்கு(1)க கந்தையா-கனகசபை

(2) ஷெயூர் சின்னத்தம்பி சுப்பிரமணியம் கைம்பெண் கற்பகப்பிள்ளை

பதில் வழக்காளிகள்

தனக்காரக்குறிச்சி (1) முருகுப்பிள்ளை அல்லது முருகர்-சின்னத்தம்பியும் (2) பெண் சின்னச்சியும்

எதிராளிகள்

ஆதனங்கள்

(1) தனக்காரக்குறிச்சியிறை வண்ணன்குருக்காடு வீடு 1. ஷெ நிலப்பரப்பு $10\frac{1}{8}$ கூடிய நிலப்பரப்பு 11 குளி $8\frac{1}{4}$. எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, வடக்கு பின்னுற்காணும் 2-ம் ஆதனம். மேற்கு வழக்காளிக்கும் கதிரிப்பிள்ளை பெண் பாறுபதிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் சொரியலாய் எழுபதிலொரு பங்கும்.

(2) ஷெயிறை வண்ணன்குருக்காடு வடக்கு நிலப்பரப்பு $5\frac{5}{8}$. வண்ணன்குருக்காடு நிலப்பரப்பு $1\frac{1}{2}$ கூடிய நிலப்பரப்பு $7\frac{1}{8}$. எல்லை கிழக்கு ஒழுங்கையும் பின்னுற்காணும் 3-ம் ஆதனமும், வடக்கு பின்னுற்காணும் 3-ம் ஆதனமும் திசவீரசிங்கம்பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனமும், மேற்கு வழக்காளிக்குரிய தில்லாவளை என்னுமாதனம், தெற்கு மேற்சொல்லிய 1-ம் ஆதனமும் ஒழுங்கையும். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் சொரியலாய் எழுபதிலொரு பங்கும்.

(3) ஷெ இறை வண்ணன்குருக்காடு நிலப்பரப்பு $3\frac{1}{2}$. எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கும் தெற்கும் மேற்சொல்லிய 2-ம் ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் சொரியலாய் முப்பத்தைந்தில் இரண்டு பங்கும்.

(4) ஷெ இறை குமாரிங்கன் சத்திருந்தை நிலப்பரப்பு 18. ஷெ புதுவயல் நிலப்பரப்பு 27. குமாரிங்கன் சத்திருந்தை நிலப்பரப்பு $27\frac{1}{4}$ கூடிய நிலப்பரப்பு $72\frac{1}{4}$. எல்லை கிழக்கு சின்னத்தம்பி சுப்பிராயத்தின் பிள்ளைகளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு வீரகத்தி செல்லப்பாவின் பிள்ளைகளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு ஆழ்வார் பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு வழக்காளிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் சொரியலாய் முப்பத்தைந்தில் இரண்டு பங்கும்.

(5) உடுப்பிட்டி இமையாணன் குறிச்சியிறை மிழுதபிட்டி கிழக்கு நெற்பரப்பு 162. இதில் மேற்கரைவாசிக்கு நெற்பரப்பு 81. எல்லை கிழக்கு முழுக்காணியின் கிழக்கரைவாசி நிலம். வடக்கு அப்பாத்துரை இளையதம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு கந்தர் மகள் சின்னச்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் தரிசு நிலமும். தெற்கு வேலுப்பிள்ளை பெண் சிதேவனுக்கும்மறுபேருக்குமுரியஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் சொரியலாய் முப்பத்தைந்தில் இரண்டு பங்கும்.

(6) தனக்காறக்குறிச்சியிறை கழுதைப்புலம் நிலப்பரப்பு 21. எல்லை கிழக்கும் வடக்கும் தெற்கும் ஒழுங்கை. மேற்கு ஒழுங்கையும் வல்லியப்பா வேலுப்பிள்ளைக்குடைய ஆதனமும். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் சொரியலாய் நூற்றைந்தில் பன்னிரண்டு பங்கும்.

(7) ஷெ இறை ஆவிளாத்தோட்டம் நிலப்பரப்பு 21. ஷெ நிலப்பரப்பு $3\frac{1}{2}$. இவைகளில் கிழக்கரைவாசியில் ஆட்சிப்படி தெற்குப்புறமாக $\frac{1}{4}$ பங்குக்கு நிலப்பரப்பு 5. எல்லை கிழக்கு வீரகத்தி பெண் பொன்னம்மாவுக்குடைய ஆதனம், வடக்கு வழக்காளிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்குக் கதிரிப்பிள்ளை பெண் சிதேவனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு சின்னத்தம்பி மகள் பொன்னுச்சிக்குரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் நிலம் பனைகள் வடலிகள் மாக்கள் வேம்புகள் பொட்டில் வீடுகள் அடங்கலும்,

(8) ஷெ இறை ஆவரமதலாவை நிலப்பரப்பு $7\frac{3}{4}$. எல்லை, கிழக்கு ஆறுமுகம் தம்பையாவுக்கும் மறுபேருககுமுடைய ஆதனம். வடக்கு ஆறுமுகம் வீரகத்திக்கும மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு தெரு. தெற்கு றோட்டு. இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் இலுப்பைகள் வேம்புகள் புளியமரம் நாவல் முழுவதும்.

(9) ஷெ இறை பேயமருதன் வயல் நெற்பரப்பு 29. எல்லை, கிழக்கு இளையதம்பி பெண் அன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு குளம். மேறகு வல்லியப்பா கைம்பெண் சிதேவனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு கதிரிப்பிள்ளை பெண் மாணிக்கத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும்.

புலோலிமேற்கு பருத்தித்துறை 19-7-35. — து. வே. நாகலிங்கம், கொம்மிஷனர்.

(17) 4-8-35. 1

---


## ஜோதிட விளம்பரம்

ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர்
தங்கள் தங்கள் இஷ்டப்படி
சுத்தமாகவும் சீக்கிரமாகவும் செய்வித்துக்கொள்ளலாம்.

கிரகஸ்புடம், பாவஸ்புடம், தசவர்க்கம், அஷ்டவர்க்கம், கிரகசமயம், கிரகபலன், அஷ்டவர்க்கபலனும், காலதெசை, பிராணதெசை, சீவதெசை, மனோதெசை, மிருத்துதெசை, இவைகளும், மகாதெசை அந்தரபலனுக எழுதியுங் கொடுப்பதற்கு ரூபா 60
ஷெ ஒருதெசைக்கு அந்தரபலனும் மிகுதி புத்திபலனுமெழுத ரூ. 35.
ஐந்துவருஷ அந்தரபலனும் மிகுதி புத்திபலனும் எழுத ரூபா 10.
முற்றும் புத்திபலனும் சுருக்கமான பிறபலன்களும் எழுத ரூபா 5.
குறிப்பு எழுத ரூபா 1. விவாகப் பொருத்தம் பார்க்க ரூபா 2.

கோவில், வீடு, கிணறு முதலிய கிருகசம்பந்தமான கருமங்களும் எம்மிடம் செய்வித்துக்கொள்ளலாம்.

ஜாதகம், குறிப்பு, ரேகை முதலியனமூலம் தற்காலம் நடக்கும் பலாபலன் அறிய விரும்புவோர் ரூபா 1 கொடுத்தல்வேண்டும்.

☞ ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர் பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, நேரம், ஆண், பெண் முதலியவற்றின் சரியான விபரத்துடன் மேற்காட்டிய விகிதத்திற் பாதி முற்பணமாக அனுப்பவேண்டும்.

K. Vaithilingam, Astrologer, Urelu, Jaffna.


க. வைத்தியலிங்கம், சோதிடர், ஊரெழு, சுன்னுகம், யாழ்ப்பாணம்.

(188) 9-9-34



## எல்லோரும்

நட்க்ஷத்திர (ஸ்ட்டார்) அடையாளமுள்ள உருக்கினுற் தயாரிக்கப்பெற்ற





(ரிஜிஸ்டெர் செய்யப்பட்டது)

பாத்திரங்களையே
வாங்குகிருர்கள்

இதனை வாங்குவது:

இதன் பெயருக்கும் மதிப்புக்குமன்று. ஆனுல்,

இதன் நெடுங்காலப் பாவிப்புக்கும்
உயர்தரமான வேலைப்பாட்டிற்குமே!!

இலங்கையில் எவ்விடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா விதமான இரும்பு, பித்தளைச்சாமான்களும் ஜர்மன் உள்ளூர் கைவாளிகளும், கேத்தல், தோசைக்கல் முதலிய மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும். விலை சகாயம்.

இறக்குமதி தனி ஆட்களும் வியாபாரிகளும்:
அ. மு. சீ. சீனிமுகம்மது தம்பி அன் பிறதர்ஸ்,
122, மூன்றும் குறுக்குத்தெரு,
கொழும்பு.

(178) 5-8-34—8-35.

Registered as a Newspaper. 16 Pages


# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED — BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 4th August 1935, Sunday. { No: 5


## பவுண்மார்க் ஓடுகள்



இப்பொழுதும் விசேடமாக மதிப்புப்பெறும் பவுண்மார்க் ஓடுகள் இவைகளே.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும்போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். **பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.**

இங்ஙனம்

### சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை
} சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை

ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

## திருநெல்வேலி ஒற்றுமைநிதி

(வரைவுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 500,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி ரூ. **25ம் ஆதாயமும் பெறலாம்.**

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்

**கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.**

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்

ஆதலால்

முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்

**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்

உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும் சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்

வ. சோமசுந்தரம், காரியாதிகாரி.

(203) 18-11-34—11-35

## பவளகாந்தன் அல்லது கேசரிவிஜயம்

குறைந்த விலை! நிறைந்த பொருள்!

17 அத்தியாயங்கள் 550 பக்கங்கள்

**விலை ரூபா 2.**

தனலக்குமி புத்தகசாலை

சுன்னாகம்

## அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி

**THE LANKA BENEFIT CO.,**

**GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.**

தலைமைக் காரியாலயம்:
பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:
சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | 4-ம் | வகு. | 1000/- | ரூபா | 40/- | ரூபா | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | 8-ம் | ,, | 500/- | ,, | 20/- | ,, | ,, | 25 | ,, |
| C | 12-ம் | ,, | 250/- | ,, | 10/- | ,, | ,, | 25 | ,, |
| D | 7-ம் | ,, | 125/- | ,, | 5/- | ,, | ,, | 25 | ,, |
| BMC | 2-ம் | ,, | 250/- | ,, | 10/- | ,, | ,, | 12½ | ,, |
| WC | 3-ம் | ,, | 250/- | ,, | 5/- | ,, | ,, | 50 | கிழமைகட்கு |
| WD | 4 | ,, | 125/- | ,, | 5/- | ,, | ,, | 25 | ,, |
| தினசரி | 6&7ம் | ,, | 100/- | ,, | 1/- | ,, | ,, | | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.

மனேஜர், அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அநேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திர மல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப் படுத்தினோம்.

இது சாலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதாருசாலாமுஸ்லி, சப்பேமூத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவானி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரக் பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்க வாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா. 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தபாற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினங்கு, முதலிய தொலைவாய் ராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணியார்டர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P. O. Batticaloa, Ceylon

(25) 21-1-34.


இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டி தெற்கு "திருமகள் நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி" யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1935-ம் ௵ ஆகஸ்ட்மீ 4-ந் ௳ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.